

வருடாந்த அறிக்கை

2021

இலங்கை மின்சார சபை

தேசத்திற்கு சக்தியூட்டுதல்

வருடாந்த அறிக்கை 2021

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

ஒரு ஒளிமயமான எதிர்காலத்திற்கான
தூரநோக்கங்களை முழுமையாக அடைவதில்
ஆர்வமாகவும் ஆவலாகவும் உள்ள எமது நாட்டு
மக்களுடன் இணைந்து பொதுமக்கள் பங்கேற்புடன்
கொள்கை மாற்றங்களை இலகுபடுத்துவதன் ஊடாக
மின்சாரம், நீர்சார்ந்த சேவைகள் மற்றும்
பெற்றோலியம் சார்ந்த கைத்தொழில்கள் என்பவற்றை
மேம்படுத்தும் பணியில் ஒரு தேசத்திற்கான
அர்ப்பணிப்புடன் குறித்த திறைமுறைத்
திட்டங்களுக்கு அப்பால் சென்று குறித்த
இலக்குகளை அடைவதில் துல்லியமான ஒரு
தேசத்தின் கனவுகளை நனவாக்க இலங்கைப்
பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்ற ரீதியில்
நாம் பாடுபடுகின்றோம்.

தேசத்திற்கு சக்தியூட்டுதல்

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (ஆணைக்குழு அல்லது இபொபஆ) மின்சாரக் கைத்தொழிலின் பொருளாதார, பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஒழுங்குறுத்துகை அமைப்பு என அழைக்கப்படுகின்றது. இந்த ஆணைக்குழு உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தையின் மறைமுக ஒழுங்குறுத்துகை அமைப்பாகவும் தொழிற்படுகின்றது.

இலங்கைப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு (இபொபஆ) மின்சாரம், நீர்சார்ந்த சேவைகள் மற்றும் பெற்றோலியம் ஆகிய கைத்தொழில்களை ஒழுங்குறுத்தும் விடயப்பணி குறித்தொதுக்கப்பட்டுள்ளது. இபொபஆ இன் குறிக்கோள்களும், தொழிற்பாடுகளும் மற்றும் சட்ட வரையறைகளும் அதன் 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்திலும், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்திலும் மற்றும் 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தல்) சட்டத்திலும் விவரிக்கப்பட்டுள்ளன.

19 ஆண்டுகளாக, இபொபஆ இலங்கையில் மின்சாரக் கைத்தொழிலின் மேம்பாட்டிற்கு அவசியமான அதுவும் இறுதியாக பொதுமக்கள் அடங்கலாக மின்சார நுகர்வோருக்கு நன்மையளிக்கக்கூடிய ஒழுங்குறுத்துகை பொறிமுறைகளை உருவாக்கியுள்ளது. இபொபஆ மின்சார உற்பத்தியையும், மின்சார செலுத்துகையையும் மின்சார விநியோகத்தையும் மற்றும் மின்சாரப் பாவனையையும் ஒழுங்குறுத்துகின்றது. எமது ஆணைக்குழு வழங்கும் பல முக்கியமான சேவைகளுக்கு மத்தியில், மின்சக்தித் துறை போதிய முதலீடுகளையும், பாரியளவான மின்சாரக் கிடைப்புத் தன்மையையும், வினைத்திறன் வாய்ந்த மின்சார விநியோகத்தையும் மற்றும் மின்சார நுகர்வோருக்கு மேம்பட்ட தரமான மின்சார சேவைகளையும் கொண்டுள்ளது என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

இபொபஆ நீர்சார்ந்த சேவைகளையும் மற்றும் பெற்றோலியக் கைத்தொழில்களையும் நெருங்கி கண்காணித்து அந்த சேவைகளில் சம்பந்தப்படும் அக்கறையுடைய தரப்புகளுடன் இணைந்து தொழிற்படுகின்றது. இந்த ஆணைக்குழு அந்த இரண்டு கைத்தொழில்களையும் ஒழுங்குறுத்துவதற்கு பாராளுமன்றத்தின் ஊடாக அந்தந்த சட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் ஒழுங்குறுத்துகை சார்ந்த ஆலோசனைகளையும் வழங்குகின்றது.

மேலும் எமது ஆணைக்குழு ஒருபடி நகர்ந்து, தனது அனைத்து அக்கறையுடைய தரப்புகளுக்கும் சிறந்த சேவையை வழங்குவதற்கான எண்ணத்தில் தனது நிருவாக மற்றும் புத்தாக்க அணுகுமுறையை மேன்நிலைப்படுத்தி அத்தகைய தனது அனைத்து அக்கறையுடைய தரப்புகளுக்கும் ஒழுங்குறுத்துகைப் பொறிமுறையின் ஊடாக மதிப்பு சேர்க்க தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் தொழிற்பட்டு வருகின்றது.

உள்ளடக்கம்

தலைவரின் செய்தி 5

எம்மை பற்றி 6

கூட்டிணைந்த தகவல்கள் 7

ஆணைக்குழு உறுப்பினர்கள் 8

எம்மை உந்தும் சக்திகள் 9

எமது தூரநோக்கு 9

எமது செயற்பணி 9

இபொபஆ இன் தொழிற்பாடுகள் 10

பலன்களுக்கான எமது குறிக்கோள்கள் - மின்சாரக் கைத்தொழில் 10

வெளியீடுகளுக்கான எமது குறிக்கோள்கள் 11

அறிக்கை பற்றிய அறிமுகம் 13

மின்சாரக் கைத்தொழில் 14

பலன் 02 - மின்சார நுகர்வோருக்கு சுமக்கக்கூடிய விலை மற்றும் உரிமம் பெற்ற தரப்புகளுக்கு நிலையான நிதி ஸ்திரத்தன்மை 22

பலன் 03 - ஒவ்வொரு உயிரினத்தினதும் மற்றும் பொதுமக்களினதும், உரிமம் பெற்ற தரப்புகளினதும் மற்றும் இயக்கும் தரப்புகளினதும் மற்றும் பொதுமக்களினதும் மற்றும் அத்தகைய தரப்புகளினதும் சொத்துக்களினதும் மேம்பட்ட பாதுகாப்பு 26

பெற்றோலியக் கைத்தொழில் மற்றும் உராய்வநீக்கி எண்ணெய்கள் சந்தை 30

நீர்சார்ந்த சேவைகள் கைத்தொழில் 34

ஏனைய செயற்பாடுகள் 35

2021 ஆம் ஆண்டிற்கான எமது செயற்பாடுகள் 41

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 142

2021 ஆம் ஆண்டிற்கான இபொபஆ இன் நிதிக் கூற்று 149

தலைவரின் செய்தி

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையையும் மற்றும் நிதிக் கூற்றுக்களையும் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நாட்டில் தொற்றுநோய் இருந்த காலத்திலும் மற்றும் தற்பொழுது நிலவுகின்ற பேரண்டப் பொருளாதார நெருக்கடியிலும் மின்சாரம், நீர் மற்றும் பெற்றோலியம் ஆகிய கைத்தொழில்களில் எமது செயற்பாடுகளின் ஊடாக எமது ஆணைக்குழு சேர்த்த மதிப்பை நீங்கள் விரிவாகப் புரிந்துகொள்ள இந்த அறிக்கை துணையாக அமையும் என நான் நம்புகின்றேன்.

மின்சாரக் கைத்தொழில் பல காரணங்களால் அதாவது மிகக் குறிப்பாக நாட்டின் பேரண்டப் பொருளாதார நெருக்கடியினால் சவால்களை எதிர்நோக்கியது. அத்தகைய சவால்களை எதிர்நோக்கினாலும் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் பல சிறப்புப்பணிகளை நிறைவேற்றவும் மற்றும் பல புதிய கருத் திட்டங்களை ஆரம்பிக்கவும் முடிந்தது.

ஆணைக்குழுவுக்கும், இலங்கை மின்சார சபைக்கும், வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார தனியார் கம்பனிக்கும் மற்றும் மின்வலு சக்தி அமைச்சுக்கும் இடையில் நிலவுகின்ற வலிமையான பங்காளித்துவமும் மற்றும் கூட்டொத்துழைப்பும் அக்கறையுடைய தரப்புகளுக்கு நாம் வழங்கும் சேவைகளிலிருந்து உச்ச பலனை அடைய உதவும் என நாம் நம்புகின்றோம். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நீர்வலு மின்னுற்பத்தியிலிருந்து கிடைத்த அதிகளவு பங்களிப்பினால் மின்னுற்பத்தியானது 2021 ஆம் ஆண்டில் 6.4 வீதம் முதல் அதாவது 16,716 ஜிவொம வரை அதிகரித்தது.

இலங்கைக்கு தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை உறுதிசெய்யும் பொருட்டு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் மின்சக்தித் துறையின் செயற்பாடுகளை கண்காணித்து ஒழுங்குறுத்தும் பணியை வலுப்படுத்த முடிந்தது. 03 ஆம் மட்டத் தேசிய தொழில் தகைமை பயிற்சிப் பாடநெறியை இலவசமாக வழங்கியதன் மூலம் பகுதியளவில் தேர்ச்சிபெற்ற மின்னியலாளர்கள் தொழில்சார்ந்த மாதிரி மின்னியலாளர்களாக மாறும் வகையில் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஒரு துரித நிகழ்ச்சித் திட்டத்தையும் ஆரம்பிக்க முடிந்தது. குழாய் பொருத்துதல், நிர்மாணம் முதலிய ஏனைய தொழில் துறைகளுக்கும் இந்த முயற்சியை நாம் வியாபிக்கவும் திட்டமிட்டு வருகின்றோம்.

நாட்டிற்கு தொடர்ச்சியாக மின்சாரம் கிடைப்பதை உறுதிசெய்யும் பொருட்டு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தனது கண்காணிப்பு செயற்பாடுகளையும் மற்றும் ஒழுங்குறுத்துகை செயற்பாடுகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. எனினும், எதிர்காலத்தில் சக்தி சம்பந்தமமாக எழக்கூடிய சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கும் மற்றும் தொடர்ச்சியாக மின்சார விநியோகம் கிடைப்பதை உறுதிசெய்வதற்கு குறைந்த ஆகுசெலவுடைய நீண்டகால மின் உற்பத்தி விரிவாக்கல் திட்டத்தை அமுல்படுத்துவது இலங்கைக்கு மிகவும் இன்றியமையாததாகும் என ஆணைக்குழு உறுதியாக நம்புகின்றது.

தொற்றுநோய் நிலவிய காலத்தில் சவால்களை எதிர்நோக்கினாலும், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் அதன் திறமுறைத் திட்டங்களின் ஊடாக அதன் நோக்கத்தின் அடிப்படையில் அதன் பெறுமானங்களுக்கு உயிரூட்டி அது வழங்கும் சேவைகளை அதனால் வழங்க முடிந்தது. இந்தத் திறமுறைத் திட்டங்களினது பலன்களின் பயனாக புதிய மற்றும் புத்தாக்க வழிகளில் எதிர்காலத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய வகையில் எமது ஆணைக்குழுவின் நிலையை எம்மால் உறுதிசெய்ய முடியும் என நான் நம்புகின்றேன்.

ஜானக்க ரத்நாயக்க

தலைவர்

எம்மை பற்றி

இபொபஆ 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதையடுத்து அது இயங்கத் தொடங்கியது. அப்போது அதன் முதலாவது ஆணையாளர்கள் குழுவும் அதன் பணிப்பாளர் நாயகமும் நியமிக்கப்பட்டனர். ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய ஒரு ஆணைக்குழு ஐந்து ஆண்டு காலப் பகுதிற்கு அரசியலமைப்பு பேரவையின் இணக்கத்ததுடன் கொள்கை அபிவிருத்தி விடயத்திற்கு பொறுப்புடைய அமைச்சரினால் நியமிக்கப்பட்டது. ஆணைக்குழு 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தினாலும், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தினாலும், 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தல்) சட்டத்தினாலும் ஆளப்படுகின்றது. மேலும் இந்த இபொபஆ மின்சாரக் கைத்தொழிலை ஒழுங்குறுத்துகின்ற வேளையில் உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தை சார்பாக மறைமுக ஒழுங்குறுத்தும் அமைப்பாகவும் தொழிற்படுகின்றது.

இபொபஆ ஒரு சுயாதீன ஆணைக்குழுவாகும். இந்த ஆணைக்குழுவில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் அனைத்தும் அரசியலமைப்பு பேரவையினால் நியமிக்கப்படும் தலைவரும், பிரதித் தலைவரும் மற்றும் உறுப்பினர்களும் அடங்கிய ஆணைக்குழு உறுப்பினர்களினால் விரிவாக ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன.

மின்சாரக் கைத்தொழில், நீர்சார்ந்த சேவைகள், பெற்றோலியம் சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தை என்பன தொடர்பான கைத்தொழில்களில் அதிகம் திறமை வாய்ந்த தொழில்தேர்ச்சியுடைய ஊழியர்கள் ஆணைக்குழுவின் பதவியணியில் அடங்குகின்றனர்.

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சாரக் கைத்தொழிலின் பொருளாதார, பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஒழுங்குறுத்துகை அமைப்பு என அழைக்கப்படுகின்றது. ஆணைக்குழு உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தையின் மறைமுக ஒழுங்குறுத்துகை அமைப்பாகவும் தொழிற்படுகின்றது.

இபொபஆ நீர்சார்ந்த சேவைகளையும் மற்றும் பெற்றோலியக் கைத்தொழில்களையும் நெருங்கி கண்காணித்து அந்த சேவைகளில் சம்பந்தப்படும் அக்கறையுடைய தரப்புகளுடன் இணைந்து தொழிற்படுகின்றது. இந்த ஆணைக்குழு அந்த இரண்டு கைத்தொழில்களையும் ஒழுங்குறுத்துவதற்கு பாராளுமன்றத்தின் ஊடாக அந்தந்த சட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் ஒழுங்குறுத்துகை சார்ந்த ஆலோசனைகளையும் வழங்குகின்றது.

கூட்டிணைந்த தகவல்கள்

ஆணைக்குழுவின் பெயர்: இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

சட்ட அந்தஸ்து: 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தினால் தாபிக்கப்பட்டது

ஆணைக்குழு உறுப்பினர்கள்

திரு ஜானக்க ரத்நாயக்க - தலைவர்

பேராசிரியர் ஜானக்க ஏக்கநாயக்க - பிரதித் தலைவர்

திருமதி சத்துரிக்கா விஜேசிங்க - ஆணைக்குழு உறுப்பினர்

திரு உதேனி விக்ரமசிங்க - ஆணைக்குழு உறுப்பினர்

திரு மொஹான் சமரநாயக்க - ஆணைக்குழு உறுப்பினர்

பணிப்பாளர் நாயகம்
திரு தமித்த குமாரசிங்க

ஆணைக்குழுவின் செயலாளர்
திருமதி ஜானக்கி எம் விதானகே

கணக்காய்வாளர்கள்
கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்,
இலக்கம் 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்ல

பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலகம்
6-வது மாடி, இவ வர்த்தக கோபுரம், புனித மைக்கல் வீதி, கொழும்பு 3, இலங்கை
மின்னஞ்சல் முகவரி: info@pucsl.gov.lk
தொலைபேசி இலக்கம்: +9411 239 2607/8
தொலைநகல் இலக்கம்: +9411 239 2641
இணையத்தள முகவரி: www.pucsl.gov.lk

வங்கியாளர்
இலங்கை வங்கி, 1, 2 ஆம் மாடி, இவ வர்த்தக கோபுரம், இலக்கம் 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு

ஆணைக்குழு உறுப்பினர்கள்



இடமிருந்து

(முன்வரிசை) : திரு.ஜனக ரத்நாயக்க, பேராசிரியர் ஜனக ஏகநாயக்க

திரு.மொஹான் சமரநாயக்க, திருமதி.சதுரிகா விஜேசிங்க, திரு. உதேனி விக்ரமசிங்க

எம்மை உந்தும் சக்திகள்

எமது தூரநோக்கு

நாட்டின் நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் வரையறைகளுக்குட்பட்டு மிகவும் சிக்கனமான முறையில் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளையும் மற்றும் பொதுப் பயன்பாட்டு வசதிகளையும் அடையும் வகையில் இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் மற்றும் இலங்கையின் அபிவிருத்தியில் சம்பந்தப்படுகின்ற பங்காளர்களுக்கும் உகந்தவொரு சூழலை ஏற்படுத்துதல்.

எமது செயற்பணி

மிகவும் சமத்துவமான மற்றும் நிலையான விதத்தில் ஏற்கனவே காணப்படுகின்ற மின்சார வாடிக்கையாளர்களுக்கும் எதிர்கால மின்சார வாடிக்கையாளர்களுக்கும் பாதுகாப்பான, நம்பத்தகுந்த நியாய விலையில் உட்கட்டமைப்பு வசதிகள் கிடைப்பதை உறுதிசெய்யும் பொருட்டு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் செயல்நோக்கினுள் வருகின்ற சகல பொதுப் பயன்பாடுகளையும் ஒழுங்குறுத்துதல்.

இபொபஆ இன் தொழிற்பாடுகள்

2002 இன் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் பின்வருமாறு:

(அ) இபொபஆ சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதாவது கைத்தொழில் சட்டத்தின் கீழ் அல்லது அத்தகைய சட்டங்களினால் ஆணைக்குழுவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அல்லது குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை பிரயோகித்து அதன் தொழிற்பாடுகளையும் மற்றும் கடமைப்பணிகளையும் சரியான முறையில் நிறைவேற்றுதல்.

(ஆ) அணைக்குழுவின் தீர்மானத்தினால் பாதிக்கப்படலாம் எனும் எவரேனும் நபருடன் அல்லது குழுவுடன் ஆணைக்குழு பொருத்தம் என கருதும் அளவுக்கு அத்தகைய நபருடன் அல்லது குழுவுடன் கலந்தாலோசித்து முடிவுசெய்தல்.

(இ) இபொபஆ சட்டத்தின் செயல்நோக்கினுள் வருகின்ற ஏதாவது கைத்தொழில் சம்பந்தமான சகல விடயங்களிலும் ஆணைக்குழு பொருத்தம் என கருதுகின்றவாறு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(ஈ) இபொபஆ சட்டத்தின் 15 (4) ஆம் பிரிவுக்கு இணங்க ஏதாவது பொதுப் பயன்பாடுகள் சம்பந்தமான கைத்தொழில்கள் பற்றிய தகவல்களை சேகரித்தல், அத்தகைய தகவல்களை பதிதல் மற்றும் அவற்றை பரம்பல்செய்தல்.

(உ) ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளை நிருவகிப்பதற்கு தேவையான ஒரு சிறந்த செயன்முறைக் கோவையை உள்ளடக்குகின்ற ஒழுங்குறுத்துகை சார்ந்த ஒரு கைந்நூலை ஆணைக்குழு அது தாபிக்கப்பட்டதிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் தயாரித்து அதனை தேவையான போது மீளாய்வு செய்தல்.

(எ) ஏதாவதொரு கைத்தொழில் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு சகல விடயங்களும் தொடர்பான தொழிற்பாடுகளை ஒழுங்குறுத்துதல், சோதனையிடுதல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கும் செயல்நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

(ஏ) ஏதாவதொரு கைத்தொழில் சட்டத்தினால் உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் விநியோகிக்கப்படும் அனுமதிப் பத்திரங்கள், வேறு ஏதாவது ஆவணங்கள் மற்றும் நிறைவேற்றப்படும் ஒப்பந்தங்கள் முதலியவற்றுடன் சம்பந்தமான சட்டஏற்பாடுகளை அமுல்படுத்துதல்.

(ஐ) ஒழுங்குறுத்தப்படும் நிறுவனங்களினால் விதிக்கப்படும் வரிக்கட்டணங்களையும் மற்றும் ஏனைய கட்டணங்களையும் ஏதாவதொரு கைத்தொழில் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுமிடத்து ஒழுங்குறுத்துதல்.

(ஒ) ஏதாவதொரு பொதுப் பயன்பாடுகள் கைத்தொழிலில் எழுகின்ற பிணக்குகளை நடுத்தீர்ப்புகளின் மூலம் தீர்த்துவைத்தல்.

(ஓ) பொதுப் பயன்பாடுகள் கைத்தொழிலின் பாதுகாப்பு, தொடர்ந்திருக்கும் தன்மை மற்றும் நம்பத்தகு தன்மை என்பன தொடர்பான தொழில்நுட்ப நியமங்களையும் மற்றும் ஏனைய நியமங்களையும் தயாரித்து அமுலாக்கல்.

(ஔ) ஆணைக்குழுவின் ஏதாவது தொழிற்பாடுகளை பயனுள்ளதாக நிறைவேற்றுவதற்கு ஆணைக்குழு பொருத்தம் எனக் கருதலாம் எனும் துணை செயற்பாடுகளை அல்லது அதுபோன்ற ஏனைய இடைநேர் செயற்பாடுகளை மேற்கொண்டு நிறைவேற்றுதல்.

பலன்களுக்கான எமது குறிக்கோள்கள் - மின்சாரக் கைத்தொழில்

1. பலன் 01 - மின்சார வாடிக்கையாளர்களுக்கான மேம்பட்ட பலனும் மற்றும் சௌகரிகமும்

2. பலன் 02 - மின்சார வாடிக்கையாளர்களால் சுமக்கக்கூடிய விலை மற்றும் உரிமம் பெற்ற தரப்புகளுக்கு நிலையான நிதி ஸ்திரத்தன்மை
3. பலன் 03 - ஒவ்வொரு உயிரினத்தினதும் மற்றும் பொதுமக்களினதும், உரிமம் பெற்ற தரப்புகளினதும் மற்றும் இயக்கும் தரப்புகளினதும் மற்றும் பொதுமக்களினதும் மற்றும் அத்தகைய தரப்புகளினதும் சொத்துக்களினதும் மேம்பட்ட பாதுகாப்பு
4. பலன் 04 - மனிதனுக்கும். விலங்குகளுக்கும் மற்றும் தாவரங்களுக்கும் உரிய மேம்பட்ட சூழல் நிலைமைகள்

வெளியீடுகளுக்கான எமது குறிக்கோள்கள்

மின்சாரத்தின் தரம்

1. மின்சார நுகர்வோருக்கு விநியோகிக்க வேண்டும் என சட்டமுறையில் கட்டாயப்படுத்தப்பட்டுள்ள மின்சார விநியோக விசை அளவுகள் தொடர்பாக, உரிமம் பெற்ற தரப்புகளின் அதிகரித்த அனுசரிப்பு

   அதாவது - மின் விசைக்கு 230 V ± 6% மற்றும் அலைவரிசைக்கு 50 Hz ± 0.5%

மின்சார விநியோகத்தின் தரம்

2. ஒரு ஆண்டு காலப் பகுதியில் ஒரு மின்சார நுகர்பவர் அனுபவித்த சராசரி மின்சார செயலிழப்பு நேரத்திற்கான இலக்குகள் தொடர்பாக, சேவை வழங்கும் தரப்புகளின் அதிகரித்த அனுசரிப்பு
3. ஒரு ஆண்டு காலப் பகுதியில் ஒரு மின்சார நுகர்பவர் அனுபவித்த மின்சாரத் தடங்கல்களின் சராசரி எண்ணிக்கைக்கான இலக்குகள் தொடர்பாக, சேவை வழங்கும் தரப்புகளின் அதிகரித்த அனுசரிப்பு
4. மின்சார நுகர்பவரின் மின்சார சேவை மார்க்க முறிவுகள் தொடர்பாக மின்சார முறிவுகளை மீள்நிலைக்குக்கொண்டுவரும் சராசரி காலத்திற்கான இலக்குகள் தொடர்பாக, சேவை வழங்கும் தரப்புகளின் அனுசரித்த அனுசரிப்பு

மின்சார சேவையின் தரம்

5. மின்சார விநியோக சேவைகள் தொடர்பாக மின்சார நுகர்வோருக்கு இருக்கின்ற அவர்களின் உரிமைகளும் மற்றும் கடமைகளும் தொடர்பாக மின்சார நுகர்வோருக்கான அதிகரித்த விழிப்புணர்வு
6. மின்சார நுகர்பவரின் விசாரணைக்கு/கோரலுக்கு/முறைப்பாட்டிற்கு பதிலளிப்பதற்கு எடுக்கும் சராசரி நேரத்திற்கான இலக்குகள் தொடர்பாக, சேவை வழங்கும் தரப்புகளின் அதிகரித்த அனுசரிப்பு
7. மின்சார நுகர்வோரின் முறைப்பாடுகளுக்கு/பிணக்குகளுக்கு தீர்வுகாண்பதற்கு எடுத்த சராசரி காலம் தொடர்பாக இபொபஆ இன் அதிகரித்த அனுசரிப்பு

போதியளவு மின்சார விநியோகம்

8. நாட்டில் மின்சாரத்திற்கான கேள்விகள் எல்லா நேரங்களிலும் பூர்த்திசெய்யப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு மின்சார உற்பத்தித் திட்டங்களுடனான அதிகரித்த அனுசரிப்பு
9. சக்தி வினைத்திறனும் சக்தியை பாதுகாக்கும் செயற்பாடுகளும் தொடர்பாக சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் அதிகரித்த விழிப்புணர்வும் மற்றும் அறிவும்
10. பொதுப் பயன்பாடுகள் மைய கேள்விசார் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் தொடர்பாக, மின்சாரப் பகிர்ந்தளிப்பு சேவை வழங்கும் தரப்புகளின் அதிகரித்த அனுசரிப்பு

வரிக்கட்டணங்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள்

11. மின்சார விநியோகத்தில் ஏற்படும் ஆகுசெலவும் மற்றும் விதிக்கப்படும் வரிக்கட்டணங்களும் தொடர்பாக, சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் அதிகரித்த வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயத்தன்மை
12. மின்சார நுகர்வோருக்கு வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக சேவை வழங்கும் தரப்புகளினால் விதிக்கப்படும் கட்டணங்கள் தொடர்பாக அதிகரித்த வெளிப்படைத்தன்மையும் மற்றும் நியாயத்தன்மையும்

மின்சாரம் சம்பந்தமான பாதுகாப்பு

13. மின்சாரம்பாய்தல்களினதும் மற்றும் உயிராபத்து வாய்ந்த மின்சார விபத்துக்களினதும் எண்ணிக்கையை இலக்குக்கொள்ளப்பட்டுள்ள அளவை விடவும் குறைப்பதற்கு சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் அதிகரித்த விழிப்புணர்வும் மற்றும் அறிவும்
14. மின்சாரம்பாய்தல்களினதும் மற்றும் உயிராபத்து வாய்ந்த மின்சார விபத்துக்களினதும் எண்ணிக்கையை இலக்குக்கொள்ளப்பட்டுள்ள அளவை விடவும் குறைப்பதற்கான ஒழுங்குவிதிகள் தொடர்பாக சகல அக்கறையுடைய தரப்புகளினதும் அதிகரித்த அனுசரிப்பு

உகந்த சூழல்

15. சூழல் ஒழுங்குவிதிகளுடனான மின்சாரக் கைத்தொழிலில் உரிமம் பெற்ற தரப்புகளின் அதிகரித்த அனுசரிப்பு
16. மீளப்புதுப்பிக்கத்தகுசக்தி இலக்குகள் பற்றிய அரசாங்கத்தின் கொள்கை தொடர்பான அதிகரித்த அனுசரிப்பு

அறிக்கை பற்றிய அறிமுகம்

வருடாந்த அறிக்கை 2021 பல கைத்தொழில்களிலும் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் சந்தைகளிலும் சிக்கலான பல ஒழுங்குறுத்துகை செயற்பாடுகளுக்கு அர்த்தம் கொடுக்கும் வகையில் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அடைந்த விரிவான முன்னேற்றத்தை குறிப்பிடுவதற்கு முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அறிக்கை பின்வரும் விடயங்களை தெளிவாக குறிப்பிடுகின்றது:

- பல துறை கைத்தொழில்களில் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குறுத்துகை சார்ந்த தாக்கம்
- ஆராய்ச்சி முடிவுகள்
- அடுத்த ஆண்டிற்கான திட்டங்கள்
- நிதி நிலை

இந்த அறிக்கையானது ஆண்டு முழுதிலும் இபொபஆ மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுங்குறுத்துகை சார்ந்த தாக்கமும், நீர்சார்ந்த சேவைகளுக்கும் மற்றும் பெற்றோலியக் கைத்தொழில்களுக்கும் உதவுவதில் அடைந்த முன்னேற்றமும் மற்றும் மின்சாரக் கைத்தொழிலும் பற்றிய நடுநிலையான மற்றும் பொருத்தமான விபரங்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அறிக்கை ஆணைக்குழுவின் நிதி நிலை பற்றிய விரிவான விபரங்களையும் குறிப்பிடும்.

இந்த வருடாந்த அறிக்கையானது 2021 வித்தியாசமான கைத்தொழில்களில் அடுத்துவரும் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகள் பற்றிய விபரங்களையும் குறிப்பிடும்.

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தற்பொழுது மின்சாரக் கைத்தொழிலை ஒழுங்குறுத்தும் வேளையில் உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தைக்கான மறைமுக ஒழுங்குறுத்தும் அமைப்பாகவும் தொழிற்படுகின்றது. பாராளுமன்றத்தின் ஊடாக தேவையானவாறு கைத்தொழில் சட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படவிருப்பதால் பெற்றோலியம் மற்றும் நீர்சார்ந்த கைத்தொழில்கள் ஆணைக்குழுவின் ஒழுங்குறுத்துகை செயல்நோக்கில் வரவுள்ளன. எனினும், நெருங்கிய எதிர்காலத்தில் இரண்டு கைத்தொழில்களையும் ஒழுங்குறுத்தும் எதிர்பார்ப்புடன் அந்த இரண்டு கைத்தொழில்களிலும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தேவையான அடிப்படை வேலை ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

மின்சாரக் கைத்தொழில்

மின் உற்பத்தி

ஆண்டு 2021
16,716 ஜிவொம

மேல்நோக்கிய அம்புக்குறி

6.4 %

மின்சார நுகர்வோர் எண்ணிக்கை (லெகோ நிறுவனத்தின் மின்சார நுகர்வோர் அடங்கலாக)

ஆண்டு 2021
7,401

ஆண்டு 2020
7,213

நிலையான சக்தி உற்பத்திக் கொள்ளளவு (மெவொ)

	2020	2021
நீர்வலு	1,383	1383
ஏளரி எண்ணெய்	1268	1087
நிலக்கரி	900	900
NCRE	715	817

மின் உற்பத்தி (ஜிவொம)

	2020	2021
நீர்வலு	3,911	5,640
ஏளரி எண்ணெய்	4,182	2,634
நிலக்கரி	5,754	5,519
NCRE	1,866	2,922

மின்சார விற்பனை
ஆண்டு 2021
15,214 ஜிவொம
மேல்நோக்கிய அம்புக்குறி
6.5 %

மின்சாரக் கைத்தொழில்

பலன் 01 - மின்சார வாடிக்கையாளர்களுக்கான மேம்பட்ட பலனும் மற்றும் சௌகரிகமும்

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (இபொபஆ) உரிமம் பெற்ற தரப்புகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் மற்றும் இலங்கையில் மின்சாரப் பாவனையாளர்களுக்குரிய சௌகரிகத்தை மேம்படுத்துவதற்கும் அத்தகைய உரிமம் பெற்ற தரப்புகளினதும் மற்றும் மின்சாரப் பாவனையாளர்களினதும் பிரச்சினைகள் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்திருக்கின்றவை என்ற அடிப்படையில் அத்தகைய பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதன் ஊடாகவும் மற்றும் ஏனைய பல தளங்களை அடையாளப்படுத்துவதன் ஊடாகவும் பல கருத் திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றியது. அதிகளவான பணத்தை செலவிட்டு சட்டநடவடிக்கைகளை எடுப்பதற்கு மின்சார நுகர்பவர் விரும்பாத சந்தர்ப்பத்திலும் மற்றும் தரப்புகளுக்கு இடையில் ஆணைக்குழுவினது தலையீட்டின் மூலம் அவற்றின் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்திலும் ஆணைக்குழுவின் நடுத்தீர்ப்பு செயன்முறையின் ஊடாக மின்சார நுகர்வோரின் முறைப்பாடுகளுக்கு தீர்வுகண்டு அத்தகைய முறைப்பாடுகளை தீர்த்துவைப்பது

இந்தப் பலனின் கீழ்வருகின்ற மிக முக்கியமான செயற்பாடுகளில் ஒன்றாகும். ஏற்கனவேயிருக்கின்ற கொள்கைகளை மீளாய்வு செய்தல், அவ்வப்பொழுது தேவைப்படுகின்ற போதெல்லாம் புதிய ஒழுங்குறுத்துகை சாதனங்களை (கொள்கைகள், வழிகாட்டிகள், ஒழுங்குவிதிகள், முறையியல்கள்) தயாரித்தல், அத்தகைய சாதனங்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகத்தின் சிறந்த செயற்படுத்துகைக்கான செயன்முறை என்பன பற்றி அக்கறையுடைய தரப்புகளை விழிப்பூட்டுதல் விடயமும் இந்த செயற்பாடுகளில் அடங்கும்.

- **வழியனுமதி தொடர்பான பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு என திருத்திய வழியனுமதி பற்றிய வழிகாட்டல் தொடர்பாக பிரதேச செயலாளர்களின் அனுசரிப்பையும் மற்றும் விழிப்புணர்வையும் வலுப்படுத்துவது பற்றிய கலந்துரையாடல்**

பல ஒழுங்குறுத்துகை சாதனங்களுடன் சம்பந்தப்படும் தரப்புகளின் அறிவின்மைக்கு காரணமாக அமைகின்ற பிரச்சினைகளில் ஒன்றாக இபொபஆ ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகம் சரியான முறையில் செயற்படுத்தப் படாமையை இனங்கண்டுள்ளது. ஆகையால், குறித்த வழிகாட்டிகளுக்கான அனுசரிப்பை அதிகரிப்பதன் மூலம் அறிவை மேலும் வலுப்படுத்தும் முகமாக வழியனுமதி தொடர்பான பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு என திருத்திய வழியனுமதி வழிகாட்டல்கள் பற்றி பிரதேச செயலாளர்களுக்கு போதிப்பதற்கும் மற்றும் அத்தகைய பிரதேச செயலாளர்களுடன் ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்துவதற்கும் இபொபஆ 2021 ஆம் ஆண்டில் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தது. மின்சார நுகர்வோரின் வழியனுமதி தொடர்பான பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு திருத்திய வழியனுமதி பற்றிய வழிகாட்டிகளை எவ்வளவு பயனுள்ளதாக பிரயோகிக்க முடியும், பிரச்சினைகளை அடையாளப்படுத்தும் போது பிரதேச செயலகங்களின் அலுவலர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் இலங்கை மின்சார சட்டத்திற்கு இணங்க அவற்றை தீர்த்துவைக்கும் விதம் என்பன தொடர்பாக பிரதேச செயலகங்களில் உள்ள அலுவலர்களை இலக்காகக் கொண்டு 25 மாவட்டங்களிலும் இபொபஆ குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தியது. கலந்துரையாடல் அடிப்படையிலான இந்த நிகழ்ச்சித் திட்டம் பின்வருவனவற்றுக்கு நன்மையளிக்கும்:

1. பிரதேச செயலாளர்களின் மூலம் வழியனுமதி தொடர்பான பிரச்சினைகளை கையாளுவதில் வினைத்திறன் அதிகரித்தல்
2. வழியனுமதி பற்றிய முறைப்பாடுகள் குறைவடைதல்
3. மின்சார நுகர்வோரின் உரிமைகளை பாதுகாக்கும் ஒரு விதத்தில் மின்சார நுகர்வோரின் முறைப்பாடுகளை தீர்க்க வாய்ப்பு கிடைத்தல்

பௌதீக முன்னேற்றம்	100%
நிதி முன்னேற்றம்	95%

- **மறுக்கப்பட்டுள்ள (ஏலம்செய்யப்பட்டுள்ள) வளாகங்களுக்கு மின்சார இணைப்பை வழங்குவது பற்றிய வழிகாட்டி**

அத்தகைய ஏலம்செய்யப்பட்டுள்ள காணி வளாகங்களுக்கு காணியை அபிவிருத்தி செய்யும் தரப்புகள் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க மறுத்துள்ள அத்தகைய வளாகங்களுக்கு மின்சார இணைப்பு கிடையாமை தொடர்பான பிரச்சினைகள் பற்றி மின்சார நுகர்வோரிடமிருந்து அதிக எண்ணிக்கையான முறைப்பாடுகள் இபொபஆ இற்கு கிடைக்கின்றன. அத்தகைய முறைப்பாடுகளை ஆராயும் போது, அத்தகைய காணி உரிமையாளர்களிடமிருந்தும் மற்றும் காணியை அபிவிருத்தி செய்யும் தரப்புகளிடமிருந்தும் மின்சார நுகர்வோர் கொள்வனவு செய்யும் காணி வளாகங்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்திலும் மற்றும் அதன் திருத்தல் சட்டங்களிலும் மேலும் அது தொடர்பாக அத்தகைய மின்சார நுகர்வோருக்கு மின்சார இணைப்பை வழங்க வேண்டும் என வடமேல் மாகாண துணைச்சட்டத்திலும் ஏற்பாடுகள் இருந்தாலும்கூட, அத்தகைய நபர்களும், தரப்புகளும் அநேகமாக வாக்குறுதியளித்தாலும் அத்தகைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை என்பது தெரியவருகின்றது. இதனால்

மின்சார நுகர்வோர் இன்னும் தமக்கு மின்சார விநியோகம் கிடையாமல் பல கஸ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். 1960 ஆம் ஆண்டில் நிறைவேற்றப் பட்ட வீடமைப்பு மற்றும் நகர மேம்பாட்டு கட்டளை சட்டத்தின் கீழ், குறித்த ஒரு நிலையில் காணி உரிமையாளர்களுக்கு அல்லது காணிகளை அபிவிருத்தி செய்யும் தரப்புகளுக்கு மின்சார இணைப்பை வழங்குவதற்குரிய நிலைமை இல்லாது இருப்பது பாரிய ஒரு பிரச்சினையாகும் என்பதால் அத்தகைய வசதி மறுக்கப்பட்டுள்ள வளாகங்களுக்கு

மின்சார இணைப்பு வழங்கப்படும் அடிப்படை, தேவைப்பாடுகள் மற்றும் கால வரையறை என்பவற்றை உள்ளடங்குகின்ற நகல் வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டன. குறித்த நகல் வழிகாட்டிகளுக்கு அக்கறையுடைய தரப்புகள் தமது இருந்து ஒப்புதலை வழங்கியுள்ளன. குறித்த வழிகாட்டிகளை செயற்படுத்தும் அக்கறையுடைய தரப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டது. இபொபஆ செயற்படுத்தப் படவுள்ள அதன் குறித்த வழிகாட்டியை 2022 ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வமாக வெளியிடுவதற்கு எதிர்பார்க்கின்றது.

பௌதீக முன்னேற்றம்	70%
நிதி முன்னேற்றம்	30%

- **இலங்கை மின்சார சபையின் மின்சார வாடிக்கையாளர் சேவைகளின் செயல்திறன் அளவீடு**

ஒழுங்குறுத்தும் ஒரு அதிகார அமைப்பு என்பதால் சேவைகள் வழங்கும் தரப்புகளின் செயல்திறன்யை கண்காணிப்பது இபொபஆ இன் பொறுப்பாகும். மின்சார (பகிர்ந்தளிப்பு) செயல்திறன் நியம ஒழுங்குவிதிகள் பற்றி 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆம் திகதி வெளியிடப்பட் 1975/44 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி, மின்சாரத்தின் தரம், மின்சார விநியோகத்தின் தரம், மின்சாரத்தின் வர்த்தகசார் தரம் (மின்சார பகிர்ந்தளிப்பு முறைமை நட்டங்கள் மற்றும் மின்சார சேவையின் தரம்) ஆகிய தர அளவுகளை மேம்படுத்துவதற்கு உரிமம் பெற்ற தரப்புகளின் செயல்திறன்கள் மின்சார இணைப்பை வழங்குவத பற்றி பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மாகாண சபைகள், இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை (தனியார்) மின்சார கம்பனி போன்ற ஏனைய பிற அக்கறையுடைய தரப்புகளின் பங்குபற்றலில் ஒரு வழிகாட்டலை தயாரிப்பதற்கு இபொபஆ ஒரு திட்டத்தை முன்னெடுத்தது.

ஆணைக்குழுவின் மூலம் ஒழுங்குறுத்தப்படுதல் வேண்டும். அதற்கிணங்க, மின்சாரத்தின் வர்த்தகசார் தரம் தொடர்பாக மின்சார வாடிக்கையாளர் சேவைகள் செயல்திறன் அளவீடு மின்சார நுகர்வோர் விவகாரங்கள் பிரிவினாலும் மற்றும் மின்சாரத்தின் தரமும் மற்றும் மின்சார விநியோகத்தின் தரமும் தொடர்பான செயல்திறன் அளவீடு அனுமதிப் பத்திரங்கள் விநியோகப் பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, இமிச ஏற்றுக்கொண்ட செயல்திறன் சுட்டிகளை கணிப்பிட்டு அவற்றை ஒரு மாதாந்த அடிப்படையிலும் மற்றும் அதன் செயல்திறன்யை மதிப்பிட்டு ஒரு மாதாந்த அறிக்கையையும் இபொபஆ இற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

உரிமம் பெற்ற தரப்புகளினால் விநியோகிக்கப்படும் மின்சாரத்தின் வர்த்தகசார் தரத்தை (மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமை நட்டங்கள் மற்றும் மின்சார சேவையின் தரம்) மேம்படுத்துவதும் மற்றும் மின்சாரப் பாவனையின் நிமித்தம் மின்சார நுகர்வோருக்கு மிகவும் சிறந்த சேவையை பெற்றுக் கொடுப்பதும் மின்சார (பகிர்ந்தளிப்பு) செயல்திறன் நியம ஒழுங்குவிதிகளை செயற்படுத்துவதன் முக்கிய நோக்கமாகும். எனினும், அறிந்த நினைவூட்டல்களின் ஊடாக இபொபஆ இன் அங்கீகாரத்திற்கு இலங்கை மின்சார சபை (இமிச) தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கவும் வேண்டும்.

பௌதீக முன்னேற்றம்	20%
நிதி முன்னேற்றம்	N/A

- **மின்சார நுகர்வோரின் முறைப்பாடுகளை வினைத்திறன் வாய்ந்ததாக தீர்த்துவைப்பதற்கு ஒழுங்குறுத்துகை சாதனங்கள் (ஒழுங்குவிதிகள், விதிமுறைகள் மற்றும் வழிகாட்டிகள்) தொடர்பான அனுசரிப்பை உறுதிசெய்யும் முகமாக மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற தரப்புகளுடனான கலந்துரையாடல்**

மின்சார நுகர்வோரின் உரிமைகளையும் அதே போல் மின்சார உரிமம் பெற்ற தரப்புகளின் உரிமைகளையும் பாதுகாக்க உரிமம் பெற்ற அத்தகைய தரப்புகள் ஒழுங்குறுத்துகை சாதனங்களுக்கு இயைந்தொழுகுவதை உறுதிசெய்வது அவசியமாகும். இபொபஆ ஒழுங்குறுத்துகை சாதனங்கள் பற்றி மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற தரப்புகளின் ஊழியர்களிடத்தில் நிலவும் ஒரு அறிவு இடைவெளியை இனங்கண்டுள்ளது. ஆகையால் அந்த அறிவு இடைவெளியை நிரப்பும் முகமாக இலங்கையில் உள்ள மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற அனைத்துத் தரப்புகளினதும் அலுவலகங்களை உள்ளடக்கி இபொபஆ ஒரு விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தது. உரிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிமுறைகள் மற்றும் வழிகாட்டிகள் என்பன பற்றி ஒன்பது மாகாணங்களிலும் உள்ள மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற தரப்புகளின் சகல உத்தியோகத்தர்களும் (பிபொமு - மிஅ மட்டம்) மற்றும் இமிச இற்கு இணைக்கப்பட்டுள்ள மின் பொறியியலாளர்களும் என 1500 பேர்களுக்கும் அதிகமானோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஆணைக்குழு வெளியிடும் ஒழுங்குவிதிகள், விதிமுறைகள், வழிகாட்டிகள் முதலியன பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமும் நிறைவு செய்யப்பட்டது.

பௌதீக முன்னேற்றம்	100%
நிதி முன்னேற்றம்	96%

- **ஏழு மாகாணங்களில் உள்ள (மேல் மாகாணம், வடமேல் மாகாணம், சபரகமுவ மாகாணம், மத்திய மாகாணம், வட மாகாணம், கிழக்கு மாகாணம், ஊவா மாகாணம்) மின்சார நுகர்வோரிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகளை தீர்ப்பதற்காக நடத்தப்பட்ட நடமாடும் சேவை**

மின்சார நுகர்வோருக்கு பரந்தளவில் பிரச்சினைகள் / கஸ்டங்கள் உள்ளன. மின்சார நுகர்பவரின் அதிகளவு மின்சார வசதிகள் திருப்தி என்ற இலக்கை அடைவதில் அத்தகைய பிரச்சினைகள் தீர்க்கப்படுதல் / அத்தகைய பிரச்சினைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுதல் வேண்டும். நுகர்வோர்-வசதிக்கு அல்லது ஏனைய பிற பொருத்தமான நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு இடையில் சரியான விழிப்புணர்வும் மற்றும் வினைத்திறன் வாய்ந்த தொடர்பாடலும் இல்லாதிருப்பது இந்த போதாக்குறைக்கான முக்கிய காரணமாகும்.

நிறைவுபெறாத மனக்குறைகள் / கடுமையான பிரச்சினைகள் உடைய மின்சார நுகர்வோரை பொருத்தமான / பொறுப்பு உடைய அதிகார சபைகளுடன் அல்லது அதிகாரிகளுடன் நேருக்கு நேராக சந்திக்கச்செய்வது அத்தகைய மின்சார நுகர்வோருக்கு தேவையான வழிகாட்டிகளை / தீர்வுகளை பெற்றுக் கொடுக்கலாம். ஆகையால், ஐந்து மாகாணங்களில் பொருத்தமான உரிய அரச அலுவலர்களும் மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்களும் அழைக்கப்பட்டு இபொபஆ ஆல் ஒரு நடமாடும் சேவையை ஏற்பாடு செய்ய முடிந்தது. இதன் போது இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் நேருக்கு நேரான சந்திப்புகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்டு உடனே சரியான விழிப்புணர்வை ஏற்படுத்தி மின்சார நுகர்வோருக்கு தீர்வுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. மேலும் ஒரே நாளில் தீர்த்துவைக்க முடியாத பிரச்சினைகள் இபொபஆ இன் ஒரு துரித முறைப்பாடுகள் கையாளும் செயன்முறையின் நிமித்தம் குறிப்பீடு செய்யப்பட்டன. மேலும் உரிமம் பெற்ற தரப்புகளினாலும் மின்சார நுகர்வோரினாலும் அத்தகைய தரப்புகளுக்கு இடையில் ஒரு நியாயமான

உறவை கட்டியெழுப்ப முடிந்தது. கொவிட் தொற்றுநோய் சவாலுக்கு முகம்கொடுத்த குறித்த காலப் பகுதியில், வட மத்திய மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் சபரகமுவ மாகாணம் ஆகிய மாகாணங்களையும் இபொபஆ ஆல் அணவ முடிந்தது.

பௌதீக முன்னேற்றம்	45%
நிதி முன்னேற்றம்	65%

- **பொருத்தமான சட்டங்கள் வழிகாட்டிகள் ஆகியவற்றுக்கு இணங்க நுகர்வோர் மனக்குறைகளை தீர்ப்பதற்கும் மற்றும் அனுமதிப்பத்திரம் பெற்ற தரப்பு ஆலோசனை கோரல்களுக்கு பதிலளிப்பதற்கும் வசதிசெய்தல்**

நுகர்வோரிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை கவனிப்பது இபொபஆ இன் முக்கியமான பொறுப்புகளில் ஒன்றாகும். இபொபஆ இன் ஈடுபாட்டுடன் நுகர்வோர் தமது பிரச்சினைகளை சட்டநடவடிக்கைக்கு உட்படாமல் தீர்த்துக் கொள்ள முடியும். இபொபஆ நுகர்வோர் முறைப்பாடுகளை அடையாளப்படுத்துகின்ற வேளையில் ஒழுங்குறுத்துகைசார்ந்த சாதனங்களை பின்பற்றுவதை மேம்படுத்தும் பொருட்டு ஒழுங்குறுத்துகை தொடர்பான விடயங்கள் பற்றி உரிமம் பெற்ற தரப்புகளுக்கு இபொபஆ ஆலோசனையையும் வழங்குகின்றது. 2021 ஆம் ஆண்டில் இபொபஆ இற்கு 437 புதிய முறைப்பாடுகள் கிடைத்தன. அதிகமான முறைப்பாடுகள் வழியனுமதிப் பிரச்சினைகளுடன் சம்பந்நதப்பட்டவையாகும். இந்த முறைப்பாடுகள் எல்லாம் பல ஆண்டுகளாக ஒரே மாதிரியாக இருந்துள்ளன.

ஆண்டு 2021 ஆம் ஆண்டில் இபொபஆ கிடைத்த மின்சார நுகர்வோர் முறைப்பாடுகள் பற்றிய விபரம்

பௌதீக முன்னேற்றம்	60%
நிதி முன்னேற்றம்	20%

அணவல்

2021 ஆம் ஆண்டு 650 முறைப்பாடுகள் தீர்த்துவைக்கப்பட்டன.
வட மத்திய மாகாணம்
மத்திய மாகாணம்
சபரகமுவ மாகாணம்



	ஆண்டு 2019		ஆண்டு 2020		ஆண்டு 2021	
வகுதி	புதிய மின் இணைப்புகளின் எண் ணிக்கை	கடிதப் பரிமாற்றங்களின் எண்ணிக்கை	புதிய மின் இணைப்புகளின் எண் ணிக்கை	கடிதப் பரிமாற்றங்களின் எண் ணிக்கை	புதிய மின் இணைப் புகின் எண்ணிக்கை	கடிதப் பரிமாற்றங்களின் எண் ணிக்கை
புதிய இணைப்புகள்	61	159	54	115	103	132
மின் துண்டிப்புகள் மற்றும் மீள் மின் இணைப்புகள்	16	30	15	36	24	36
மின்சாரக் கட்டணம் சம்பந்தமான	36	73	105	168	62	98
மாணி வாசிப்பு சம்பந்தமான	22	72	13	37	1	21
வழியனுமதி	163	431	102	267	123	235
நியமம் சம்பந்தமான	36	85	30	70	43	54
வரிக்கட்டண வகுதி மாற்றம்	11	43	12	26	5	13
ஏனையய	118	306	79	186	76	128
மொத்தம்	**463**	**1199**	**410**	**905**	**437**	**717**

- **மின்சார விதிமுறைக்கு இணங்க பிணக்குகளை தீர்த்தல் (பிணக்குகள் தீர்த்தல்)**

ஒரு முறைப்பாட்டை முதலில் இரு தரப்பினரிடையே பேசித்தீர்க்க முடியாதபோது, அது ஒரு பிணக்காக மாறும். 2021 ஆம் ஆண்டில் இபொபஆ இற்கு 05 முறைப்பாடுகள் கிடைத்தன. அவற்றில் ஒரு முறைப்பாட்டிற்கு தீர்வுகாணப்பட்டது. மற்றைய 04 முறைப்பாடுகளும் கலந்துரையாடல் கட்டத்தில் இருந்தன.
இபொபஆ நுகர்வோருக்கும் மற்றும் மின்சார உரிமம் பெற்ற தரப்புகளுக்கும் (மின்சார விநியோக உரிமம் பெற்ற தரப்புகள்) பிணக்குகள் தீர்த்தல் நடைமுறை மற்றும் பிணக்குகள் தீர்த்தல் விதிமுறை ஆகியவற்றை சிறப்பாக செயல்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகள் பற்றிய கல்வி பிரச்சாரத்தையும் மேற்கொண்டது.

- **நுகர்வோர் ஆலோசனைக் குழு (நுஆகு) ஒருங்கிணைப்பு**

இபொபஆ சட்டத்தின் 29 ஆம் பிரிவின்படி, நுகர்வோர் ஆலோசனைக் குழு (நுஆகு) நியமிக்கப்பட வேண்டும். நுஆகு இன் செயல்பாடுகள் பின்வருமாறு:

01. தகுந்த நியமங்கள் பற்றி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குதல்,

02. நுகர்வோரின் பொருட்கள் அல்லது சேவைகள் சம்பந்தமான தேவைகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பது பற்றி கண்காணித்தல்.

03. நியமங்கள் பற்றிய விழிப்புணர்வை ஊக்குவித்தல்.

அதன்படி 08 கூட்டங்கள் நடத்தப்பட்டன. நுஆகு 02 கொள்கை சிபாரிசுகளை பரிந்துரைத்தது. இது அதிக நுகர்வோர் - பயன்பாட்டு திருப்தியை அடைவதற்கான ஒழுங்குறுத்துகை சாதனங்கள் பற்றி நுகர்வோர் கல்வியின் தேவைகளை விவாதிக்கின்றது. ஏனெனில் நுஆகு மின்சார நுகர்வோரின் அதிருப்தியை முக்கியமாகக் கண்டறிந்துள்ளது.

பௌதீக முன்னேற்றம்	67%
நிதி முன்னேற்றம்	47%

இலங்கை தனியார் மின்சார நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவைகள் செயல்திறன் அளவீடு

மாதாந்தம், காலாண்டு மற்றும் வருடாந்தம் என்ற அடிப்படையில் லெகோ நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை செயல்திறன் சுட்டிகளின் கணிப்பீடுகள், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பன மேற்கொள்ளப்படுகின்றன.
வாடிக்கையாளர்கள் சேவை செயல்திறன் அளவீடு தொடர்பான நியமங்கள் பற்றிய சோதனை நிறைவு செய்யப்பட்டது. லெகோ நிறுவனத்தினால் தரவுகள் சேகரிக்கப்பட்டு அவை சமர்ப்பிக்கப்பட்டு மதிப்பீடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. செயல்திறன் நியமங்கள் பற்றிய சோதனை முடிவடைந்தது.

பௌதீக முன்னேற்றம்	100%
நிதி முன்னேற்றம்	

பௌதீக முன்னேற்றம்	25%
நிதி முன்னேற்றம்	N/A

இமிச சமர்ப்பித்த மின்சார செலுத்துகைத் திட்டத்தை மதிப்பாய்வு செய்து ஆணைக்குழு முடிவை வெளியிடுதல்

உரிமம் பெற்ற இலங்கை மின்சார சபை இபொபஆ இன் அங்கீகாரத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் குறைந்த செலவில் நீண்ட கால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தின்படி மின்சாரம் செலுத்துகைத் திட்டத்தைச் சமர்ப்பிக்கின்றது. 2021 ஆம் ஆண்டில், இபொபஆ குறைந்த விலையிலான நீண்ட கால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டம் 2022 இற்கு 41 நிபந்தனைகளுடன் அங்கீகாரத்தை வழங்கியது. மேலும், 2022 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் எதிர்பார்த்த சக்திக் கொள்கையின்படி திட்டத்தைத் திருத்த இமிச இற்கு உத்தரவிட்டது.

பௌதீக முன்னேற்றம்	100%
நிதி முன்னேற்றம்	N/A

அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் - மின்சக்தித் துறை

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம், தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் இடர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டிகள் என்பவற்றுக்கு இணங்க, ஒவ்வொரு அமைச்சும், திணைக்களமும் மற்றும் பொது நிறுவனமும் எந்தவொரு அனர்த்ததத்தை அல்லது வரவிருக்கும் அனர்த்தத்தை எதிர்கொள்வதற்கான நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயாரிக்க வேண்டும். முகாமைத்துவ நிலையம் அனர்த்த் சூழ்நிலையின் போது அடிப்படை பயன்பாட்டு சேவைகளின் நீடித்த செயல்பாட்டை உறுதிசெய்ய அனர்த்த முகாமைத்துவத் திட்டம் (னுஆீ) இருத்தல் ஒரு முக்கிய தேவையாக இனங்காணப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் பயன்பாட்டு சேவை வழங்குநர்களால் தயாரிக்கப்படுதல் வேண்டும். மேலும் குறித்த திட்டத்தைத் தயாரிப்பதற்கு, தேசிய அளவிலான திட்டத்தின்படி, தொழில்துறை சார்ந்த வழிகாட்டுதலை இபொபஆ வெளியிடுதல் வேண்டும். 2021 ஆம் ஆண்டில், அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களை உருவாக்கும் பொருட்டு ஆலோசனை சேவைகளை பெறுவதற்கு கேள்வி மனுக்கள் அழைக்கப்பட்டன. மேலும் இமிச மற்றும் லெகோ நிறுவனம் ஆகியவற்றினால் வழிநடத்தல் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இபொபஆ இந்தக் கருத் திட்டத்தை 2022 ஆம் ஆண்டில் நிறைவு செய்யத் திட்டமிட்டுள்ளது.

பௌதீக முன்னேற்றம்	20%
நிதி முன்னேற்றம்	ஏனைய செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டது

விலக்களிக்கப்பட்ட தரப்புக்களின் ஒழுங்குறுத்துகைக் கட்டமைப்பை மறுபரிசீலனை செய்வது மற்றும் திருத்துவது பற்றிய ஆலோசனைகள் (மின்சார உற்பத்தி/விநியோகிக்க மற்றும் பகிர்ந்தளிப்பு அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கான தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது)

விலக்ளிக்கப்பட்ட தரப்புகள் (மின்சார உற்பத்தி/விநியோக மற்றும் பகிர்ந்தளிப்பு ஆகியவற்றுக்கு அனுமதிப் பத்திரங்களை பெற வேண்டிய தேவையிலிருந்து விலக்ளிக்கப்பட்ட தரப்புகள்) தற்போது விதிவிலக்கு சான்றிதழ் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிபந்தனைகள் மூலம் இலகுவாக கட்டுப்படுத்தப்படுகின்றன. அண்மை காலங்களில், அடுக்குமாடி நிர்மாணத் துறையின் துரித அபிவிருத்திக் கருத் திட்டங்கள், கலப்பு அபிவிருத்திக் கருத் திட்டங்கள் முதலிய கருத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் சில புதிய வணிக மாதிரிகளும் உருவாக்கப்பட்டன. எனினும் மின்சார விநியோகம் மற்றும் அத்தகைய மாதிரிகளின் விநியோகம் என்பன ஏற்கனவே உள்ள ஒழுங்குறுத்துகை கட்டமைப்பில் விலக்களிக்க முடியாதவையாக காணப்படுகின்றன. மேலும், விலக்களிக்கப்பட்ட தரப்புகளை பொறுத்தவரையில் அவற்றுக்கு கிடைக்கக் கூடிய பொருளாதார, பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஒழுங்குறுத்துகை சாதனங்கள் தற்போது மிகவும் குறைவாகவே உள்ளன. மின்சார உற்பத்தி/விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றின் தற்போதைய ஒழுங்குறுத்துகைக் கட்டமைப்பு அனைத்து அக்கறையுடைய தரப்புகளினதும் தற்போதைய மற்றும் வருங்கால நலன்களை கருத்தில் கொண்டு சரியான முறையில் திருத்தப்படுதல் வேண்டும். மேலும், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான 18 தொழில்நுட்ப விதிமுறைகளுக்கு தேவையான ஒழுங்குறுத்துகை சாதனங்களும் அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். எனவே, புதிய மேம்பாடுகளுக்கு ஏற்ப குறைபாடுகளை கண்டறிந்து அறிமுகப்படுத்துவதற்கு ஏற்கனவே உள்ள ஒழுங்குறுத்துகைக் கட்டமைப்பை மீளாய்வு செய்வது அவசியம் என இபொபஆ இனங்கண்டுள்ளது. தரம், நம்பகத்தன்மை, போட்டி, நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள் போன்றவற்றுடன், மிகவும் பயனுள்ள ஒழுங்குறுத்துகை சாதனங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், விலக்களிக்கப்பட்ட தரப்புகள் மற்றும் அத்தகைய தரப்புகளின் குத்தகைதாரர்கள் தற்போது எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றனவோ அதைப்பார்க்கிலும் மிகவும் சிறந்த முறையில் கட்டுப்படுத்தப்படும். 2021 ஆம் ஆண்டில் இபொபஆ கணக்கெடுப்பை நடத்தி அறிக்கையை தயாரித்து நிறைவு செய்தது. அந்த அறிக்கை 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்படும்.

பௌதீக முன்னேற்றம்	90%
நிதி முன்னேற்றம்	100%

மின்சார விநியோக முறைமையிலுள்ள மின்சாரத்தின் தரமும் மற்றும் விநியோக தரமும் அதிகரித்தமை

விநியோக செயல்திறன் நியமங்கள் ஒழுங்குவிதியின்படி, கூறப்பட்ட ஒழுங்குவிதியை செயல்படுத்துவதற்கு திணிப்பு வகுதி வகைப்படுத்தல் பணியை நிறைவு செய்ய வேண்டும். எனவே, இமிச இன் விநியோக பிரிவுகளின் திணிப்பு வகை வகைப்படுத்தல் பணியை இபொபஆ நிறைவு செய்தது.

பௌதீக முன்னேற்றம்	90%
நிதி முன்னேற்றம்	N/A

பலன் 02 - மின்சார நுகர்வோருக்கு சுமக்கக்கூடிய விலை மற்றும் உரிமம் பெற்ற தரப்புகளுக்கு நிலையான நிதி ஸ்திரத்தன்மை

மின்சாரம் சுமக்கக்கூடிய விலையில் கிடைப்பது பற்றிய கொள்கை ஆலோசனை

தற்போதுள்ள இறுதி-பயனர் கட்டணங்கள் மின்சாரம் மலிவு விலையில் கிடைக்கக்கூடிய தன்மையில் பழைய தரவுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். எனினும் அவை அண்மை ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள சனத்தொகை அதிகரிப்புக்கும் மற்றும் சமூக-பொருளாதார மாற்றங்களுக்கும் ஏற்ப போதுமானதாக இல்லை. இந்த செயல்பாடு 2020 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்ட மின்சாரம் மலிவு விலையில் கிடைக்கக்கூடிய தன்மை பற்றிய ஆய்வின் வெளியீட்டுத் தரவை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும் புதிய மலிவு விலைத் தரவுகள், குறைந்தளவான நுகர்வுகள், நுகர்வோருக்கான மானியங்களின் செலவுகள் மற்றும் மாற்றங்களின் மதிப்பீடு என்பவற்றை பொறுத்து தற்போதைய கட்டண முறையியல் பகுப்பாய்வு அம்சத்தை உள்ளடக்கியுள்ளது. நுகர்வினதும் மற்றும் தேசிய கொள்கையினதும் நோக்கங்களுக்கு சிறப்பான சேவைக் கட்டண முறையியல் அவசியமாகும். இபொபஆ தற்போதைய கட்டணக் முறையியல் பற்றிய ஒரு கணக்கெடுப்பை நடத்தியது. கணக்கெடுப்பில் பதிலளித்தவர்களில் 83% வீதமானவர்கள் தற்போதைய விலைகள் மலிவாக இருப்பதாக காணுகின்றனர். முடிவுகளின் அடிப்படையில், இபொபஆ மின்சாரக் கட்டணத் திருத்தம் பற்றிய கொள்கை ஆலோசனையை அரசாங்கத்திற்கு முடிவுசெய்து அடுத்த ஆண்டு அமைச்சுக்கு சமர்ப்பிக்கும்.

பௌதீக முன்னேற்றம்	70%
நிதி முன்னேற்றம்	N/A

தொகையாக மின்சார சேவை இணைப்புகளை வழங்குவதற்கும் இணைப்புகளை அதிகரிப்பதற்குமான வழிகாட்டல்

தொகையாக மின்சார சேவை இணைப்புகளை வழங்குவதில் உரிமம் பெற்ற தரப்புகளின் சீரற்ற நடைமுறைகளுக்கும் மற்றும் முறைகேடுகளுக்கும் வழிவகுத்த இணைப்புகள் அதிகரிப்பது பற்றி நுகர்வோர் பிரிவுக்கு பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதன்படி, இபொபஆ தொகையாக மின்சார சேவை இணைப்புகளை வழங்குவதற்கும், நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கும் இணைப்புகளை அதிகரிப்பதற்கும், மின்பரிசோதகர் பிரிவின் ஒழுங்குறுத்துகை மேற்பார்வைக்கு உட்பட்ட பகுதி பொறியாளர்களுக்கு போதுமான விருப்புரிமையை வழங்குவதற்கும், தொகையான மின்சார சேவை இணைப்புகளை வழங்குவதில் பயன்பாட்டு முகாமையாளருக்கு வழிகாட்டல்களை வழங்குவதற்கும் ஒரு வழிகாட்டல் ஆவணத்தை தொகுத்தது. இதற்கான வழிகாட்டுதல் நெறிமுறை தயாரிக்கப்பட்டு அடுத்த ஆண்டு அமுல்படுத்தப்படும். வழிகாட்டிகளை நடைமுறைப்படுத்தல் உரிமம் பெற்ற தரப்புகளின் சீரற்ற நடைமுறைகளை ஒழுங்குறுத்தும். மேலும் நுகர்வோர் பிணக்குகளையும் குறைக்கும். அத்துடன் மின்சார நுகர்வோருக்கு அதிக நியாயமான மற்றும் சமமான கட்டணங்களையும் திணிக்கும்.

பௌதீக முன்னேற்றம்	90%
நிதி முன்னேற்றம்	N/A

அனுமதிக்கப்பட்ட கட்டண முறையியல் பற்றிய மீளாய்வு

மின்சார விநியோக வலையமைப்புகளில் ஏற்பட்டுள்ள அண்மை கால முன்னேற்றங்களுக்கு ஏற்ப கட்டணங்களை நிர்ணயிப்பதற்கு செலவு பிரதிபலிப்பு முறையியல் திருத்தப்படுதல் வேண்டும். தற்போதைய முறையியல் குறுகிய மின்சார இணைப்புகளுக்கு நியாயமற்ற கட்டணங்களை விதிக்கின்றது. மேலும் மின்சார சேவை இணைப்பின் சிறிய மாற்றங்களுக்கும் வழிவகுகின்றது. இனங்காணப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள கட்டண முறைகளை முன்னோக்கிப் பார்க்கும்போது அந்த முறையியல் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்படுதல் வேண்டும். செயல்பாடு என்பது ஏற்கனவே உள்ள ஒழுங்குறுத்துகை சாதனங்களின் திருத்தமாகும். இது ஏற்கனவேயுள்ள ஒழுங்குறுத்துகை செயல்பாட்டில் வாடிக்கையாளர்களுக்கு மின்சார விநியோக உரிமம் பெற்ற தரப்புகளினால் விதிக்கப்படும் கட்டணங்களை நிர்ணயிப்பதில் பயன்படுத்தப்படுகின்றது. எனவே இந்தத் திருத்தம் மின்சக்தித் துறையின் பொருளாதார ஒழுங்குறுத்துகை களத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும். ஏனெனில் கட்டணங்களின் அடுத்த திருத்தம் இந்த முறையியலின்படி மேற்கொள்ளப்படும். ஆகவே நுகர்வோருக்கு மிகவும் நியாயமான மற்றும் சமமான கட்டணங்களுக்கு வழிவகுக்கும். 2021 ஆம் ஆண்டு இந்த செயல்பாடு நிறைவு செய்யப்பட்டது.

பௌதீக முன்னேற்றம்	90%
நிதி முன்னேற்றம்	N/A

2019 ஆம் ஆண்டிற்கான மின்சார செலுத்துகை பற்றிய கணக்கெடுப்பு

மின்சார செலுத்துகை பற்றிய கணக்கெடுப்பு மின்சார உற்பத்தியை செலுத்துவதில் செயல்திறனை அதிகரிக்க அவசியமானதாகும். இது குறைந்த மின்சார செலவுக்கு வழிவகுக்கும். செலுத்தப்பட்ட மின்சாரம் பற்றிய கணக்கெடுப்பு தொடர்பான வழிகாட்டிகள் மற்றும் 2020 ஆம் ஆண்டில் இல் உருவாக்கப்பட்ட மின்சார செலுத்துகை நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மின்சார செலுத்துகை பற்றிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும். பொருளாதார ஒழுங்குறுத்துகை அமைப்பு என்ற வகையில், இபொபஆ பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிசெய்யும் அதே வேளையில் மின்சார வாடிக்கையாளருக்கு மலிவு விலையில் மின்சாரம் கிடைப்பதையும் உறுதிசெய்ய வேண்டும். 2020 ஆம் ஆண்டில் இபொபஆ எதிர்கால செயலாக்கம் மற்றும் குறிப்புகள் என்பவற்றுக்கான ஒரு தகுதிவாய்ந்த கட்டளை அனுப்புதல் பற்றிய கணக்கெடுப்பு அறிக்கையை தயாரித்தது.

பௌதீக முன்னேற்றம்	100%
நிதி முன்னேற்றம்	60%

வழங்கப்படாத சக்தி ஆகுசெலவை மதிப்பிடுவதற்கான ஆராய்ச்சி

சக்தி வழங்கப்படாத (ENS) செலவு ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பாரம்பரிய திட்டமிடல் குறியீடு மூலம் வரையறுக்கப்படுகின்றது. அந்த எண்ணிக்கை அறிவியல் ரீதியாக அமையவில்லை. ENS இன் விலையை நிறுவ மொரட்டுவை பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சி மற்றும் வழக்கமான புதுப்பிக்கும் முறையியல் முன்மொழியப்பட்டது. இந்த ஆராய்ச்சி 2022 ஆம் ஆண்டின் இறுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பிறகு மின்சார செலுத்துகை உரிமம் பெற்ற தரப்புகளின் கிரிட் மின்சாரக் குறியீடு / அபிவிருத்திக் கருத் திட்டங்களுக்குத் தேவையான திருத்தங்கள் அக்கறையுடைய தரப்புகளுடன் விவாதிக்கப்படும். எனவே, இபொபஆ ஒரு முன்னோடிக் கணக்கெடுப்பை நிறைவு செய்தது. இபொபஆ 2021 ஆம் ஆண்டில் சக்தி ஆகுசெலவுக்கான தரவை வழங்கும் முக்கிய அறிக்கையை தயாரிக்கத் தொடங்கியது.

பௌதீக முன்னேற்றம்	100%
நிதி முன்னேற்றம்	100%

இடை வளங்களுக்கான கிரிட் மின்சார ஒருங்கிணைப்பு வரையறைகள் பற்றிய ஆராய்ச்சி

2030 ஆம் ஆண்டிற்குள் 80% மின்சார இலக்கை மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களிலிருந்து அடைவதே அரசாங்கத்தின் கொள்கையாகும். மேலும் இடைப்பட்ட மீளப்புதுப்பிக்கத்தகு வளங்களுக்கான வரையறைகள் அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே, இந்த வரையறைகளை நிர்ணயிக்கும் பொருட்டு பேராதெனிய பல்கலைக்கழகத்துடன் இணைந்து இபொபஆ ஒரு ஆய்வை மேற்கொண்டது. இந்த ஆய்வு 2021 ஆம் ஆண்டின் இறுதியில் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பௌதீக முன்னேற்றம்	100%
நிதி முன்னேற்றம்	100%

விநியோகிக்கப்பட்ட மின் உற்பத்தியைக் கொண்ட கிரிட் மின்சார இயக்கம் பற்றிய ஆராய்ச்சி

2030 ஆம் ஆண்டிற்குள் 80% வீதம் மீளப்புதுப்பிக்கத்தகு வளங்களுக்கு நகர வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாகும். விநியோக மட்டத்தில் இடையறாத மூலங்களின் பாரியளவான ஒருங்கிணைப்பு இருப்பதால் மின்சார முறைமையின் செயல்பாடும் ஸ்திரத்தன்மையும் சிக்கலாக இருக்கலாம். க்ரிட் மின்சாரக் குறியீடு/மின்சார பகிர்ந்தளிப்புக் குறியீடு மற்றும் க்ரிட் மின்சாரத்தை இயக்குவதற்குத் தேவையான பிற சாதனங்கள் என்பவற்றில் தேவையான திருத்தங்களை இனங்காணும் பொருட்டு பேராதெனிய பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஒரு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. மின்சாரப் பகிர்ந்தளிப்புக் குறியீட்டின் அடிப்படையில், மின்சார விநியோகக் குறியீடு சக்தியின் சேமிப்பை மின்சார விநியோக வலையமைப்பில் ஒருங்கிணைக்க உதவும் என கண்டறியப்பட்டது. மின்கலத்தில் சேமிக்கப்பட்ட மின்சக்தியை கட்டுப்படுத்த கட்டுப்பாட்டு அல்காரிதம் உருவாக்கப்படுதல் வேண்டும். மேலும், குறைந்தளவான மின்னழுத்தம் உடைய மின்சார விநியோக வலையமைப்பிற்கான மின்சக்தி இலத்திரனியல் ஒருங்கிணைப்பு PV முறைமைகளுடனும் மற்றும் மின்கல சேமிப்பகத்துடனும் அதிகமாக .காணப்படும். எனவே, மின்சார பகிர்ந்தளிப்புக் குறியீடு, மின்சார விநியோக வலையமைப்பிற்கான மின்னியல் அடிப்படையிலான மின் இணைப்புடன்

சம்பந்தப்படும் சிக்கல்களை சரியாக கையாள வேண்டும்.

பௌதீக முன்னேற்றம்	100%
நிதி முன்னேற்றம்	100%

மின்சார செலுத்துகை மார்க்கம் பற்றிய ஆராய்ச்சி ஆய்வு

மின்சார செலுத்துகைக்கு உரிமம் பெற்ற தரப்புகள், அவசர மின் உற்பத்திப் பொறித்தொகுதிகளை கொள்வனவு செய்யும் போது அவற்றின் அபிவிருத்திக் கருத் திட்டங்களில் மின்சார செலுத்துகை முறைமை எதிர்நோக்கும் பிரச்சினைகளை மீண்டும் மீண்டும் முன்னிலைப்படுத்தியுள்ளனர். பெரும்பாலும் இபொபஆ மாதிரித் திறனை உருவாக்க வேண்டும். உரிமம் பெற்ற தரப்புகளின் உரிமை சார்ந்த கோரல்கள் செயல்படாததால் இந்த உரிமை சார்ந்த கோரல்களை சரிபார்க்க வேண்டும். இபொபஆ, மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஒலிபரப்பு முறைமையிலுள்ள சிக்கல்களை கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை பரிந்துரை செய்யும் பொருட்டு ஆய்வுகளை மேற்கொண்டது. இந்த ஆராய்ச்சி 2021 ஆம் ஆண்டின் இறுதியில் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பிறகு உரிமம் பெற்ற தரப்புகளின் க்ரிட் மின்சார குறியீடு/ அபிவிருத்திக் கருத் திட்டங்களுக்கு தேவையான திருத்தங்கள் என்பன பற்றி அக்கறையுடைய தரப்புகளுடன் கலந்துரையாடப்படும்.

பௌதீக முன்னேற்றம்	100%
நிதி முன்னேற்றம்	100%

உரிமம் பெற்ற தரப்புகளினால் தொகுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள் மீளாய்வு

இது இபொபஆ இன் வழக்கமான ஒரு செயல்பாடாகும். இந்த செயல்பாட்டின் மூலம், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களுக்கான ஆகுசெலவு பிரதிபலிப்பு முறையியலின்படி, இமிச மற்றும் லெகோ நிறுவனம் ஆகியவற்றினால் வெளியிடப்பட்டுள்ள கட்டண சமர்ப்பணங்களை மதிப்பாய்வு செய்வதற்கு இபொபஆ திட்டமிட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட அந்த அனுமதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு இபொபஆ அனுமதி அளித்துள்ளது.

பௌதீக முன்னேற்றம்	100%
நிதி முன்னேற்றம்	N/A

சிறியளவில் மின்சாரத்தை பகிர்ந்தளிக்கும் தரப்பு கட்டண மீளாய்வு

மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கும் மற்றும் மின்சார விநியோகத்திற்கும் அனுமதிப் பத்திரம் பெறும் தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள சிறு மினசார விநியோகத் தரப்புகள், விலக்களிக்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் தமது வளாகங்களில் விநியோகிக்கப்படும் மின்சாரத்திற்கு கட்டணத்தை அறவிடுவதற்கு முன்னர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக கட்டண முன்மொழிவை சமர்ப்பிக்க வேண்டும். அதன்படி, இந்த வழக்கமான செயற்பாடு நிறைவு செய்யப்பட்டது.

பௌதீக முன்னேற்றம்	100%
நிதி முன்னேற்றம்	N/A

தொகையளவான மின்சார விநியோகக் கட்டணம், ஒரேமாதிரியான தேசிய கட்டணம் மற்றும் இறுதிப்-பாவனையாளர் கட்டணம் பற்றிய மீளாய்வு

அனுமதிக்கப்பட்ட வருமானங்கள் ஆண்டுதோறும் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். மொத்த மின்சார விநியோகக் கட்டணமும், இறுதிப் பயனர் கட்டணமும் அரையாண்டுக்கு ஒருமுறை திருத்தப்படுதல் வேண்டும். ஒரே மாதிரியான தேசிய கட்டண மறுசீரமைப்பு காலாண்டுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மின்சார செலுத்துகை உரிமம் பெற்ற தரப்புகள் (TL) மற்றும் மின்சார விநியோக உரிமம் பெற்ற தரப்புகளுக்கான (DLs) அனுமதிக்கப்பட்ட வருமானங்களை ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது. அதற்கேற்ப சீரான தேசிய கட்டண சீராக்கல்கள் TL மற்றும் DL ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும்.

பௌதீக முன்னேற்றம்	100%
நிதி முன்னேற்றம்	N/A

பலன் 03 - ஒவ்வொரு உயிரினத்தினதும் மற்றும் பொதுமக்களினதும், உரிமம் பெற்ற தரப்புகளினதும் மற்றும் இயக்கும் தரப்புகளினதும் மற்றும் பொதுமக்களினதும் மற்றும் அத்தகைய தரப்புகளினதும் சொத்துக்களினதும் மேம்பட்ட பாதுகாப்பு

மின்சார நுகர்வோர் அனுபவிக்கும் மின்னழுத்த ஏற்றத்தாழ்வுப் பிரச்சினைகளை கையாளுவதற்கான ஒழுங்குவிதிகளை இற்றைப்படுத்துதல்

மின்னழுத்தத் தரத்தின் தற்போதைய விதிமுறைகள் நிலையான நிலை மின்னழுத்த மட்டுப்பாடுகளை உள்ளடக்கியுள்ளன. ஆனால் மின்னழுத்த ஏற்றத்தாழ்வுகளை பொறுத்தவரை இவை பொருந்தாது. எனவே மின்னழுத்த ஏற்றத்தாழ்வுகள் தொடர்பான மின்னழுத்த தர பிரச்சினைகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக மின்னழுத்தத் தரத்தில் நடைமுறையில் உள்ள விதிமுறைகளை புதுப்பிப்பதற்கு இபொபஆ நடவடிக்கை எடுத்தது. இது தொடர்பான நகல் அறிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது. அது பற்றி நடைமுறைப்படுத்தும் தரப்பினருடன் கலந்துரையாடிய பின்னர் அடுத்த ஆண்டு இறுதியில் அதன் திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

பௌதீக முன்னேற்றம்	50%
நிதி முன்னேற்றம்	

மீளப்புதுப்பிக்கத்தகு மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகளின் (உரிமம் பெற்ற தரப்புகள்) ஒரு மாதிரி சோதனையிடுகைகள்

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் பிரிவு 6(அ) இன்படி, அனுமதிப் பத்திரத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நபர்களுக்கு சொந்தமான மின் நிலையங்களை மின் பரிசோதகர்கள் பரிசோதிக்க வேண்டும். எனவே அனுமதிப் பத்திரம் தொடர்பான நிபந்தனைகளுக்கு இணங்க கண்காணிப்பை மேற்கொள்வதும் அவசியமாகும். ஆகையால் அனுமதிப் பத்திரம் தொடர்பான நிபந்தனைகளுடன் உரிமம் பெற்ற தரப்புகளின் அனுசரிப்பு பற்றிய கண்காணிப்பை உள்ளடக்கிய, இநிசஅ சட்டத்தின் பிரிவு 6(அ) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக மின் உற்பத்தித் தரப்புகளின் மின்னுற்பத்திப் பொறித் தொகுதி மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. சூரிய சக்தி மின் நிலையங்களின் பாதுகாப்பு மற்றும் முறையான தொழில்நுட்ப முகாமைத்துவம் ஆகியவற்றை உறுதிசெய்யும் முகமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பௌதீக முன்னேற்றம்	
நிதி முன்னேற்றம்	

மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கும் மற்றும் மின்சார விநியோகத்திற்கும் அனுமதிப் பத்திரத்தை பெறும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள தரப்புகளின் வளாகங்களில் சோதனைகளை மேற்கொள்ளல்

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 10 (2) ஆம் பிரிவின் பிரகாரம் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு மின்சார விநியோக அனுமதிப் பத்திரத்தை பெறுவதற்கான தேவையிலிருந்து எந்தவொரு நபருக்கும் அல்லது நபர்களின் வகைக்கும் விலக்களிப்பதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. அத்தகைய நபர் அல்லது நபர்களின் வகையால் மின்சாரம் விநியோகிக்கப்படும் முறை அல்லது அளவு ஆணைக்குழுவினால் கருத்திற்கொள்ளப்படும். எனவே, அத்தகைய விலக்களிக்கப்பட்டுள்ள தரப்புகளின் மின்சார விநியோக வலையமைப்புகள் மேற்கூறிய விலக்களிப்பு நிபந்தனைகளுடன் இணங்குகின்றனவா என்பதையும் ஆணைக்குழு சரிபார்க்க வேண்டும். 2021 ஆம் ஆண்டில், விலக்களிக்கப்பட்டுள்ள தரப்புகளின் விதிவிலக்கு நிபந்தனைகளுடன் இணங்குவதை உறுதிசெய்யும் பொருட்டு இபொபஆ 09 ஆய்வுகளை நடத்தியது.

பௌதீக முன்னேற்றம்	
நிதி முன்னேற்றம்	

பொதுமக்களுக்கு மின்சார செலுத்துகை மார்க்க தாழ்வாரங்கள் பற்றிய தகவல் பிரவேசத்தை வழங்குதல்

பொது மக்களின் உயிர்களையும் மற்றும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கும் மற்றும் உரிமம் பெற்ற தரப்புகளின் கணனி மைய நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் மினசார செலுத்துகை மார்க்கங்களினது தாழ்வாரங்களின் குறைந்தபட்ச பாதுகாப்பு நடவடிக்கைகளை அனுமதித்து உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். தற்போதுள்ள மற்றும்

		முன்னேற்றத்தையும் புரிந்துகொள்வது முக்கியமானதாகும். துறையின் அபிவிருத்தியையும் மற்றும் அதிக கவனம் தேவைப்படும் துறைகளில் அக்கறையுடைய தரப்புகள் எவ்வாறு பங்களித்துள்ளன என்பதையும் புரிந்துகொள்ள இது மேலும் உதவும். மேற்கூறியவற்றை நிறைவேற்றும் பொருட்டு, பின்வரும் பிரிவுகளில் தரவுகளை பகுப்பாய்வு செய்யவும், பகுப்பாய்வு அறிக்கைகளை தயாரித்து வழங்கவும் மற்றும் வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1. நுகர்வோரின் முறைப்பாடுகள் பற்றி அறிக்கையிடுதல் மற்றும் அந்த முறைப்பாடுகளை தீர்த்துவைத்தல். 2. விநியோகத்திற்கு உரிமம் பெற்ற தரப்புகளின் வாடிக்கையாளர் சேவைகள் செயல்திறன் ஆணைக்குழுவின் இணையதளம், சமூக ஊடகங்கள், அச்சீட்டு ஊடகங்கள் போன்ற தளங்களைப் பயன்படுத்தி தரவுகள் வழங்கவும் வெளியிடவும் படும்.	நடவடிக்கைகளுக்கு உதவுதல்.	
AP/2022/RA/CP/04	மூன்றாம் தரப்பு முதலீட்டை எளிதாக்கும் பொருட்டு கூரை மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி மின் உற்பத்தி முறைமை தொடர்பான ஒப்பந்த கட்டமைப்பை	இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (இபொபஆ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார தட்டத்தின் 10(3) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் (SLEA) ஆல் திருத்தப்பட்டவாறு கட்டண	கூரை மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டங்களில் முதலீட்டாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுதல் மற்றும் முதலீட்டுத் தரப்புகளால் அவற்றின் பிவி கட்டண வாடிக்கையாளருக்கு சொந்தமான கட்டிடங்களில்	750,000

	மீளாய்வு செய்து திருத்துதல்	வாடிக்கையாளர்களுக்கு விலக்களிப்பு சான்றிதழ்களை வழங்கியுள்ளது. 2017.01.03 ஆம் திகதி முதல் 2037.01.02 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூரிய சக்தி மின்னுற்பத்தி செயற்பாட்டில் ஈடுபடும் நபர்களுக்கு, உற்பத்திற்கு உரிமம் பெற வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது. கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூரிய சக்தி மின்னுற்பத்தித் திட்டங்களில் முதலீட்டாளர்களுக்கு ஆர்வம் உள்ளது. இருப்பினும், விநியோகத்திற்கு உரிமம் பெற்ற தரப்புகள் (DL) கட்டிட உரிமையாளரை அதாவது அதன் கட்டண வாடிக்கையாளரை மட்டுமே மின்சார ஏற்றுமதியாளராக அங்கீகரித்து அதற்கேற்ப கட்டிட உரிமையாளருடன் மின்சாரத்தை வாங்குவதற்கும் கட்டணம் செலுத்துவதற்கும் ஒப்பந்தம் செய்கின்றன. பிவி வசதி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முதலீட்டாளர்களுக்கு இது சிறிதளவும் பாதுகாப்பு அளிக்காது. பதிலாக, முதலீட்டாளர், உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கான கட்டணங்களைப் பெறுவதற்கு கட்டண வாடிக்கையாளரை நம்பியிருக்க வேண்டும். முதலீட்டாளர், கட்டண வாடிக்கையாளர் மற்றும்	கட்டமைத்து, அவற்றை நிறுவி இயக்க இயலுமாகுதல்.	

		DL ஆகியோருக்கு இடையே தெளிவான, வெளிப்படையான மற்றும் பயனுள்ள ஒப்பந்த ஏற்பாடு இல்லாததால், தேசிய க்றிட் மின்சார முறைமைக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலும் மற்றும் விநியோகிப்பதிலும் (i) கட்டண வாடிக்கையாளர்கள் பணம் செலுத்தத் தவறியதாலும் மற்றும் (ii) உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு கட்டண வாடிக்கையாளர்கள் அணுகல் மறுக்கப்படுதல் மற்றும் முதலீட்டாளர் உற்பத்தியை நிறுத்துதல் மற்றும் பிவி வசதியை அகற்றுதல் முதலியவற்றினால் ஏராளமான முதலீட்டாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். முதலீட்டாளர், கட்டண வாடிக்கையாளர் மற்றும் DL ஆகியோருக்கு இடையே தெளிவான, வெளிப்படையான மற்றும் பயனுள்ள ஒப்பந்த ஏற்பாட்டை நிறுவ, முதலீட்டாளருக்கு போதுமான பாதுகாப்பையும், இபொபஆ-đ ஒழுங்குறுத்துகை மேற்பார்வையையும் உறுதிசெய்யும் பொருட்டு, தற்போதுள்ள ஒப்பந்த கட்டமைப்பை மதிப்பாய்வு செய்து திருத்த வேண்டும். கூரை மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூரிய சக்தி மின் உற்பத்தித் திட்டங்களின் நிமித்தம் முதலீட்டுத் தரப்புகள், கட்டண வாடிக்கையாளர்கள் மற்றும் DL		

		ஆகியோருக்கு இடையிலான திருத்திய கட்டண ஏற்பாட்டை 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், செயற்படுத்துவதற்கு DLகளுக்கு பணிப்புரை விடுக்கப்படும்.		
AP22/INS/CP/01	கைத்தாழில் நிறுவனங்களுக்கு மின்சாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு உரிமம் பெற்ற தரப்புகளில் மின்சார விநியோகங்களில் மின்சாரத்தின் தரம் பற்றிய சோதனைகளை மேற்கொள்ளல்	2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 4 (1) (அ) பிரினி பிரகாரம் ஆணைக்குழுவின் ஒரு நோக்கம் யாதெனில் நுகர்வோருக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் தரம் தொடர்பாக அந்த நுகர்வோரின் நலனைப் பாதுகாப்பதாகும். மேலும், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 6 (2) (அ) பிரிவின் பிரகாரம், மின்பரிசோதகர்கள் மின்சாரம் வழங்கும் மின் நிலையங்கள் மற்றும் மின்சார மார்க்கங்கள் என்பவற்றை சோதனயிடுதல் வேண்டும். எனவே, உரிமம் பெற்ற தரப்புகள் நுகர்வோருக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் தரம் தொடர்பான தேவைப்பாடுகளை அனுசரிக்கின்றனவா என்பதை கண்காணிக்கும் பொருட்டு ஆய்வுகளை நடத்துவது அவசியமாகும். இந்த செயற்பாட்டின் மூலம் இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய மாதிரி தொழில் நிறுவனங்களுக்கு விநியோக உரிமம் பெற்ற தரப்புகளின் மூலம் இபொபஆ ஸ்தல ஆய்வுகளையும் மற்றும் மின்சார விநியோகத்தின் தர அளவீடுகளையும் மேற்கொள்ளும்.	தொழில்துறை துறையில் மின்சாரத்தின் தரம் மற்றும் மின்சார பகிர்ந்தளிப்புத் தரம் சார்ந்த பிரச்சினைகள் கண்டறியப்படுதல். மின்சார விநியோக செயல்திறன் ஒழுங்குறுத்துகையினால் மின்சாரத்தின் தரநியம அனுசரிப்பு கண்காணிக்கப்படுதல்.	2,000,000

		BS EN 50160 மற்றும் IEC TS 62749 ஆகிய சர்வதேச தர நியமங்கள் மற்றும் விவரக்குறிப்புகள் என்பவற்றுடன் ஒப்பிடும்போது, மின்சார (விநியோகம்) செயல்திறன் தர நிமயங்கள் அடங்கலாக மின்சார விநியோகத்திற்கு உரிமம் பெற்ற தரப்புகளின் அனுசரிப்பை கண்காணிக்கும் பொருட்டு 2022 ஆம் ஆண்டில் தொழில்துறை நுகர்வோரின் மாதிரி மின்சார விநியோகம் ஆய்வு செய்யப்படும்.		
AP/2020/RA/CP/03	மின்சார விநியோக சேவைகள் விதிக்கோவையையும் மற்றும் மின்சார நுகர்வோரின் உரிமைகளும் மற்றும் கடமைகளும் பற்றிய கூற்றையும் இற்றைப்படுத்துதல்	இலங்கை மின்சார சபையின் (இமிச) மின்சார விநியோகத்திற்கு உரிமம் பெற்ற தரப்புகளின் (DLs) பொதுவான விநியோக சேவைகள் குறியீடு (SSC) மற்றும் இலங்கை தனியார் மின்சார நிறுவனம் (லெகோ) ஆகியவற்றின் SSC ஆரம்பத்தில் 2013 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. அதன்பின், SSC களுக்கு சில இணைப்புகள் மற்றும் பல தொடர்புடைய ஒழுங்குறுத்துகை சாதனங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எனவே, DL கள் வழங்கும் சேவைகளை நுகர்வோர் சிறப்பாகப் பெறுவதற்கு DL களின் SSC கள் இற்றைப்படுத்தப்படுதல் வேண்டும். அதன்படி, 2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மின்சார நுகர்வோரின் உரிமைகள் மற்றும் கடமைகள் (SRO) அறிக்கையும்	மின்சார விநியோக உரிமம் பெற்ற தரப்புகளினால் வழங்கப்படும் மின்சார சேவைகளை நுகர்வோர் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு கிடைத்தல்.	2,674,440

		இற்றைப்படுத்தப்படுதல் வேண்டும். SSCs களுக்கான பின்னிணைப்புகளை கூட்டிணைக்கின்ற இமிச இன் DL களினதும் மற்றும் லெகோ நிறுவனத்தின் SSC களினதும் பொதுவான SSC களை இற்றைப்படுத்தி ஒழுங்குறுத்துகை சாதனங்களுடன் சம்பந்தப்பட்ட ஏற்புடைய ஏற்பாடுகள் ஏற்கனவே ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இற்றைப்படுத்தப்பட்ட SSC களை பிரதிபலிக்கும் வகையில் SRO உம் இற்றைப்படுத்தப்படும். இற்றைப்படுத்தப்பட்ட SSC கள் DL களால் செயற்படுத்தப்படும். நுகர்வோர் அதை அறிந்து கொள்ள வேண்டும்.		
AP22/INS/CP/ 03	இலங்கையில் உள்ள மின்னியலாளர்களுக்கு உதவுவதற்கான ஒரு இன்சுலே'ன் மெக்கர் சோதனை கருவியினதும் மற்றும் எர்த் மெக்கர் சோதனை கருவியினதும் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் (ஆஅ)	2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் பிரிவு 3 (1) (எ) பிரிவின் பிரகாரம், மின்சார விநியோக சேவைகளின் பாதுகாப்பு தொடர்பான தொழில்நுட்ப மற்றும் பிற தரநியமங்களை விதித்து செயற்படுத்துவது ஆணைக்குழுவின் ஒரு தொழிற்பாடாகும். 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 4 (1) (அ) பிரிவின் பிரகாரம், நுகர்வோர்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் பாதுகாப்பு தொடர்பாக அவர்களின் நலனைப் பாதுகாப்பது ஆணைக்குழுவின் ஒரு நோக்கமாகும்.	மலிவு விலையில் மின்சார உபகரணங்களை அணுகுவதற்கு மின்னியலாளர்களுக்கு வசதிசெய்வதால் மின்சார நுகர்வோரின் மின்சார பாதுகாப்பு உறுதிசெய்யப்படுதல்.	1,000,000

		மின்சார உபகரணங்களை மலிவு விலையில் அணுகுவதற்கு வசதியளிப்பதன் மூலம் நுகர்வோரின் மின்சாரப் பாதுகாப்பை உறுதிசெய்தல். ஒரு பல்கலைக்கழகத்தின் "ஆராய்ச்சியையும் மற்றும் அபிவிருத்தியையும்" பயன்படுத்தி குறைந்த விலையுள்ள "மெகர் டெஸ்டர்" மற்றும் "எர்த் மெகர் டெஸ்டர்" என்பவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம், உரிமம் பெற எதிர்பார்க்கப்படும் மின்னியலாளர்களுக்கு ஏற்பாடுசெய்தல். வெளியீட்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மின்னியலாளர்களுக்கு தேவையான பாகங்கள் குறைந்த விலையில் கிடைக்க வழி வகுக்கும். மேலும், சர்வதேச தரத்திற்கு இணையான உபகரணங்களை மேம்படுத்துவது சர்வதேச அளவில் வணிக சாத்தியத்தை தாராளமாக்கக்கூடும்.		
AP22/INS/CP/05	உள்ளக மின்சார நிறுவுகைகளில் மாற்றத்தை அங்கீகரித்தல் மற்றும் IET தரநிலை அனுசரிக்கப்படுவதை உறுதிசெய்தல்	2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 3 (1) (எ) பிரிவின் பிரகாரம் மின்சார விநியோக சேவைகளினதும் மற்றும் மாணிவாசிப்பு சேவைகளினதும் பாதுகாப்பு தொடர்பான தொழில்நுட்ப மற்றும் பிற தரநியமங்களை விதித்து செயற்படுத்துவது ஆணைக்குழுவின் ஒரு தொழிற்பாடாகும். 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 4 (1) (அ) பிரிவின் பிரகாரம், நுகர்வோர்களுக்கு	உள்ளக வயரிங் நிறுவுகைகளிலும் மற்றும் திருத்தங்களிலும் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணித்து கட்டுப்படுத்துவதன் மூலம் மின்சார நுகர்வோரும் மற்றும் உயிர்களும் பாதுகாக்கப்படுதல்.	500,000

		வழங்கப்படும் மின்சாரத்தின் பாதுகாப்பு தொடர்பாக அவர்களின் நலனைப் பாதுகாப்பது ஆணைக்குழுவின் ஒரு நோக்கமாகும். உள்ளக வயரிங் நிறுவுகைகள் மற்றும் மாற்றங்கள் என்பவற்றை அவ்வப்போது ஆய்வு செய்து கண்காணித்து ஒழுங்குறுத்துவதன் மூலம் மின்சார நுகர்வோரின் உயிர்களைப் பாதுகாத்தல். ஒரு வீட்டின்/வளாகத்தின் உள்ளக வயரிங் மீதான மாற்றங்களை ஒழுங்குறுத்துவதற்கு ஒரு ஒழுங்குவிதியை/விதியை தயாரித்து விதிக்க உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் நஅச ஆகியவற்றை பணித்தல். மேலும், உரிமம் பெற்ற தரப்புகளின் உதவியுடன் ஆய்வு அளவுகோல்களை தயாரிப்பதற்கான சாத்தியம் பற்றி ஆராய்தல். பல ஆண்டுகளாக, உள்ளக வயரிங் மாற்றங்கள் அதிவேக விகிதத்தில் அதிகரித்து வருகின்றன. இது குடியிருப்பாளர்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது. மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களை கட்டுப்படுத்துவதது இது ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகும். உத்தேசித்துள்ள மாற்றங்கள் முதலில் அங்கீகரிக்கப்படுவதற்கு கடுமையான நடைமுறையின் மூலம் நகர்ந்தால் இது தணிக்கப்படலாம்.		

AP/2022/LIC/ CP/01	மின்சார சுழற்சி பற்றிய ஒழுங்குறுத்துகை (பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம்) சாதனங்களைத் தயாரித்தல்	மின்சார வலையமைப்பிற்கான சுழற்சி முறையை அறிமுகப்படுத்தும் பணியில் அரசு ஈடுபட்டுள்ளது. தற்போது, உகந்த சக்தி ஓட்டம், சுழற்சிக் கட்டணங்கள், பாதுகாப்பு விடயங்கள் போன்ற சுழற்சி தொடர்பான அம்சங்களை உள்ளடக்குவதற்கு குறிப்பான ஒழுங்குறுத்துகை சாதனங்கள் எதுவும் கிடையாது. மேலும், சுழற்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் ஏற்கனவே உள்ள சில ஒழுங்குறுத்துகை சாதனங்களின் உள்ளடக்கங்களை மாற்றியமைக்க வேண்டும். இபொபஆ புதிய ஒழுங்குறுத்துகை சாதனங்களை கண்டறிந்து அவற்றை மேம்படுத்தவும், இந்த செயற்பாட்டின் மூலம் சுழற்சி தொடர்பான ஒழுங்குறுத்துகை சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் தற்போதைய ஒழுங்குறுத்துகை சாதனங்களை திருத்தவும் திட்டமிட்டுள்ளது.	அக்கறையுடைய சிறந்த முறையில் சுழற்சியை செய்வதற்கு அக்கறையுடைய தரப்புகளினால் மின்சார வலையமைப்பை பயன்படுத்த வாய்ப்பு கிடைத்தல்.	0
AP/2022/LIC/ CP/02	பொதுப் பயன்பாட்டு நிறுவனங்களை (இமிச மற்றும் லெகொ) ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்திருக்கும் தரவுத்தளத்தை தாபித்தல்	ஒரு ஒழுங்குறுத்தும் அமைப்பு என்ற வகையில் ஆணைக்குழுவுக்கு தொழில்துறையை ஒழுங்குபடுத்துவதற்கு தரவு மிகவும் முக்கியமானது. ஆனால் ஒழுங்குபடுத்தப்படும் நிறுவனங்களின் தரவுகளைப் பொறுத்தவரை இபொபஆ பல ஆண்டுகளாக பின்வரும் சில பிரச்சினைகளை எதிர்நோக்கியது.	அறிக்கை தயாரித்தல், முடிவெடுத்தல் மற்றும் மற்றொரு வகை தகவல் பரப்புதல் ஆகியவற்றிற்கு இபொபஆ இல் துல்லியமான தரவு இருப்பது உறுதிப்படுத்தப்படுதல்.	3,000,000

		➢ ஒழுங்குறுபடுத்தப் படும் தொழில்களுக்கு நாளாந்த இற்றைப்படுத்தல் கள், துல்லிமான தரவுகள் ஏதுமில்லை. ➢ கைமுறையாக உள்ளீர்க்க வேண்டிய கடினப் பிரதிகள் மூலம் தரவுகளை வழங்கியமை. ➢ கையேட்டு தலையீட்டில் தாமதங்களும் மற்றும் பல்வேறு தெளிவான சிக்கல்களும் இருந்தமை. எனவே, இமிச மற்றும் லெகோ ஆகியவற்றின் தரவுத்தளங்கள் வரையறுக்கப்பட்ட தகவலுடன்/தரவுகளுடன் இணைக்கப்படும் இபொபஆ இற்கான இடைமுகத்தை (முறைமை) உருவாக்க முன்மொழியப்பட்டுள்ளது. பின்னர், இபொபஆ அந்த தரவை/தகவல்களை நேரடியாக அணுக அனுமதி உண்டு. அத்தகைய தரவுகளின்/தகவல்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. மாதாந்த தரவு - நுகர்வோர் எண்ணிக்கை, மின்சக்தி விற்பனை (கிவொம), மின்சாரக் கட்டணம் (இரூ), அதிகபட்ச கேள்வி மாதாந்த தரவு - தேறிய மாணிவாசிப்பு, நெட் பிளஸ் தகவல்		

		மாதாந்த செயலிழப்பு தரவு மாதாந்த உற்பத்தி - சக்தி மாதாந்த உற்பத்தி - செலவு (கொள்திறன், சக்தி) மாதாந்த உற்பத்தி - உச்ச கேள்வி மாதாந்த மின்னுற்பத்தி - தற்செயல் அதிகபட்ச கேள்வி நாளாந்த மின் உற்பத்தி அறிக்கையில் உள்ள தரவு, உண்மையான கணனி அனுப்புகை, நாள் முன்னறிவிப்பு SDDP முன்னறிவிப்பு மாதிரி முடிவுகளில் மாதாந்த தரவு, கணனி கட்டுப்பாடு மாதாந்த மதிப்பாய்வு அறிக்கைகளில் உள்ள தரவு பொருளாதார அனுப்புகைக்கு பயன்படுத்தப்படும் ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையத்தின் சக்திக் கொள்திறன் ஆகுசெலவு அட்டவணையில் உள்ள மாதாந்த தரவு மின்சார செலுத்துகை செயல்திறன் தரநியமங்கள் ஒழுங்குறுத்துகைக்கான காலாண்டு தரவு மின்சாரப் பகிர்ந்தளிப்பு செயல்திறன் தரநியமங்கள் ஒழுங்குறுத்துகைக்கான மாதாந்த தரவு		
AP/2022/LIC/CP/03	மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்திக் கருத் திட்டங்களை செயல்படுத்துவது பற்றிய முன்னேற்ற கண்காணிப்பு	மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (RE) உற்பத்திக் கருத் திட்டங்களுக்கான உற்பத்தி உரிமங்களை இபொபஆ வழங்கினாலும், அந்த RE கருத் திட்டங்களை செயற்படுத்துவதில் மெதுவான முன்னேற்றத்தை அது அவதானித்துள்ளது. எனவே, இந்த RE கருத் திட்டத்தின் செயலாக்கங்களின்	மின்சார நுகர்வோருக்கு மின்சாரம் கிடைப்பது உறுதிப்படுத்தப்படுதல்.	840,000

		மெதுவான முன்னேற்றத்தின் பின்னணியில் உள்ள காரணங்களை கண்டறிய வேண்டியது அவசியமாகும். எனவே, அத்தகைய பிரச்சினைகளை கண்டறிய கருத் திட்டங்களின் மாதிரி (உரிமம் வழங்கப்பட்டது) ஆய்வு செய்யப்படும். இனங்காணல்களின் அடிப்படையில், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பிரச்சினைகள் கண்டறியப்பட்டவுடன், இபொபஆ மின்சாரத் துறையில் ஒழுங்குறுத்தும் தரப்பாக தலையிடலாம். பிற நிறுவனங்களின் கீழ் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு, இனங்காணப்பட்ட சிக்கல்களையும் மற்றும் சாத்தியமான தீர்வுகளையும் சுட்டிக்காட்டி, அரசாங்கத்திற்கு தேவையான கொள்கை வழிகாட்டல்களை இபொபஆ வழங்கலாம். இனங்காணப்பட்ட சிக்கல்களை/இடையூறுக ளை குறைக்கலாம். அந்தக் கருத் திட்டங்களை விரைவாக செயல்படுத்தவும், க்றிட் மின்சார முறைமைக்கு தேவையான மேலதிக மின் உற்பத்தியை பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.		
AP/2021/LIC/ CP/02	விலக்களிக்கப்பட்டு ள்ள தரப்புகளின் (மின்சார உற்பத்தி/விநியோ கம் மற்றும் பகிர்ந்தளிப்பு ஆகியவற்றுக்கு உரிமம் பெறுவதற்கான தேவையிலிருந்து	விலக்களிக்கப்பட்டுள்ள தரப்புகள் (மின்சார உற்பத்தி/விநியோகம் மற்றும் பகிர்ந்தளிப்பு ஆகியவற்றுக்கு உரிமம் பெற வேண்டிய தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ள தரப்புகள்) தற்போது	தரநியமம், நம்பகத்தன்மை, போட்டி, நுகர்வோரின் உரிமைகள் மற்றும் கடமைகள் போன்றவற்றின் காரணமாக, விலக்களிக்கப்பட்டுள்ள தரப்புகள் மற்றும் அவற்றின்	5,000,000 .00

	விலக்கு அளிக்கப்பட்டுள்ள) ஒழுங்குறுத்துகைக் கட்டமைப்பை மீளாய்வு செய்து திருத்துதல்	விதிவிலக்கு சான்றிதழ் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிபந்தனைகள் ஆகியவற்றின் மூலம் இலகுவாக கட்டுப்படுத்தப்படுகின்றன. சமீப காலங்களில், நிர்மாணத் துறையின் விரைவான வளர்ச்சியுடன், கலப்பு அபிவிருத்திக் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் சில புதிய வணிக மாதிரிகளும் உருவாக்கப்படுகின்றன. அங்கு மின்சார விநியோகம் மற்றும் அத்தகைய மாதிரிகளின் விநியோகம் என்பவற்றுக்கு ஏற்கனவே உள்ள ஒழுங்குறுத்துகைக் கட்டமைப்பில் விலக்களிக்க முடியாது. மேலும், விலக்களிக்கப்பட்டுள்ள தரப்புகளுக்கு கிடைக்கும் பொருளாதார, பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஒழுங்குறுத்தும் சாதனங்கள் தற்போது மிகவும் குறைவாகவே உள்ளன. மின்சார உற்பத்தி/விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றின் தற்போதைய ஒழுங்குறுத்துகைக் கட்டமைப்பானது அனைத்து அக்கறையுடை தரப்புகளினதும் இன்றைய மற்றும் வருங்கால நலன்களைக் கருத்தில் கொண்டு சரியான முறையில் மறுபரிசீலனை செய்யப்படுதல் வேண்டும். மேலும், பொருளாதார, பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப விதிமுறைகளுக்கு தேவையான ஒழுங்குறுத்தும்	குத்தகைதாரர்கள், தற்போது எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகிறார்களோ அதைவிடவும் மிகவும் திறம்பட கட்டுப்படுத்தப்படுதல்.	

		சாதனங்களும் அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். எனவே, புதிய முன்னேற்றங்களுக்கு ஏற்ப அதன் இடைவெளிகளை இனங்காணும் பொருட்டு தற்போதுள்ள ஒழுங்குறுத்துகைக் கட்டமைப்பை மீளாய்வு செய்ய வேண்டும். இந்த நோக்கத்தின் நிமித்தம், புதிய ஒழுங்குறுத்துகை சாதனங்களைத் தயாரிப்பதற்காக தற்போதுள்ள ஒழுங்குறுத்துகைக் கட்டமைப்பிற்கு மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களைக் கொண்டு வரும் பொருட்டு ஒரு ஆலோசகர் பணிக்கமர்த்தப்படுவார். முதல் கட்டமாக, LIC பிரிவால், இந்த ஆலோசனையின் கீழ் மேற்கொள்ளப்படும் பணியின் நோக்கத்தை கண்டறிய, ஒரு சிறு கணக்கெடுப்பு நடத்தப்படும். பின்னர், அதன்படி அந்த ஆலோசகர் பணிக்கமர்த்தப்படுவார். ஆலோசகரின் வெளியீட்டைக் கொண்டு, இபொபஆ ஏற்கனவே உள்ள ஒழுங்குறுத்துகை சாதனங்களை திருத்தலாம்/மாற்றலாம் அத்துடன் விலக்களிக்கப்பட்டுள்ள தரப்புகளை பொறுத்து புதிய ஒழுங்குறுத்துகை சாதனங்களை திணிக்கலாம். அதன்படி, இந்த திருத்தப்பட்ட ஒழுங்குறுத்துகைக் கட்டமைப்பு மற்றும் புதிய ஒழுங்குறுத்துகை சாதனங்கள் என்பவற்றின் மூலம், அனைத்து அக்கறையுடைய தரப்புகளின் நலன்களை (தரம், நம்பகத்தன்மை, போட்டி, நுகர்வோரின் உரிமைகள் மற்றும்		

		கடமைகள், முதலியன) பூர்த்தி செய்யும் இறுதி இலக்குடன் இபொபஆ விலக்களிக்கப்பட்ட தரப்புகளை சிறந்த முறையில் கட்டுப்படுத்த முடியும்.		
AP/2021/LIC/CP/26	வீதிகளுக்கும் மற்றும் பொது இடங்களுக்கும் தேவையான மின்விளக்குகளை வடிவமைத்தல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுக்கான தரநியமங்களை தயாரித்தல் மற்றும் நிறுவன செயற்பாட்டுக் கட்டமைப்பில் கொள்கை ரீதியான ஆலோசனைகளை வழங்குதல்	வீதிகளுக்கும் மற்றும் பொது இடங்களுக்கும் தேவையான மின்விளக்குகள் என்று வரும்போது, இலங்கை மின்சார சபை, இலங்கை தனியார் மின்சார நிறுவனம், இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் போன்ற பல நிறுவனங்கள் அதன் வடிவமைப்பு, நிறுவுகை இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளன. தற்போது, மேலே கூறப்பட்ட அனைத்து நிறுவனங்களும் பல்வேறு வழிகளில் தெரு மின்விளக்குகளை வழங்குவதில் பகுதியளவில் அல்லது முழுமையாக ஈடுபட்டுள்ளன. இச்சூழலின் காரணமாக, பல்வேறு தொழில்நுட்ப, நிதி மற்றும் சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்திய வீதிகளுக்கும் மற்றும் பொது இடங்களுக்கும் தேவையான வடிவமைப்பு, நிறுவுகை, இயக்கச்செயற்பாடு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மின்விளக்கு முறைமைக்கு எந்த நிறுவனமும் இணங்க வேண்டிய கட்டாயம் இல்லை. எனவே, வீதிகளுக்கும் மற்றும்	வீதிகளுக்கும் மற்றும் பொது இடங்களுக்கும் தேவையான மின்விளக்குகளை வடிவமைத்தல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுக்குரிய தனித்துவமான தரநியமங்களால் அனைத்து அக்கறையுடைய தரப்புகளும் பயன் அடைதல்.	3,000,000.00

		பொது இடங்களுக்கும் தேவையான மின்விளக்குகளை வடிவமைத்தல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றின் நிமித்தம் தனித்துவமான தரநியமங்களை அறிமுகப்படுத்துவது அவசியமாகும். மேலும் வீதிகளிலும் மற்றும் பொது இடங்களிலும் உள்ள மின்விளக்குகளை நிர்வகிப்பதற்கான சிறந்த நிறுவன கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகும். வீதிகளுக்கும் மற்றும் பொது இடங்களுக்கும் தேவையான மின்விளக்குகளை வடிவமைத்தல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுக்கு தேவையான தரநியமங்களை உருவாக்குவதற்கு இபொபஆ திட்டமிட்டுள்ளது. பகுப்பாய்வு, ஆய்வு மற்றும் கொள்கை ஆலோசனை என்பவற்றுக்கு பின்னர் இதனை செயற்படுத்துவதற்கான சிறந்த நிறுவன கட்டமைப்பு உருவாக்கப்படும். அதன் மூலம், ஒவ்வொரு நிறுவனமும் வீதிகளுக்கும் மற்றும் பொது இடங்களுக்கும் தேவையான மின்விளக்குகள் தொடர்பாக அதன் பணியின் நோக்கத்தை வரையறுக்கலாம். இது முறையாக செயற்படுத்தப்படுவதை இபொபஆ கண்காணிக்கும்.		

AP/2021/LIC/CP/28	மின்சாரப் பகிர்ந்தளிப்பு பற்றிய விதிக்கோவைக்கான திருத்தங்கள்	தற்போதுள்ள மின்சார விநியோக விதிக்கோவை 2012 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. இது 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இபொபஆ ஆல் அங்கீகரிக்கப்பட்டது. மின்சார விநியோக முறைமையில் பல முன்னேற்றங்கள் குறிப்பாக சமீபத்தில் கூரை மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சூரிய சக்தி பிவி (சூரிய சக்தி பெட்ல், தேறிய மாணிவாசிப்பு, நெட்-ப்ளஸ்), உட்பொதிக்கப்பட்ட மின்பிறப்பாக்கிள் ஒருங்கிணைப்பு (நீர்வலு, சூரிய சக்தி, காற்று சக்தி, உயிரணுத்திணிவு சக்தி) போன்றவை. இந்த அபிவிருத்தி மின்சாரத்தின் தரம், மின்சார விநியோகத்தின் தரம், நிலைநிறுத்தல், முறிவு மட்டம், மின்சாரப் பகிர்ந்தளிப்பு வலையமைப்பின் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு) போன்ற பல்வேறு மாற்றங்களுக்கு காரணமாக அமைந்துள்ளது. இந்த சேவையின் நிமித்தம் ஏற்கனவே ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதால், இந்த செயற்பாட்டின் மூலம் தேவையான திருத்தங்களை செய்வதற்கும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு விதிக்கோவையை நடைமுறைப்படுத்துவதற்கும் இபொபஆ ஒருங்கிணைப்பு செய்யும்.	மின்சாரப் பகிர்ந்தளிப்பு விதிக்கோவை இற்றைப்படுத்தப்படுவதால் மின்சாரத்தின் தரமும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு வலையமைப்பின் தரமும் மேம்படுதல்.	1,800,000.00
AP202**2**/LIC/RU/01	மின்சக்தித் துறை அனுமதிப் பத்திரம் வழங்கலும் மற்றும் அதனுடைன் சம்பந்தப்படும் செயல்முறைகளும்	2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தல்) சட்டத்தின் 7, 9, 10, 12,13, 21 மற்றும் 22 ஆம் பிரிவுகளுக்கும் மற்றும் 2009 ஆம்	விண்ணப்பதாரர்கள் தமது மின்சார உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றை நாட்டின் குறித்த சட்டக்	1,200,000.00

		ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் திகதி வியாழக்கிழமை வெளியிடப்பட்ட 2009 இன் 1,617/34 ஆம் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மின்சார ஒழுங்குவிதிகளுக்கும் (அனுமதிப் பத்திரங்களுக்கும் மற்றும் விலக்களிப்புகளுக்குமான விண்ணப்பங்கள்) இணங்க மின்சக்தித் துறையை ஒழுங்குறுத்தும் பொருட்டு இபொபஆ அனுமதிப் பத்திரங்களை/விலக்களிப் புகளை வழங்கும்.	கட்டமைப்பின்படி செயற்படுத்துவதற்கு தகுதி பெறுதல்.	
AP202**2**/LIC/RU/03	மின்சாரப் பகிர்ந்தளிப்பு செயல்திறன் நியமங்கள் ஒழுங்குவிதியை செயற்படுத்துதல்	2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மின்சார (மின்சாரப் பகிர்ந்தளிப்பு), செயல்திறன் தரநியமங்கள் ஒழுங்குவிதிகள் பிரகாரம், விநியோகத்திற்கு உரிமம் பெற்ற தரப்புகள் ஒழுங்குறுத்துகை முறையியலினால் இனங்காணப்பட்ட பணிகளின் தொகுப்பை செயற்படுத்த வேண்டும். அந்த ஒழுங்குறுத்துகை முறையியல் செயற்படுத்துகைப் பகுதி, பூர்வாங்க, தழுவல் மற்றும் இணைத்தல் எனப்படும் மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள், தழுவல் கட்டத்தை செற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.	மின்சாரப் பகிர்ந்தளிப்பு வலையமைப்பினது மின்சாரத்தின் தரமும் மற்றும் விநியோகத்தின் தரமும் மேம்படும். மின்சாரத்தின் தரம் மற்றும் விநியோகத்தின் தரம் சம்ப்பட்ட தகவல்கள் கிடைத்தல்.	0
AP/2022/LIC/RU/04	தகவல்களைப் பரப்புதல் (மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கு உரிமம் பெற்ற தரப்பு செயல்திறன் அறிக்கைகள்)	மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கு உரிமம் பெற்ற தரப்புகள் சமர்ப்பித்த தரவுகளை பகுப்பாய்வு செய்து அவற்றின் செயல்திறன்களின் அடிப்படையில் காலாண்டு அறிக்கைகளை தயாரித்தல்.	அக்கறையுடைய தரப்புகளுக்கு தகவலை அணுகும் வாய்ப்பு கிடைத்தல்.	0

AP/2022/LIC/ RU/06	LISS நிருவாகம் (உரிமம் பெற்ற தரப்பு தகவல் சமர்ப்பண முறைமை)	முறைமை கண்காணிப்பும் மற்றும் இற்றைப்படுத்தலும் குறித்த முறைமையில் மேற்கொள்ளப்படும்.	அக்கறையுடைய தரப்புகளுக்கு தகவலை அணுகும் வாய்ப்பு கிடைத்தல்.	0
AP/2022/LIC/ RU/08	மின்சாரப் பகிர்ந்தளிப்பு விதிக்கோவையை செயற்படுத்துதல்	மின்சாரப் பகிர்ந்தளிப்பு விதிக்கோவையின்படி, பகிர்ந்தளிப்பு விதிக்கோவையை செயற்படுத்தும் நிமித்தம் மீளாய்வுக் குழு (DCERP) கூட்டத்தை நடத்த வேண்டும். இதன் போது DL களின் விநியோக முறை தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் மின்சாரப் பகிர்ந்தளிப்பு விதிக்கோவையின் கீழ் கலந்துரையாடப்படும். கலந்துரையாடிய செயற்பாடுகள் செயற்படுத்தப்படுவதை இபொபஆ ஒருங்கிணைப்பு செய்யும்.	மின்சாரப் பகிர்ந்தளிப்பு வலைமையப்பின் மின்சாரத்தின் தரமும் மற்றும் மின்சார விநியோகமும் மேம்படுதல்.	0
AP/2022/RA/L IC/33	குறுங்கால சக்திப் பாதுகாப்பு பற்றிய அறிக்கை	மின்சார விநியோகத்திற்கு ஏற்படும் குறுங்கால ஆபத்துக்களை இனங்கண்டு, அத்தகைய ஆபத்துக்களை குறைப்பதன் முக்கியத்துவம் பற்றி உரிய நிறுவனங்களுக்கு ஆலோசனையை வழங்கி மின்சார விநியோகம் தொடர்ந்திருப்பதை உறுதிசெய்தல். இந்த விநியோகங்களின் ஊடாக பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இபொபஆ திட்டமிடுகின்றது. • மின்சார செலுத்துகைக்கு உரிமம் பெற்ற தரப்புகளின் அனுப்புகை எதிர்வுகூறல்கள், ஏற்கனவேயிருக்கின்ற நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்கள், நீர்த்தேக்க நீர்மட்டங்களில்	மின்சார விநியோகத்தின் தொடர்தன்மை உறுதிப்படுத்தப்படுதல்.	0

		நிலவிய கடந்தகால வித்தியாசங்கள் மின் உற்பத்திப் பொறித் தொகுதிகளின் பராமரிப்புத் திட்டங்கள் மற்றும் எரிபொருள் விநியோகத்தில் உள்ள ஏதாவது பிரச்சினைகள் என்பவற்றை மீளாய்வு செய்து அடுத்த ஆறு மாத காலத்திற்குள் சாத்தியமான ஆபத்துக்களை கண்டறிதல். • கண்டறியப்பட்ட ஆபத்துக்களின் நிமித்தம் தணிப்பு நடவடிக்கைகளை முன்மொழிதல். • உரிய அதிகார சபைகளுக்கு (உ-ம்: இமிச, மின்வலு சக்தி அமைச்சு முதலியன) ஆலோசனை வழங்குதல்.		
AP/2022/RA/LIC/10	மின்னுற்பத்தி மற்றும் மின்சார செலுத்துகை செயல்திறன் அறிக்கைகள்	அக்கறையுடைய தரப்புகளின் மூலம் சரியான தீர்மானம் எடுக்கப்படுவதை இயலச்செய்யும் பொருட்டு மின்னுற்பத்தி மற்றும் மின்சார செலுத்துகை செயல்திறன் அறிக்கைகளை வெளியிடுதல். அந்த அறிக்கைகள் பின்வருமாறு: -365 நாள் கால அறிக்கைகள் -12 மாக கால அறிக்கைகள்	தீர்மானமெடுக்கும் செயல்முறையில் பங்குபற்றும் பொருட்டு அக்கறையுடைய தரப்புகளுக்கு தகவல்கள் கிடைத்தல்.	0

		-2 அரையாண்டு மின் உற்பத்தி அறிக்கைகள் -2 அரையாண்டு மின்சார செலுத்துகை அறிக்கைகள்		
AP/2022/RA/LIC/09	அங்கீகாரத்தின் நிமித்தம் புதிய மின்னுற்பத்திப் பொறித் தொகுதி முன்மொழிவுகளை மீளாய்வு செய்தல் மற்றும் மின்னுற்பத்தித் திட்டத்தின் செயற்படுத்துகைய கண்காணித்தல்	மின்சார செலுத்துகைக்கு உரிமம் பெற்ற தரப்பு இலங்கை மின்சார சட்டத்தின் 43 ஆம் பிரிவின் பிரகாரம், கொள்வனவு செயல்முறையை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆரம்ப அங்கீகாரத்தையும் மற்றும் பெறுகை செயல்முறையிலிருந்தும் மற்றும் சக்திக் கொள்வனவு ஒப்பந்தத்திலிருந்தும் பரிந்துரை செய்யப்படும் நபருக்கான அங்கீகாரத்தையும் பெற வேண்டும். புதிய மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளின் செயற்படுத்துகைக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும் போது அவற்றை இபொபஆ மீளாய்வு செய்து இந்த செயற்பாட்டின் ஊடாக அவற்றுக்கு ஆணைக்குழு தனது தீர்மானங்களை பெற்றுக் கொடுக்க வேண்டும். மின்னுற்பத்தித் திட்டத்தின் செயற்படுத்துகையையும் இபொபஆ காலாண்டு ரீதியில் கண்காணிக்கும்.	மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகள் காலத்திற்கேற்ப செயற்படுத்தப்படுவதால் சக்திக்கான அனைத்து கேள்வியும் மற்றும் கொள்ளளவும் உறுதிப்படுத்தப்படுதல். அதிக ஆகுசெலவு குறைந்த மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளின் கிடைப்புத்தன்மை உறுதிப்படுத்தப்படுதல்.	0
AP 20/CP/LIC/04	அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் - மின்சக்தித் துறை	இயற்கைக் காரணிகளினால் அல்லது மனிதனின் செயற்பாடுகளினால் ஒரு அனர்த்தம் ஏற்படும் போதும் மற்றும் அந்த அனர்த்தத்தின் பின்னரும் மின்சார விநியோகத்தை பேணுவதற்கு ஒரு தேசிய-மட்டத்திலான திட்டம் இருப்பது அவசியமாகும். அத்தகைய ஒரு	தொடர்ச்சியான மின்சார விநியோகம் (குறிப்பாக ஒரு அனர்த்தத்தின் போதும் மற்றும் அதன் பின்னரும்) மேம்படுதல்.	10,000.00

		அனர்த்தத்தின் போதும் மற்றும் அதன் பின்னரும் குறித்த திட்டம் மின்சார சேவை தொடர்ந்து கிடைப்பதையும் மற்றும் வினைத்திறன் வாய்ந்த வள ஒதுக்கீடுகளையும் உறுதிசெய்ய வேண்டும். அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களை பொதுப் பயன்பாட்டு சேவைகள் வழங்கும் தரப்புகள் தயாரிக்க வேண்டும். சர்வதேச சிறந்த செயன்முறை சான்றிலிருந்து, ஒழுங்குறுத்தப்படும் பயன்பாட்டு நிறுவனங்கள் அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களை தயாரிப்பதையும் மற்றும் செயற்படுத்துவதையும் உறுதிசெய்வதில் பொதுப் பயன்பாட்டு ஒழுங்குறுத்தும் அமைப்புகள் முக்கியமான ஒரு பங்கை வகிக்க வேண்டும். ஆதலால், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வழிகாட்டலின் கீழ், மின்சாரக் கைத்தொழில் நிறுவனங்களினால் அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் தயாரிக்கப்படுவதை இலகுபடுத்துவதற்கு இபொபஆ ஒரு திட்டத்தைக் கொண்டுள்ளது.		
AP/2020/CP/LIC/03	நீண்டகால மின்சார செலுத்துகை அபிவிருத்தித் திட்டத்தை மீளாய்வு செய்து அங்கீகரித்தல்	திட்டமிடும் விதியிலும், மின்சார செலுத்துகை அனுமதிப் பத்திரத்திலும் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு, மின்சார செலுத்துகை உரிமம் பெற்ற தரப்பு, அங்கீகரிக்கப்பட்டுள்ள குறைந்த உற்பத்தி ஆகுசெலவுடைய நீண்டகால மின்னுற்பத்தி விரிவாக்கல் திட்டத்திற்கு இணங்க,	மின்சார விநியோகம் தொடர்ந்து கிடைத்தல் மற்றும் மின்சாரத்தின் தரம் மேம்படுதல்.	500,000.00

		ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் நிமித்தம் நீண்டகால மின்சார செலுத்துகை அபிவிருத்தித் திட்டத்தை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அதனை ஆணைக்குழு மீளாய்வு செய்து அங்கீகரிக்க வேண்டும். குறித்த திட்டம் அடுத்த 10 ஆண்டுகளினுள் மின்சார செலுத்துகை முறைமையின் விரிவாக்கத்திற்கான முன்மொழிவுகளை இனங்காணும். ஆகையால் மின்சார விநியோகத்தின் பாதுகாப்புத்தன்மையையும், நம்பத்தகுதன்மையையும் மற்றும் பொதுவான பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் பொருட்டு போதிய மின்சார செலுத்துகைக் கொள்ளளவு காணப்படுகின்றதா என்பதை குறித்த திடடம் உறுதிசெய்ய வேண்டும். மேலும் புதிய சொத்துக்களின் மூலதன ஆகுசெலவு, இயக்கச்செயற்பாட்டு செலவினம் மற்றும் தேய்மானம் என்பன வரிக்கட்டணத்தின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு சாட்டப்படுவதற்கு தேவைப்படுத்தப்படுவதால் மின்சார செலுத்துகைத் திட்டத்தின் அங்கீகாரம் மிக முக்கியமானதாகும்.		
AP/2022/RA/LIC/34	மின்சார செலுத்துகை செயல்திறன் நியமங்கள் ஒழுங்குவிதிகள் செயற்படுத்துகை	மின்சார சட்டத்திற்கு இணங்க ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள மின்சார செலுத்துகை செயல்திறன் நியமங்கள் ஒழுங்குவிதிகள் செயல்வலுப்பெற்றிருக்கும் . மின்சார செலுத்துகைக்கு உரிமம் பெற்ற தரப்பும் (TL) மற்றும் ஆணைக்குழுவும்	மின்சார செலுத்துகை முறைமையில் எழும் தரப் பிரச்சினைகளும் மற்றும் மின்சார தடங்கல்களும் குறைவதன் ஊடாக மின்சார விநியோகத்தின் தரம் மேம்படுதல்.	5000.00

		அதனை செயற்படுத்துவதற்கான ஒரு முறையியல் குறித்த ஒழுங்குவிதிகளில் உள்ளடங்கியிருக்கும். ஆகையால், ஆணைக்குழு (TL) தரப்புகளுடன் இணைந்து அந்த ஒழுங்குவிதிகளை செயற்படுத்துவது அதன் ஒரு சட்டமுறையான தேவைப்பாடாகும். பல காலமாக இற்றைப்படுத்தப்படும் செயல்திறன் இலக்குகளை அடைவதன் மூலம் மின்சார செலுத்துகை முறைமையின் செயல்திறன் இந்த ஒழுங்குவிதிகளின் ஊடாக மேம்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.		

மின்சாரக் கைத்தொழில்
பலன் 02
மின்சார நுகர்வோருக்கு சுமக்கக்கூடிய விலையும் மற்றும் உரிமம் பெற்ற தரப்புகளுக்கு நிலையான நிதி ஸ்திரத்தன்மையும்

குறிப்பு இலக்கம்	செயற்பாடு	செயற்பாடு பற்றிய விபரம்	அக்கறையுடைய தரப்புகளுக்கு கிடைக்கும் நன்மைகள்	நேரடி ஆகுசெலவு (இ.ரூ.)
AP/2022/RA/CP/06	திறந்த அணுகல் மற்றும் மின்சார விலை நிர்ணயம் பற்றிய கொள்கை ஆலோசனை	தற்போது பாவனையில் உள்ள தனிக் கொள்வனவாளர் சந்தைக் கட்டமைப்பு மின் உற்பத்தித் தரப்புகளுக்கு இடையில் போட்டியை ஊக்குவிப்பதில்லை. ஆகையால், போட்டியை ஊக்குவிக்கும் ஒரு புதிய மாதிரித் திட்டம் அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். இது இலங்கையில் திறந்த அணுகலை ஊக்குவிக்கும். கொள்கை ஆலோசனை	போட்டியும் மற்றும் நியாய விலையும் ஊக்குவிக்கப்படுதல்.	

		ஆவணம் விடய அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டு பரிந்துரைகள் செயற்படுத்தப்படும் வகையில் செல்வாக்கு செலுத்தப்படும்.		
AP22/CP/TEA/01	விலக்களிக்கப்பட்டுள்ள மின்சாரப் பகிர்ந்தளிப்பு தரப்புகளுக்கான விலை அணவல் முறையியல்	ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு காணப்படுகின்ற முறையியல் அதிகம் சிக்கல்வாய்ந்தது. ஆகையால் கூட்டுஆதன மின்சார நுகர்வோரின் மின்சாரப்பளு குறிப்புத் தரவுகள் சேகரிக்கப்படுதல் வேண்டும். விலக்களிக்கப்பட்டுள்ள சிறு/நடுத்தர அளவான தரப்புகளுக்கு எவ்வாறு வழங்க வேண்டும் என்ற அறிவு/வளங்கள் பற்றாக்குறையாக இருக்கலாம். ஆகையால், வரிக்கட்டணங்களை நிர்ணயிப்பதற்கு /அங்கீகரிப்பதற்கு ஆணைக்குழு தனி சராசரி ஆகுசெலவுகளை பிரியோகித்து (முன்னர் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டலின் அடிப்படையில்) வருகின்றது. எளிதாக்கப்பட்டுள்ள கூட்டுஆதன சராசரி ஆகுசெலவு அணுகுமுறையைக் கொண்டு, அதிகளவான கூட்டுஆதன/விலக்கப்பட்டுள்ள மின்சாரப் பகிர்ந்தளிப்புத் தரப்புகள் நாட்டில் நிகழ்கின்ற நகரமயமாக்கல்களினால் வளர்ந்து வருகின்றன. அதன் பயனாக, ஒவ்வொரு மின்சாரப் பகிர்ந்தளிப்புத் தரப்பு வரிக்கட்டணத்தை அங்கீகரிக்கும் வேலைப்பளு (தொடர்பாடல், சரிசெய்தல், அங்கீகரித்தல், வெளியிடுதல்) அதிகரித்து வருவதால்	மின்சார நுகர்வோருக்கு மிகவும் நியாயமான சமமான வரி மற்றும் கட்டண வாய்ப்புகள் கிடைத்தல். கட்டண செயல்முறையை விதிக்கின்ற விலக்களிக்கப்பட்டுள்ள தரப்புகளில் வெளிப்படடைத்தன்மை மேலும் மேம்படுதல்.	1,600,000

		அது நிருவாக ரீதியில் சுமையாக காணப்படுகின்றது. புதிய கூட்டுஆதன அபிவிருத்தித் தரப்புகளும் மற்றும் ஆணைக்குழுவும் அநேகமாக அவற்றின் கொள்வனவுக் கட்டண வகுதி அடிப்படையில் தங்கியிருக்கின்ற ஒரு தொகுதி விலை அணவல்களும் மற்றும் உள்ளக மின்சார நுகர்வோர் வகுதியும் அபிவிருத்தி செய்யப்பட்டால் (இமிச/லெகோ நிறுவன மின்சார நுகர்வோர் வரிக்கட்டணத்தைக் கொண்டு திருத்தப்பட்ட) இரு தரப்புகளுக்கும் இலகுவாக இருக்கும். விலக்களிக்கப்பட்டுள்ள மின்சாரப் பகிர்ந்தளிப்புத் தரப்புகள் ஏற்கனவே சமர்ப்பித்த தரவுகளின் அடிப்படையில், அவற்றின் கொள்வனவு (இமிச/லெகோ) கட்டணத்தில் தங்கியிருக்கின்ற ஒரு தொகுதி விலை அணவல்களும் மற்றும் உள்ளக மின்சார நுகர்வோர் வகுதிகளும் கணிப்பிடப்பட்டு ஒரு தொகுதி சூத்திரங்களாக வெளியிடப்படுதல் வேண்டும். இதனால் எவராலும் அவர்களின் ஏற்புடைய விலை அணவலை கணிப்பிட்டுக்கொள்ள முடியும். மேலும் ஆணைக்குழுவினால் ஒரு அங்கீகார செயல்முறையை தொடரும் பொருட்டு விலை அணவல்களின் செயற்படுத்துகையையும் மற்றும் தனித்துவத்தையும் (நியமப்படுத்தப்பட்டுள்ள விலை அணவல்களின் கீழ் வராத தரப்புகள்)		

		கண்காணிப்பதற்கும் மற்றும் மதிப்பிடுவதற்கும் வழிகாட்டல் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.		
AP22/CP/TEA /02	சுழற்சித் தெரிவுகள் மற்றும் சுழற்சிக் கட்டணங்கள் பற்றிய ஆய்வு	சக்தி சுழற்சி அனுமதி மின் உற்பத்திக் கைத்தொழிலுக்கு தனியார் துறை முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக இந்தியா போன்ற நாடுகள் இந்த நடவடிக்கையிலிருந்து அதிகம் வெற்றியடைந்துள்ளன. 2030 ஆம் ஆண்டளவில் 70% மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி என்ற அடைவதற்காக புதிதாக வெளியிடப்பட்டுள்ள கொள்கை இலக்கானது அத்தகைய இலக்கை அடைவதற்கு பல நடவடிக்கைகளை தேவைப்படுத்தும் துல்லியமான ஒரு இலக்காகும். இலங்கைக்கு பொருத்தமான ஒரு சுழற்சித் தெரிவுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு அத்தகைய தெரிவுகளுக்கு ஏற்புடைய சுழற்சிக் கட்டணங்கள் அடங்கலாக (மின்சார செலுத்துகை மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு கட்டணங்கள்) சர்வதேச ரீதியில் ஒப்பீடுசெய்து ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படும். இந்த செயற்பாட்டில், ஒரு சர்வதேச ஒப்பீட்டு ஆய்வும் மற்றும் இலங்கைக்கு அதன் பொருத்தப்பாடும் பற்றி பகுப்பாய்வு செய்யப்படும். சுழற்சிக் கட்டணங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறைகளும் பகுப்பாய்வு செய்யப்படும்.	ஆகக்குறைந்த மின் உற்பத்தி ஆகுசெலவுகளின் ஊடாக மின்சார வாடிக்கையாளர்களுக்கு மிகவும் நியாயமான சமமான வரி மற்றும் கட்டண வாய்ப்புகள் கிடைத்தல். மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியின் நிமித்தம் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கொள்கை இலக்குகள் அடையப்படுதல்.	0

		சுழற்சிப்படுத்தலின்/சுழற்சிப்படுத்தல் கட்டணங்களின் நிமித்தம் சிபாரிசுகள் சுருக்கமாக கையாளப்படும்.		
AP22/CP/TEA/03	ஆயத்தக் கட்டணத்தை உருவாக்குதல்	மின்கல சேமிப்பு முறைமைகளில் உள்ள ஒருபோதும் குறையாத ஆகுசெலவினால் (வீட்டு அளவிலும் மற்றும் வர்த்தக அளவிலும்), மின்சார நுகர்வோர் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி கொண்ட க்றிட் மின்சாரத்திலிருந்து அல்லது இயற்கை எரிவாயு மின்னுற்பத்தியிலிருந்து முழுமையாக தனிப்பட்டுள்ள செயற்பாட்டை தேர்ந்தெடுத்து க்றிட் மின்சாரத்தை ஒரு ஆயத்த மின்சார விநியோகமாக பாவிக்கலாம். இவற்றை க்றிட் மின்சார முறைமைகளுக்கான வாகனங்களுக்கு (மின்சார வாகன மின்கலங்கள்) குறைநிரப்பியாகவும் பயன்படுத்தப்படலாம். நம்பத்தகுதன்மை/மின்சாரத்தின் தரம் சார்ந்த பிரச்சினைகள், ஆகுசெலவு சார்ந்த பிரச்சினைகள் அல்லது ஏனைய பசுமை அடையாளங்கள் என்பவற்றின் காரணமாக இது காணப்படலாம். இவை க்றிட் மின்சார முறைமையிலிருந்து ஏதாவது மின்சாரத்தை கொள்வனவு செய்யாமல் அல்லது க்றிட் மின்சார முறைமைக்கு பகல்-நேர மின் உற்பத்தியின் போது (இலங்கை ஏற்கனவே ஒரு பகல்நேர உச்ச அளவைக் கொண்டுள்ளது) உதவியில்லாமல் சூரிய சக்தியுடன் (மின்களஞ்சியமின்றி தேறிய மாணிவாசிப்பு இருக்கும் பட்சத்தில்)	மின்சார வாடிக்கையாளர்களுக்கு மிகவும் நியாயமான சமமான வரி மற்றும் கட்டண வாய்ப்புகள் கிடைத்தல்.	0

		இறுதியாக முடியுமானால், ஏற்கனவேயிருக்கின்ற வரிக்கட்டணக் கட்டமைப்பு ஏனைய மின்சார நுகர்வோருக்கு (ஆயத்த க்றிட் மின்சாரத்திற்கு அல்லது மின்னுற்பத்தி கிடைத்தலுக்கு கட்டணங்களை செலுத்தும்) (வீட்டுப் பாவனையாயின் ஆயத்த மின்சார நுகர்வோர் இரூ 30/மாதம் என்ற கட்டணத்தை மாத்திரம் செலுத்தும் மின்சார நுகர்வோர்) அதிக செலவை ஏற்படுத்தும். ஆயத்த மின்சார விநியோகத்திற்கு பொருத்தமான ஒரு வரிக்கட்டணத் தெரிவுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு சர்வதேச ஒப்பீட்டு ரீதியில் ஒரு ஆய்வு நடத்தப்படும். ஆயத்த வரிக்கட்டணங்களின் நிமித்தம் இலங்கைக்கான பரிந்துரைகளும் செய்யப்படும்.		
AP22/CP/TEA /04	புகையிரத சக்திற்கான வரிக்கட்டணத்தை உருவாக்குதல்	போக்குவரத்து முறைமையை மின்சாரமயப்படுத்துவது நெருங்கிய எதிர்காலத்தில் முக்கியமும் மற்றும் தவிர்க்கவியலாததுமாகும். ஆதலால் ஏற்கனவேயிருக்கின்ற மின்சாரப்பளுக் குறிப்புக்கு உதவும் அதன் தனித்துவமான மின்சாரப்பளுக் குறிப்பைக் கருத்திற்கொண்டு ஒரு விசேட வரிக்கட்டணம் தேவைப்படுத்தப்படலாம். இலங்கைக்கு பொருத்தமான ஒரு புகையிரத சக்தி வரிக்கட்டணத்திற்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு சர்வதேச ஒப்பீட்டு ரீதியில் ஒரு ஆய்வு நடத்தப்படும். ஒரு	மின்சார வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் போக்குவரத்துத் தரப்புகளுக்கும் மிகவும் நியாயமான சமமான கட்டண வாய்ப்புகள் கிடைத்தல்.	0

		கட்டணக் கணிப்பீடும் முன்மொழியப்படும். அந்தக் கட்டணக் கணிப்பீடு சாத்தியவள ஆய்வுகள் முதலியவற்றின் நிமித்தம் பயன்படுத்தப்படலாம்.		
AP22/CP/TEA /05	EV வாகனங்களுக்கு மின்னேற்றும் நிலையங்களுக்கான விலை அணவல்கள் பற்றிய ஆய்வு	ஆணைக்குழு இமிச இற்கு சொந்தமான மின்சார வாகனங்களுக்கு மின்னேற்றும் (EVCS) நிலையங்களின் கட்டணத்தை அங்கீகரித்துள்ளது. தனியாருக்கு சொந்தமான அத்தகைய மின்னேற்றும் நிலையங்கள் மின்சாரத்தை விற்பனை செய்வதற்கு ஒரு அனுமதிப் பத்திரத்தை / விலக்களிப்பை பெற வேண்டும் என்பதால் அவற்றின் கட்டணங்கள் ஒழுங்குறுத்தப்படவில்லை . EVCS நிலையங்களில் கிடைக்கக்கூடிய வித்தியாசமான மின்னேற்றல் வகைகளுக்கு, உதாரணமாக சொக்கெற்று அவுட்லெட்டுக்கள், ஸ்லோ சார்ஜிங், டீசி துரித சார்ஜிங் முதலிய ஏற்பாடுகளின் நிமித்தம் ஏற்புடைய விலை அணவல்களை / கட்டணங்களை நிர்ணயிக்கும் பொருட்டு ஒரு ஆய்வு நடத்தப்படும்.	மின்சார வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் EVCS இயக்குதரப்புகளுக்கும் மிகவும் நியாயமான சமமான கட்டண வாய்ப்புகள் கிடைத்தல்.	0
AP22/CP/TEA /06	மின்சாரக் கைத்தொழிலின் போரெக்ஸ் வெளியீடு பற்றிய ஆய்வு	மின்சார உற்பத்திற்கு பயன்படுத்தப்படும் அடிப்படை சக்தியில் 50% வீதத்திற்கும் அதிகமானவை இறக்குமதி செய்யப்படுகின்றது. அதிகமான சக்திக் கொடுப்பனவுகள் தனியார் அனல் மின் உற்பத்திப் பொறித் தொகுதிகளுக்கு ஐஅடொ/யூரோ இல் செலுத்தப்படுகின்றன. இதனால் கைத்தொழிலின்	மிகக்குறைந்த மின் உற்பத்தி ஆகுசெலவுகள் மற்றும் மிகக்குறைந்த போரெக்ஸ் வெளியீடுகள் என்பவற்றின் ஊடாக மின்சார நுகர்வோருக்கு மிகவும் நியாயமான சமமான வரி மற்றும் கட்டண வாய்ப்புகள் கிடைத்தல்.	0

		வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை சற்று அதிகளவில் காணப்படும். ஆதலால் மின்சார நுகர்வோர் அதன் மறைமுக தாக்கங்களுக்கு ஆளாகுகின்றனர். 2023-2030 வரையான காலப்பகுதிற்கு கைத்தொழிலில் இருந்து வெளியாகும் என எதிர்வுகூறும் போரெக்ஸ் வெளியேற்றத்தை கணிப்பிடும் பொருட்டு ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படும். மேலும், மின்சாரக் கட்டணத்தின் மீதான அதன் தாக்கங்கள் அந்த விடயம் தொடர்பாக கொள்கை ஆலோசனையை வழங்குவதற்கான கேள்வி அதிகரிப்பு சூழ்நிலைகள் மற்றும் வித்தியாசமான மின் உற்பத்திக் கலப்பு ஆகியவற்றின் நிமித்தம் பகுப்பாய்வு செய்யப்படும்.		
AP22/CP/TEA /07	பொதுப் பயன்பாட்டு நிறுவன நிதி நிலை மற்றும் வணிக மாதிரி ஆய்வு	2016 ஆம் ஆண்டிலிருந்து இமிச இன் நிதி நிலை குறைவடைந்து வருகின்றது. ஆதலால் முன்னைய நிலைக்கு கொண்டுவரும் பொருட்டு குறுங்கால கடன்வாங்குதலுக்கும் மற்றும் அதிகரித்து வருகின்ற கட்டணங்களுக்கும் அப்பால்சென்று சிந்திக்க வேண்டியுள்ளது. இமிச இன் நிதிப் பலவீனத்திற்கான அடிப்படை காரணிகளை பகுப்பாய்வு செய்யும் பொருட்டு நிதி நிலை பற்றிய ஒரு நிபுணரினால் ஒரு ஆய்வை மேற்கொள்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் இமிச ஆல் எடுக்கப்பட்டுள்ளன. இமிச இன் நிதி	இமிச இன் கிடைப்புத்தன்மையால் குறைந்த கட்டண அடிப்படையில் மின்சார நுகர்வோருக்கு நன்மை கிட்டுதல் மற்றும் மின்சார வலையமைப்பு மேம்பாடுகள் முதலியவற்றுக்கான காலத்தின் அடிப்படையில் இமிச நிதி ரீதியில் சிறந்த முறையில் நிதிடுயிடுவதால் நம்பகத்தன்மை மேம்படுதல்.	3,000,000

		நிலைகளை மேம்படுத்தும் வகையில் செயற்பாடுகளை பரிந்துரை செய்ய இந்த நிபுணர் எதிர்பார்க்கப்படுவார்.		
AP20/CP/TEA /12A	வழங்கப்படாத மின்சக்தியின் மதிப்பீட்டு ஆகுசெலவு பற்றிய ஆராய்ச்சி	வழங்கப்படாத சக்தியின் ஆகுசெலவு (ENS) ஆணைக்குழு அங்கீகரித்துள்ள மின்னுற்பத்தித் திட்டமிடுகை விதிக்கோவையினால் வரையறுக்கப்பட்டுள்ளது. அந்தப் புள்ளிவிபரம் அறிவுபூர்வமாக தொகுக்கப்படவில்லை. ENS ஆகுசெலவை உறுதிசெய்வதற்கும் மற்றும் வழமையான செயற்பாடுகளை இற்றைப்படுத்துவதற்கான ஒரு முறையியலை முன்மொழிவதற்கும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கூட்டொத்துழைப்பில் ஆராய்ச்சியை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சியை 2022 ஆம் ஆண்டு இறுதியில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் மின்சார செலுத்துகைக்கு உரிமம் பெற்ற தரப்புகளின் க்றிட் மின்சார விதிக்கோவைக்கு/அபிவிருத்தித் திட்டங்களுக்கு தேவையான திருத்தங்கள் பற்றி அக்கறையுடைய தரப்புகளுடன் கலந்துரையாடப்படும்.	வழங்கப்படாத சக்தியின் உண்மையான ஆகுசெலவை (பொருளாதார ரீதியில் கோரப்படும் நம்பத்தகு அளவுகளுக்கான வசதி) கருத்திற்கொள்கின்ற போது மின் உற்பத்தித் திட்டங்கள் அனுகூலமடைதல்.	1,230,000
AP22/RU/TEA /01	2023 ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ள கட்டணங்களின் மீளாய்வு	இமிச மற்றும் லெகோ நிறுவனம் ஆகியன தொகுத்து சமர்ப்பித்த கட்டணங்களை ஆணைக்குழு அங்கீகரித்த கட்டணங்களுக்கான ஆகுசெலவு பிரதிபலிப்பு முறையியலின் பிரகாரம் மீளாய்வு செய்தல். இபொபஆ உரிமம்	புதிய மின்சார இணைப்புகளுக்கு நியாயமான சமமான கட்டண வாய்ப்புகள் கிடைத்தல்.	0

		பெற்ற ஒவ்வொரு தரப்பும் சமர்ப்பிக்கும் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களையும், விலைப் பட்டியலையும் மற்றும் கணிப்பீடுகளையும் மீளாய்வு செய்யும். கட்டணங்களை முன்னைய ஆண்டுடனும் மற்றும் வித்தியாசம் பற்றிய பகுப்பாய்வுடனும் ஒப்பிடுதல். தேவைப்படும் பட்சத்தில் உரிமம் பெற்ற தரப்புகளிடமிருந்து விளக்கங்களை பெற்றுக்கொள்ளல். கட்டணங்களை மீளாய்வு செய்து அங்கீகரித்தல். அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்கள் உரிமம் பெற்ற அந்தந்த உரிய மின்சாரப் பகிர்ந்தளிப்புத் தரப்புகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.		
AP22/RU/TEA /02	சிறிய மின்சாரப் பகிர்ந்தளிப்புத் தரப்பு கட்டண மீளாய்வு	மின்சாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் மின்சாரத்தை விநியோகிப்பதற்கும் ஒரு அனுமதிப் பத்திரத்தைப் பெறும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள சிறு மின்சாரப் பகிர்நதளிப்புத் தரப்புகள் அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புக் கட்டளையின் பிரகாரம் அவற்றின் வளாகங்களில் பகிர்ந்தளிக்கப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தை அறவிடுவதற்கு முன்னர் ஒரு கட்டண முன்மொழிவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். இந்த செயற்பாட்டில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	கூட்டுஆதன மின்சார நுகர்வோருக்கும் மற்றும் இயக்கு தரப்புகளுக்கும் நியாயமான சமமான கட்டண வாய்ப்புகள் கிடைத்தல்.	0

		கட்டண முன்மொழிவுகளை ஆணைக்குழு அங்கீகரித்த முறையியலுக்கு இணங்க மீளாய்வு செய்தல். தேவையானவிடத்து குறித்த தரப்புகளிடமிருந்து விளக்கங்களைப் பெற்றுக் கொண்டு தேவையாயின் மீளாய்வு செய்த பின்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளல். மீளாய்வு செய்யப்பட்ட கட்டண முன்மொழிவுகளை அங்கீகாரத்தின் நிமித்தம் சமர்ப்பித்து சிறு மின்சாரப் பகிர்ந்தளிப்புத் தரப்புகளுக்கு அத்தகைய முன்மொழிவுகளை அறியப்படுத்துதல்.		
AP22/RU/TEA /03	தொகை மின்சார விநியோகக் கட்டணம், UNT மற்றும் இறுதிப் பாவனையாளர் கட்டண மீளாய்வு	இது வழமையான ஒரு தொழிற்பாடாகும். இந்த செயற்பாட்டின் ஊடாக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். அனுமதிக்கப்பட்ட வருமானங்கள் வருடாந்தம் அங்கீகரிக்கப்படுதல். தொகை மின்சார விநியோகக் கட்டணமும் மற்றும் இறுதிப் பாவனையாளர் கட்டணமும் அரையாண்டு ரீதியில் மீளாய்வு செய்யப்படுதல். ஒரேமாதிரியான தேசிய வரிக்கட்டண சீராக்கல் காலாண்டு ரீதியில் மேற்கொள்ளப்படுதல்.	மின்சார நுகர்வோருக்கு நியாயமான சமமான கட்டண வாய்ப்புகளும் மற்றும் உரிமம் பெற்ற தரப்புகளுக்கு வருமான உத்தரவாதமும் கிடைத்தல்.	750,000
AP22/RU/TEA /04	தரவு மற்றும் தரவுப் பகுப்பாய்வு	மின்சார உற்பத்திற்கும், மின்சார செலுத்துகைக்கும் மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்புக்கும் உரிமம் பெற்ற தரப்புகள்	வெளிப்படைத்தன்மை காணப்படுதல்.	0

		சமர்ப்பிக்கும் தரவுகளை பகுப்பாய்வு செய்து அவற்றின் செயல்திறன் (மின்னுற்பத்தி ஆகுசெலவு பகுப்பாய்வு பற்றிய அறிக்கை - காலாண்டு அறிக்கை) ஒரு அறிக்கையை தயாரித்தல். மின்சார விற்பனை பற்றிய பகுப்பாய்வு அறிக்கை - விற்பனை எதிர்வுகூறல் எதிர் உண்மையான விற்பனை - காலாண்டு அறிக்கையை தயாரித்தல். மின்சார செலுத்துகை மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முதலீடு பற்றிய பகுப்பாய்வு அறிக்கையை (வருடாந்த அறிக்கை) தயாரித்தல்.		
AP22/INS/RU/08	உரிமம் பெற்ற தரப்புகளின் மின்சார செலுத்துகை முறைமையிலிருந்தும் மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையிலிருந்தும் களவாக மின்சாரத்தை பிரித்தெடுக்கும் அல்லது பாவிக்கும் நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்செய்வதற்கான அதிகார ஆணைகள் மதிப்பீடு	2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தல்) சட்டத்தின் 48 (4) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் எழுத்திலான அதிகார ஆணையின்றி, குறித்த சட்டத்தின் கீழ் புரியப்படும் எந்தவொரு குற்றத்திற்கெதிராகவும் நீதிவான் நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்படுதல் கூடாது. ஆகையால், உரிமம் பெற்ற தரப்புகள் அனுப்பும் அதிகார ஆணைக்கான விண்ணப்பங்களை மதிப்பிட்டு பரிந்துரை செய்வது (உரிமம் பெற்ற தரப்புகளின் மின்சார செலுத்துகை முறைமையிலிருந்தும் மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு முறைமையிலிருந்தும் களவாக மின்சாரத்தைப் பிரித்தெடுக்கும் அல்லது பெறும் நபர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல்	களவாகப் பெறப்படும் மின்சாரத்தின் அளவு குறைவடையும்.	-

		செய்வதற்கு) இந்த செயற்பாட்டின் நோக்கமாகும். இபொபஆ இற்கு கிடைக்கும் அதிகார ஆணைக்கான விண்ணப்பங்களை உரிய நேரத்தில் மதிப்பிட்டு இபொபஆ இன் பரிந்துரைகளை வழங்க திட்டமிட்டு வருகின்றது.		
AP22/RU/EER/31	மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தி சம்பந்தமான தகவல்களை பரப்புதல்	2002 இன் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17 (ஈ) பிரிவின் பிரகாரம் இந்த செயற்பாட்டிற்கு நியதிச்சட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்றன. மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தித் தரவுகளை சேகரித்தல், அவற்றை பகுப்பாய்வு செய்தல் மற்றும் பொது மக்களுக்கு தகவல்களைப் பரப்புதல் ஆகிய செயற்பாடுகள் 2020 ஆம் ஆண்டு முழுதிலும் மேற்கொள்ளப்படும்.	உண்மையான மின் உற்பத்தித் தரவுகளை அக்கறையுடைய தரப்புகளால் இலகுவாக அடைய இயலுதல்.	0
AP/2022/CP/LIC/04	இலங்கையில் உள்ள IPP தரப்புகளிடமிருந்து துணை சேவைகளை பெறும் சாத்தியம் பற்றிய ஆய்வு	துணைச் சேவைகளை அலைவரிசைக் கட்டுப்பாட்டுத் துணைச் சேவைகளாகவும், மின்சார வலையமைப்புக் கட்டுப்பாட்டுத் துணைச் சேவைகளாகவும் மற்றும் மின்சார முறைமை மறு-ஆரம்ப துணைச் சேவைகளாகவும் பரந்தளவில் வகைப்படுத்தலாம். தற்பொழுது உள்ளது போல், இமிச பிரதானமாக மின் உற்பத்திப் பொறித் தொகுதிகளைப் பயன்படுத்தி துணைச் சேவைகளை வழங்குகின்றது. புதிய மின் உற்பத்திப் பொறித் தொகுதிகளில் பல மின் உற்பத்திப் பொறித் தொகுதிகள் (அத்தகைய சேவைகளின்	மின்சார நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் மின்சாரத்தின் ஆகுசெலவு குறைதல்.	0

		விநியோகத்தை இயலச்செய்யக்கூடிய இயற்கை எரிவாயு எரி-இணைந்த சுழற்சி மின் உற்பத்திப் பொறித் தொகுதிகள் போன்ற) சுயாதீன சக்தி உற்பத்தித் தரப்புகளினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தகைய துணைச் சேவைகளை இந்த மின் உற்பத்திப் பொறித் தொகுதிகளில் இருந்து மலிவாக பெற்றுக் கொள்ளலாம். IPP இற்கு சொந்தமான மின் உற்பத்திப் பொறித் தொகுதிகளில் இருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான முறையியல்கள் மிகவும் கவனமாக வரையறுப்பதற்கும், அளவிடுவதற்கும் தேவைப்படுத்தும் அதே வேளையில் இந்த செயற்பாடுகளுக்கு கொடுப்பனவுகளை செலுத்துவதற்கும் தேவைப்படுத்துகின்றன. இலங்கைக்கு எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதை கண்டறியும் பொருட்டு IPPs களிடம் இருந்து துணைச் சேவைகளை கொள்வனவு செய்யும் முறையியலை அறிமுகப்படுத்துகின்ற கிடைக்கக்கூடிய சர்வதேச செயன்முறைகளின் ஊடாக அது மீளாய்வு செய்யப்படும்.		
AP/2022/RA/LIC/13	தரவுப் பகுப்பாய்வு அறிக்கைகள்	மின்சார செலுத்துகை மாதிரிகளையும் குறைந்த ஆகுசெலவு-கோட்பாடு முதலிய மீறுகைகளையும் கண்டறியும் பொருட்டு இந்த செயற்பாட்டின் ஊடாக இபொபஆ மின்சார செலுத்துகை பற்றிய தரவுகளை நாளாந்த	மின் உற்பத்திப் பொறித் தொகுதிகளின் ஆகக்குறைந்த மின்சார செலுத்துகை ஆகுசெலவு உறுதிசெய்யப்படுவதால் மின்சார ஆகுசெலவு குறைதல்.	0

		அடிப்படையிலும் மற்றும் மாதாந்த அடிப்படையிலும் பகுப்பாய்வு செய்து பின்வரும் அறிக்கைகளை தயாரிக்கும்: • நாளாந்த முன்-எதிர்வுகூறலைக் கொண்டு உண்மையான மின்சார செலுத்துகையை ஒப்பிடுகின்ற நாளாந்த வித்தியாச அறிக்கை (365 நாள் கால அறிக்கைகள்) • மாதாந்த முன்-எதிர்வுகூறலைக் கொண்டு உண்மையான மின்சார செலுத்துகையையும் மற்றும் ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் மின் உற்பத்திப் பொறித் தொகுதிகளின் மின்சார செலுத்துகை மாதிரிகளை கண்டறிகின்ற ஒரு மாதாந்த அறிக்கை		

மின்சாரக் கைத்தொழில்
பலன் 03
ஒவ்வொரு உயிரினத்தினதும், பொது மக்களினதும், உரிமம் பெற்ற தரப்புகளினதும் மற்றும் இயக்கும் தரப்புகளினதும் மற்றும் சொத்துக்களினதும் மேம்பட்ட பாதுகாப்பு

குறிப்பு இலக்கம்	செயற்பாடு	செயற்பாடு பற்றிய விபரம்	அக்கறையுடைய தரப்புகளுக்கு கிடைக்கும் நன்மைகள்	நேரடி ஆகுசெலவு (இ.ரூ.)

AP22/INS/CP/02	பொது மக்களுக்கு MV மின்சார மார்க்கம் பற்றிய தகவல் அணுகலை வழங்குதல்	உயிரினங்களினதும், பொது மக்களிதும் மற்றும் சொத்துக்களினதும் பாதுகாப்பையும் மற்றும் உரிமம் பெற்ற தரப்புகளின் முறைமையின் நம்பத்தகுதன்மையையும் மேம்படுத்துவதில் MV (11kV மற்றும் 33kV) மின்சார மார்க்கத் தாழ்வாரங்களின் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆகக்குறைந்த பாதுகாப்பு அனுமதிகளை உறுதிப்படுத்துதல். ஏற்கனவேயிருக்கின்ற MV மின்சார மார்க்கங்களினதும் மற்றும் அத்தகைய உத்தேச மின்சார மார்க்கங்களினதும் (வடிவமைக்கப்பட்டுள்ளதும் மற்றும் வடிவமைக்கப்பட்டு வருகின்றதும்) புவியல் சார்ந்த தகவல்கள் தற்பொழுது பொது மக்களுக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ளன. ICTA நிறுவனம் தயாரித்த ஏற்கனவேயிருக்கின்ற இலங்கையின் புவியல் சார்ந்த தகவல் வரைபடத்திற்கு (ஜியோபோட்டெல்) MV மினசார மார்க்கத் தாழ்வாரங்களின் புவியல் சார்ந்த தகவல்கள் அடங்கிய புதிய ஒரு படலத்தை சேர்க்க உத்தேசிக்கப்படுகின்றது. MV மின்சார மார்க்கத் தாழ்வாரங்கள் பற்றிய தகவல்களின் அணுகல் தன்மை மேம்படுத்தப்பட்டதன் ஊடாக, இறுதியாக உயிரினங்களினதும், பொது மக்களினதும் மற்றும் சொத்துக்களினதும்	உயிரினங்களினதும், பொது மக்களினதும் மற்றும் சொத்துக்களினதும் பாதுகாப்பும் மற்றும் உரிமம் பெற்ற தரப்புகளின் மின்சார முறைமை நம்பகத்தன்மையும் மேம்படுதல்.	10,000

		பாதுகாப்பையும் மற்றும் உரிமம் பெற்ற தரப்புகளின் மின்சார முறைமையின் நம்பகத் தன்மையையும் உறுதிப்படுத்துகின்ற ஏற்கனவேயிருக்கின்ற MV மின்சார மார்க்கத் தாழ்வாரங்களுக்கும் மற்றும் அத்தகைய உத்தேச மின்சார மார்க்கத் தாழ்வாரங்களுக்கும் அருகில் புதிய நிர்மாணங்களை திட்டமிட்டு நிறைவேற்றும் போது மின்சார மார்க்க அனுமதிகளை பேணும் வகையில் பொது மக்களால் முற்காப்பு நடவடிக்கைகளை எடுக்க முடியும்.		
AP22/INS/CP/04	சிறிய நீர்வலு மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளில் (உரிமம் பெற்ற தரப்புகளின்) சோதனைகளை மேற்கொள்ளல்	2009 இன் 20 ஆம் இலக்க மின்சார சட்டத்தின் 6(அ) பிரிவுக்கு இணங்க, மின் பரிசோதகர்கள், உரிமம் பெற்ற ஒரு தரப்பு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு சொந்தமான மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை சோதனையிடுவதற்கு தேவைப்படுத்தப்படுவார்கள். மேலும், அவை வினைத்திறனாகவும் மற்றும் நம்பத்தகுந்ததாகவும் இயக்கப்படுகின்றனவா என்பது பற்றிய அனுமதிப் பத்திர நிபந்தனைகள் அனுசரிக்கப்படுவதை கண்காணிக்கும் விடயத்தை மேற்கொள்வதும் அவசியமாகும். ஆகையால், மின்சார உற்பத்திற்கு உரிமம் பெற்ற தரப்புகளின் ஸ்தல சோதனைகளை மேற்கொள்வது அவசியமாகும். குறித்த சோதனையிடுகைகள்	அனுமதிப் பத்திர நிபந்தனைகள் அனுசரிக்கப்படுவது உறுதிசெய்யப்படுதல்.	3,300,000

		பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியிருக்கும். மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகியினதும் மற்றும் உரிய நிர்மாணங்களினதும் இயக்கப் பராமரிப்பு மற்றும் மின்னுற்பத்திப் பொறித் தொகுதியின் இயக்கச்செயற்பாடு வினைத்திறனாகவும், நம்பத்தகுந்ததாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் இருப்பதை உறுதிசெய்ய எடுக்கப்படும் நடவடிக்கைகள். •பதிவுகளைப் பேணி ஆவணப்படுத்துதல் •பராமரிப்பு சார்ந்த செயன்முறைகள் •பாதுகாப்பு நடைமுறைகள் •இப ஊழியர்களின் தகைமை மற்றும் பொறுப்புக்கள் •சோதனையிடும் மற்றும் பரிசோதிக்கும் கருவிசாதனங்கள் •மின்னுற்பத்திப் பொறித் தொகுதி செயல்திறன் மற்றும் கண்காணிப்பு •சுற்றாடல் செயல்திறன் •சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு		
AP22/INS/RU/ 01	மின்சாரத்தை பரிந்தளிப்பதற்கும் மற்றும் மின்சாரத்தை விநியோகிப்பதற்கும் ஒரு அனுமதிப் பத்திரத்தை பெறும் தேவைப்பாட்டில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ள தரப்புகளின் வளாகங்களில் சோதனைகளை மேற்கொள்ளல்	விலக்களிக்கப்பட்டுள்ள தரப்பின் மின்சார பகிர்ந்தளிப்பு முறைமை அனுசரிப்பை சோதனைகளின் ஊடாக அனுமதிப் பத்திர நிபந்தனைகளைக் கொண்டு செவ்வைபார்த்து உறுதிப்படுத்தல். இந்த செயற்பாட்டின் ஊடாக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்: - மின்சாரத்தை பரிந்தளிப்பதற்கும் மற்றும் மின்சாரத்தை	விலக்களிக்கப்பட்டுள்ள தரப்புகளிடமிருந்து மின்சாரத்தை பெறுகின்ற மின்சார நுகர்வோரின் பாதுகாப்பும் மற்றும் அவற்றின் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுதல்.	200,000

		விநியோகிப்பதற்கும் அனுமதிப் பத்திரத்தை பெறும் தேவைப்பாட்டில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ள தரப்புகளின் வளாகங்களில் சோதனைகளை மேற்கொள்ளல் - இனங்காணப்பட்ட பிரச்சினைகளையும் மற்றும் அனுசரிக்கப்படாத பிரிவுகளையும் உள்ளடக்கிய சோதனை அறிக்கைகளை தயாரித்தல். - தேவையான நடவடிக்கைகளின் நிமித்தம் சோதனை அறிக்கைகளை அனுமதிப் பத்திரம் வழங்கும் பிரிவுக்கு அனுப்பிவைத்தல்.		
AP22/INS/RU/02	IRS ஐ வைத்தியசாலைகளுக்கு விஸ்தரித்தல்	தற்பொழுது மின்சாரம்பாய்தல்கள் பற்றிய தகவல்கள் பொலிஸ் பிரிவுகளில் இருந்து இபொபஆ இற்கு கிடைக்கின்றன. எனினும், மின்சார ஆபத்துக்கள் அல்லது விபத்துக்கள் தொடர்பான தகவல்கள் இன்னும் இபொபஆ இற்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும். ஆகையால், அந்த சம்பவங்களை பற்றிய தகவல்களை பெறுவது மின்சாரம்பாய்தல்களை தடுப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுக்கும் அடிப்படை காரணங்களை மதிப்பிடுவதற்கு பயனுள்ளதாகும். மேலும், இந்தத் தகவல் கணக்கீட்டு ஆகுசெலவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு மட்டுமன்றி நாட்டிற்கு	அடிப்படை காரணிகள் பகுப்பாய்வு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை பின்தொடர்ந்து உண்மையான காலத்தில் நிகழும் மின்சாரம் சம்பந்தமான சம்பவங்களையும் மற்றும் விபத்துக்களையும் அறிக்கையிடுவதில் சுகதாரப் பிரிவு சம்பந்தப்படுவதற்கு வாய்ப்பளிக்கப்படுவதன் ஊடாக பொது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுதல்.	500,000

		ஏற்படும் பொருளாதார சுமையையும் பகுப்பாய்வு செய்வதற்கும் அவசியமாகும். சம்பவம் பற்றி அறிக்கையிடும் முறைமையை விரிவடையச்செய்வது அறிக்கையிடப்பட்ட அண்மைகால துரதிர்ட்டங்களினதும் மற்றும் சம்பவங்களினதும் அடிப்படை காரணிகளை கண்டறிவதற்கு உதவும். இதேநேரம் இந்த அறிக்கையிடுகையில் சுகாதார சேவைகளை ஈடுபடச்செய்வது நிகழ்காலத்தில் உடனடியாக நிகழக்கூடிய விபத்துக்களை தணிப்பதற்கான அத்தகைய அடிப்படை காரணிகளை கண்டறிவதில் மிகவும் பயனுள்ள மற்றும் வினைத்திறன் வாய்ந்த வழிமுறையுமாகும். மிக முக்கிய சம்பவங்களுக்கான அடிப்படை காரணிகள் கண்டறியப்படுவதால் மின்சாரம்பாய்தல்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு இது வழிவகுக்கும்.		
AP22/INS/RU/03	மின்சார நுகர்வோரிடமிருந்து கிடைக்கும் வேண்டுகோள்களின் அல்லது ஆணைக்குழு விடுக்கும் பணிப்புரைகளின் பேரில் மின்சார மார்க்கங்களை அல்லது மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை அல்லது மின்சார விநியோக முறைமையை சோதனையிடுதல்.	இலங்கை மின்சார சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் அல்லது விதிமுறைகள், ஏற்பாடுகள் மீறப்படுவதன் பேரில் எழுகின்ற சோதனையிடுகையை மேற்கொள்ளல். மின்சார வணிகம் சம்பந்தப்பட்ட உரிய பிணக்குகளையும் மற்றும் முறைப்பாடுகளையும் ஆணைக்குழுவினால் பணிக்கப்படுகின்றவாறு உரிமம் பெற்ற அந்தந்த தரப்புகளினதும், மின்சார வாடிக்கையாளர்களினதும் மற்றும் ஏனைய	சம்பந்தப்படும் உரிய அக்கறையுடைய தரப்புகளுக்கு இபொபஆ ஆல் மேற்கொள்ளப்படும் சோதனைகளின் ஊடாக சுயாதீன/பக்கசார்பற்ற பரிந்துரைகள் கிடைத்தல்.	350,000

		வெளித்தரப்புகளினதும் பங்குபற்றுநர்களைக் கொண்டு ஆராய்தல், சோதனையிடுதல் மற்றும் பரிசோதித்தல் முதலியவற்றை மேற்கொள்ளல் இந்த செயற்பாட்டில் அடங்கும். பொருத்தமான விதிக்கோவைகள், ஒழுங்குவிதிகள் இநிசஅச சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள நடைமுறைகள் என்பவற்றுக்கு இணங்க பரிந்துரைகளை செய்தல் மற்றும் தீர்மானங்களை பெற்றுக்கொடுத்தல்.		
AP22/INS/RU/04	உரிமம் பெற்ற தரப்புகளுக்கு மத்தியில் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப திட்டத்தையும் (STMP) மற்றும் பாதுகாப்பு செயல்திறன் திட்டத்தையும் செயற்படுத்துதல்	பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவத் திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் பாதுகாப்பான கணக்காய்வாளர்களையும் மற்றும் வழமையான அறிக்கையிடும் பொறிமுறையையும் குறித்தொதுக்குதல் மற்றும் பின்னூட்டல்கள் மற்றும் தகவுதிறன்கள் என்பவற்றின் ஊடாக தொடர்ச்சியான மேம்பாட்டை மேற்கொள்ளல். இறுதியாக, உரிமம் பெற்ற தரப்புகள் பாதுகாப்பு சுட்டிகளுக்கும் மற்றும் அவற்றின் பாதுகாப்பு செயல்திறன்களின் அடிப்படையிலான கணிப்பீட்டிற்கும் அமைவாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும். பொருத்தமான விதிக்கோவைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை மின்சார சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள நடைமுறைகள், பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்க பரிந்துரைகளை செய்யும் மற்றும் தீர்மானமெடுக்கும்	மின்சாரம் சம்பந்தமான ‘பாதுகாப்பு’ தொடர்பில், STMP மற்றும் சுட்டிகள் என்பவற்றை பயன்படுத்தி உரிமம் பெற்ற தரப்பின் ஒட்டுமொத்த செயல்திறன் கண்காணிக்கப்பட்டு மதிப்பிடப்படுதல்.	1,000,000

		தொழிற்பாடுகள் இந்த செயற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்படும்.		
AP22/INS/RU/05	பொது மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்	மின்சாரத்தின் ஆபத்து பற்றி மக்கள் அறியாததால் அதிகளவான மின்சார விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன என இபொபஆ கடந்த காலத்தில் மேற்கொண்ட மின்சாரம்பாய்தல்கள் பற்றிய பகுப்பாய்விலிருந்து தெரியவருகின்றது. மேலும், மின்சார பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான பொது மக்களின் விழிப்புணர்வு மிகவும் குறைவாக காணப்படுகின்றமை கடந்த அண்மை ஆண்டுகளின் போது வீட்டுக்கு வீடு பிரச்சார நடவடிக்கையும் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டதன் ஊடாக கண்டறியப்பட்டது. ஆகையால், மின்சாரத்தை பாதுகாப்பான முறையில் பாவிக்க வேண்டும் என்பது பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது இந்த செயற்பாட்டின் முக்கிய நோக்கமாகும். இபொபஆ இன் செய்திகளை மக்களுக்கு கொண்டுசெல்வதில் அனுமதிப் பத்திரம் பெற்ற மின்னியலாளர்களை மிக முக்கியமான ஒரு வளமாக இனங்காணலாம். ஆகையால், மின்சாரத்தை பாதுகாப்பாக பாவித்தல் மற்றும் மின்சார நுகர்வோரின் உரிமைகள் மற்றும் கடமைகள் என்பன பற்றி அனுமதிப் பத்திரம் பெற்ற மின்னியலாளர்களின்	மின்சாரத்தை பாதுகாப்பாக பாவித்தல் பற்றிய பொது மக்களின் விழிப்புணர்வு மட்டமும் மற்றும் மின்சார நுகர்வோரின் உரிமைகளும் மற்றும் கடமைகளும் மேம்படுதல்.	1,800,000

		ஊடாக விழிப்புணர்வை ஏற்படுத்த ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது. ஆகையால், விழிப்புணர்வு சம்பந்தமான செயற்பாடுகள் இந்தத் தொழிற்பாட்டின் ஊடாக மேற்கொள்ளப்படும்.		
AP22/INS/RU/06	மின்சாரம்பாய்தல்களை தணித்தல் மற்றும் மின்சாரம்பாய்தல்களை பகுப்பாய்வு செய்தல்	இந்த செயற்பாட்டின் ஊடாக பின்வரும் அறிக்கைகள் வழங்கப்படும்: மின்சாரம்பாய்தல்கள் பற்றிய மாதாந்த அறிக்கைகள் மின்சாரம்பாய்தல்கள் பற்றிய காலாண்டு அறிக்கைகள்	மின்சார விபத்துக்கள் குறைதல்.	240,000
AP22/INS/RU/07	மின்னியலாளர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் மின்சார பாதுகாப்பு வலையமைப்புக்கு மின்னியலாளர்களை அறிமுகப்படுத்துதல்	தற்பொழுது, இலங்கையில் ஒரு மின்சார வர்த்தக நபராக செல்படுவதற்கு எந்தவொரு தனிநபருக்கும் எந்த சட்டமுறையான கட்டுப்பாடும் கிடையாது. ஒரு நபர் மின்சார நிறுவுகை, பழுதுபார்ப்பு, இயக்கச்செயற்பாடு மற்றும் மின்சார நிறுவுகைகளின் பராமரிப்பு சம்பந்தமான ஏதாவது ஒரு வேலையில் அல்லது வடிவமைக்கும் மற்றும் திட்டமிடும் வேலையிலும் கூட ஈடுபடலாம். ‘மின்னியலாளருக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் வேலைச்சட்டகத்தை’ செயற்படுத்தும் விடயம் அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டவுடன் ஆரம்பமாகும். செயற்படுத்தப்படும் காலப்பகுதியில், ஒழுங்குவிதிகளை வர்த்தமானியில் பிரசுரித்தல், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், அனுமதிப் பத்திர விநியோக செயல்முறையை	அறிவும் மற்றும் சர்வதேச அங்கீகார ஏற்படும் மேம்படுவதன் மூலம் மின்னியலாளர்கள் ஊக்குவிக்கப்படுவதால் மின்சாரம் சம்பந்தமாக உயிரினங்களினதும் மற்றும் சொத்துக்களினதும் பாதுகாப்பு மேம்படுதல்.	1,800,000

		நெறிப்படுத்துதல் போன்ற பல பிரிவு செயற்பாடுகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். பொருத்தமான விதிக்கோவைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை மின்சார சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள நடைமுறைகள், பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்க, இந்த செயற்பாட்டின் ஊடாக பரிந்துரைகளையும் மற்றும் தீர்மானங்களையும் மேற்கொள்ள இபொபஆ திட்டமிட்டு வருகின்றது.		
AP22/INS/RU/09	MV LV ABC போன்ற இன்சியுலேட்டுசெய்யப்பட்ட மின்கடத்திகளுக்கான மின்சார மார்க்க அனுமதி	2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 3 (1)(எ) பிரிவின் பிராகரம், தொழில்நுட்ப தர நியமங்களையும் மற்றும் மின்சார விநியோக சேவைகளினதும் மற்றும் மாணிவாசிப்பு சேவைகளினதும் பாதுகாப்பு தொடர்பான ஏனைய தர நியமங்களையும் தொகுத்து செயற்படுத்துவது ஆணைக்குழுவின் ஒரு தொழிற்பாடாகும். 2009 இன் 20 ஆம் இலக்க மின்சார சட்டத்தின் 4 (1) (அ) பிரிவுக்கு இணங்க, மின்சார நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் மின்சாரத்தின் பாதுகாப்பு தொடர்பாக அந்த மின்சார நுகர்வோருக்கு இருக்கின்ற நலனை பாதுகாப்பது ஆணைக்குழுவின் ஒரு குறிக்கோளாகும். மேற்குறித்த MV மின்சார மார்க்கங்களின் பாதுகாப்பு மற்றும்	மின்சாரப் பகிர்ந்தளிப்பு நியமங்களை அனுசரிப்பதற்கான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்படுவதால் பெறுமதியான உயிர்களும் மற்றும் சொத்துக்களும் முழுமையாக பாதுகாக்கப்படுதல்.	1,000,000

		நம்பகத்தன்மை ஆகியவற்றை அடையாளப்படுத்துவது அந்த MV மின்சார மார்க்க வலையமைப்பில் நிகழ்கின்ற மின்சாரம்பாய்தல்களையும் மின்சாரத் தடைகளையும் குறைக்கும் அல்லது நீக்கும்.		
AP22/INS/RU/10	மின்சொக்கெற்றுக்கள் மற்றும் மின்னாப்புக்கள் நியமப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதியை அனுசரித்தல்	மின்னாப்புகள் மற்றும் சொக்கெற்றுக்கள் என்பவற்றுக்கான தனியான தர நியமங்களும் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளும் மின்சார வாடிக்கையாளர்களினாலும் மற்றும் உரிமம் பெற்ற தரப்புகளினாலும் பின்பற்றப்படுகின்றவா என்பதை இபொபஆ ஆணைக்குழு உறுதிசெய்யும். சோதனைகள் மற்றும் அனுசரித்தல் செவ்வைபார்ப்பு ஆகியவற்றின் ஊடாக இபொபஆ பொருத்தமான விதிக்கோவைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை மின்சார சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்க பரிந்துரைகளையும் மற்றும் தீர்மானங்களையும் பெற்றுக்கொடுக்கும்.	உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சார துணைப்பாகங்கள் சம்பந்தமான தர நியமங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஊடாக மீளவரையறுக்கப்படுவதால் மின்சார நுகர்வோரின் பாதுகாப்பு மேம்படுதல்.	1,800,000
மின்சாரக் கைத்தொழில் பலன் 04 மனிதன், விலங்குகள் மற்றும் தாவரங்கள் என்பவற்றுக்கான மேம்பட்ட சுற்றாடல் பொது மக்களினதும், உரிமம் பெற்ற தரப்புகளினதும் மற்றும் இயக்கும் தரப்புகளினதும், ஒவ்வொரு உயிரினத்தினதும் மற்றும் சொத்துக்களினதும் மேம்பட்ட பாதுகாப்பு				

குறிப்பு இலக்கம்	செயற்பாடு	செயற்பாடு பற்றிய விபரம்	அக்கறையுடைய தரப்புகளுக்கு கிடைக்கும் நன்மைகள்	நேரடி ஆகுசெலவு (இ.ரூ.)
AP22/CP/EER /01	1000 மின்னியலார்களின் சூரிய சக்தி பிவி முறைமை நிறுவுகைகள் பற்றிய திறன்களை மேம்படுத்துதல்	பரிந்துரை செய்யப்பட்டுள்ள தர நியமங்களுக்கு இணங்க மின்சார நிறுவுகைகளை மேற்கொள்வதற்கு களத்தில் போதியளவு தகுதி வாய்ந்த, பயிற்றப்பட்ட அதிக தொழில்நுட்வியலாளர்கள் இருப்பது அரசாங்கத்தின் RE கொள்கை இலக்கை அடைந்து கொள்ள அவசியமாகும். ஆகையால், இந்த இலக்கை அடையும் பொருட்டு இபொபஆ நாடளாவிய ரீதியில் 10 பயிற்சி செயலமர்வுகளை நடத்த திட்டமிட்டு வருகின்றது.	1. இலங்கையில் உள்ள மின் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் மற்றும் வெளிநாடுகளில் உள்ள மின் தொழில்நுட்பவியலாளர்களுக்கும் புதிய தொழில்வாய்ப்புகள் உருவாகுதல். 2. மின்சார நிறுவுகைகளின் கைவினைத்திறன் மேம்படுவதால் கைத்தொழிலின் நிலைபெறுதகுதன்மையும் மேம்படுதல். 3. நாட்டில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களில் இருந்து மேற்கொள்ளப்படும் மின்சார உற்பத்தி அதிகரிப்பதால் சக்திக்கு செலவாகும் ஆகுசெலவு குறைவடைதல். 4. சுற்றாடல் நிலைமைகளும், வளிமண்டல வளியின் தரமும் மற்றும் நீரின் தரமும் மேம்படுதல்.	10 M
AP22/CP/EER /02	இ-ஊக்குவிப்பு அபிவிருத்திற்கு தேவையான ஒழுங்குறுத்துகை சாதனங்களை இனங்காணுதல்	அதிகரித்து வருகின்ற ஆகுசெலவு சார்ந்த போட்டித்தன்மை, சுற்றாடல்நேயம் மற்றும் ஏனைய பிற காரணங்கள் என்பவற்றினால் மேலும் போக்குவரத்து இ-ஊக்குவிப்பு செயற்பாட்டில் அதிகம் தங்கியிருக்கலாம். நாட்டில் மின்சார வாகனங்களின் உற்பத்தி அபிவிருத்தி சந்தையில் உள்ள தடைகளை நீக்கி உகந்தவொரு ஒழுங்குறுத்துகை வேலைச்சட்டகத்தினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.	1. பயணத்திற்கு/போக்குவரத்துக்கு கனிய எரிபொருட்களில் தங்கியிருக்கும் நிலை குறைவடைதல். 2. போக்குவரத்து செலவு குறைவடைதல். 3. உள்நாட்டுக் கைத்தொழில்களின் இலாபம் அதிகரித்தல். 3. சுற்றாடல் நிலைமைகள் மேம்படுதல்.	0

		ஆணைக்குழுவின் சட்ட ஆணையின் செயல்நோக்கின் கீழ் விதிக்கக் கூடிய முக்கியமான ஒழுங்குறுத்துகை தலையீட்டு நடவடிக்கைகளை இனங்காணுவதற்கும் மற்றும் ஒழுங்குறுத்துகை சாதனங்களை வகுத்தமைக்கும் வகையில் ஏனைய பொருத்தமான அரசாங்க நிறுவனங்களுக்கு உதவுவதற்கும் ஆணைக்குழு இந்த செயற்பாட்டின் ஊடாக திட்டமிட்டு வருகின்றது.	4. வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல் குறைவடைதல்.	
AP22/CP/EER /03	கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய பிவி முறைமை பற்றி முதலீட்டுத் தரப்புகள், வீட்டுக் கூரை உரிமையாளர்கள் மற்றும் பொதுப் பயன்பாட்டு வசதிகளை வழங்கும் தரப்புகள் ஆகியவற்றுக்கு இடையில் ஒரு மூன்றாந்தரப்பு ஒப்பந்தத்தை அறிமுகப்படுத்துதல்	இலங்கையில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியின் துரித அபிவிருத்தி எதிர்வருகின்ற ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படுகின்றது. கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி பிவி முறைமையை செயற்படுத்துவது உலகலாவிய ரீதியில் பிரபல்லமடைந்துள்ள பல முக்கியமான தொழில்நுட்பங்களில் ஒரு தொழில்நுட்பமாகும். தற்பொழுது, வீட்டுக் கூரை உரிமையாளர்கள் கருத் திட்டங்களில் முதலீடு செய்யக் கூடிய நிலையில் இல்லாததால், வீட்டுக் கூரையை வாடகைக்கு விடுக்கும் முறையியலின் ஊடாக, கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி பிவி முறைமைகளை நாட்டில் செயற்படுத்துவதற்கான அதிக சாத்தியம் காணப்படுகின்றது. முதலீட்டுத் தரப்புகள், வீட்டுக் கூரை உரிமையாளர்கள் மற்றும் பொதுப் பயன்பாட்டு	1. வீட்டுக் கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி பிவி முறைமை சார்ந்த கருத் திட்டங்களில் துரித வளர்ச்சி ஏற்படுதல். 2. உள்நாட்டு முதலீடுகளும் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளும் அதிகரித்தல். 3. மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மீதான அரசாங்கத்தின் இலக்கை அடைவதற்கு உதவுதல். 4. சக்தியின் ஆகுசெலவும் மற்றும் வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்களும் குவைடைதல். 5. சக்திப் பாதுகாப்பும் மற்றும் சுமக்கக்கூடிய தன்மையும் மேம்படுதல்.	100,000

		சேவைகளை வழங்கும் தரப்புகள் ஆகியவற்றுக்குகு இடையில் பொருத்தமான ஒரு ஒப்பந்தம் இருக்குமாயின், சேவை வழங்கும் அத்தகைய நிறுவனங்கள் இன்றிருப்பது போல் கட்டண வாடிக்கையாளருக்கு மாத்திரம் சட்டக் கடப்பாடுகளை கொண்டிருப்பதால், முதலீட்டுத் தரப்புகள் அவற்றின் முதலீடுகளுக்கு போதியளவு பாதுகாப்பை பெறும். . குறித்த ஒப்பந்தத்தை செயற்படுத்தும் பொருட்டு அத்தகைய நிறுவனங்களின் விருப்பத்தையும் மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்புகளின் கருத்துக்களையும் பெறுவதற்கும் மற்றும் சகல தேவையான நிபந்தனைகளை உள்ளடக்குவதற்கும் இபொபஆ 2022 ஆம் ஆண்டில் அத்தகைய ஒரு ஒப்பந்தத்தை வரைவதற்கு திட்டமிடுகின்றது.		
AP22/RU/EER /32	மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளின் சூழல் செயல்திறன் பற்றிய தரவுகளை பரப்புதல்	2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 16 (இ) பிரிவின் பிரகாரம், மின்சார உற்பத்திற்கு உரிமம் பெற்ற தரப்புகள் சகல சுற்றாடல் சட்டங்களுக்கும் மற்றும் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் சட்டங்களுக்கும் இயைந்தொழுக வேண்டும். இது விர, மின்சார உற்பத்திற்கு உரிமம் பெற்ற தரப்புகள், 2009 இன் 20 ஆம் இலக்க மின்சார சட்டத்தின் 13(1)(இ)(i)(அ) பிரிவின்	சகல உயிரினங்களுக்கும் சிறந்த சுற்றாடல் நியமங்கள் உறுதிசெய்யப்படுதல் மற்றும் மின் உற்பத்தி செயற்பாடுகளினால் ஏற்படும் சுற்றாடல் மற்றும் சமூகப் பாதிப்புகள் குறைவடைதல்.	0

		பிரகாரம், ஆணைக்குழு வெளியிட்டுள்ள 'மின்சார உற்பத்தி அனுமதிப் பத்திரம்' தொடர்பான 15-வது நிபந்தனைக்கு இணங்க, மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளின் சுற்றாடல் செயல்திறன் பற்றிய அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். வருடாந்த அனுமதிப் பத்திர புதுப்பித்தல் செயல்முறையுடன் இணைந்த ஒரு சுற்றாடல் தரவு சேரிப்பு செயல்முறையை தாபிப்பதற்கு இபொபஆ திட்டமிட்டு வருகின்றது. இது மின்சார உற்பத்திற்கு உரிமம் பெற்ற தரப்புகள் சுற்றாடல் தேவைப்பாட்டை அனுசரிக்கின்றனவா என்பதை உறுதிசெய்யும்.		

பெற்றோலியம் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய்கள் கைத்தொழில்

குறிப்பு இலக்கம்	செயற்பாடு	செயற்பாடு பற்றிய விபரம்	அக்கறையுடைய தரப்புகளுக்கு கிடைக்கும் நன்மைகள்	நேரடி ஆகுசெலவு (இ.ரூ.)
AP/2022/RA/CP/01	உராய்வுநீக்கி எண்ணெய்கள் இறக்குமதி பற்றிய வழிகாட்டல்களை மீளாய்வு செய்து இற்றைப்படுத்துதல்.	பின்வரும் வழிகாட்டல்கள் 2006 ஆம் ஆண்டில் உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தையை முழுமையாக தாராளமயப்படுத்துவதன் பேரில் ஆணைக்குழுவினால் வகுத்தமைக்கப்பட்டு பெற்றோலிய மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்டன.	உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கும் மற்றும் கொழுப்புக்களுக்கும் உரிய ஒழுங்குறுத்துகை சூழல் மேம்படுதல்.	

		1. சந்தையில் பங்குபற்றும் தரப்புகளுக்கு உராய்வுநீக்கி எண்ணெய்கள் மற்றும் கொழுப்புக்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கான வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன. 2. இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பது தொடர்பாக இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளருக்கான வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன. 3. உராய்வுநீக்கி எண்ணெய்களையும் மற்றும் கொழுப்புக்களையும் சுங்கத் திணைக்களத்திலிருந்து விடுவிப்பதற்கான வழிகாட்டல்கள் இலங்கை சுங்கப் பணிபபாளர் நாயகத்திற்கு வெளியிடப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கும் மற்றும் கொழுப்புகளுக்கும் என திருத்திய இலங்கை நியமங்களின் அனுசரிப்பு மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய்களும் கொழுப்புகளும் தொடர்பான இறக்குமதி சோதனையிடுகைத் திட்டத்தின் எதிர்பார்த்த தழுவல் ஆகியவற்றிலிருந்து எழுகின்ற தேவைப்பாடுகளின் நிமித்தம் இந்த வழிகாட்டல்களை மீளாய்வு செய்து இற்றைப்படுத்துதல். 2021 ஆம் ஆண்டில் உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கும் மற்றும் கொழுப்புகளுக்கும் என திருத்திய இலங்கை		

		நியமங்களின் அனுசரிப்பு மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய்களும் கொழுப்புகளும் தொடர்பான இறக்குமதி சோதனையிடுகைத் திட்டத்தின் எதிர்பார்த்த தழுவல் ஆகியவற்றிலிருந்து எழுகின்ற தேவைப்பாடுகளுக்கு இணங்க இருத்தல் வேண்டும் எனும் குறித்த வழிகாட்டல்களை மீளாய்வு செய்து இற்றைப்படுத்துதல். இற்றைப்படுத்திய வழிகாட்டல்கள் மின்வலு சக்தி அமைச்சினால் வெளியிடப்பட்டு சந்தையில் பங்குபற்றும் தரப்புகளினாலும், ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினாலும் மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களத்தினாலும் செயற்படுத்தப்படும்.		
AP/2022/RA/CP/02	கலப்படமற்ற தூய எண்ணெய்களுக்கான ஒப்புதல் அளிப்பது பற்றிய வழிகாட்டல்களை வகுத்தமைத்தல்.	தூய எண்ணெய் என்பது விசேட தேவைப்பாடுகளின் நிமித்தம் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு உராய்வுநீக்கி எண்ணெய் வகையாகும். இந்த உராய்வுநீக்கி எண்ணெய் உண்மையான ஒரு உற்பத்தித் தரப்பினால் உற்பத்தி செய்யப்பட்ட உபகரணங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது. உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தையில் பங்குபற்றும் தரப்புகளுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள திருத்திய ஒப்பந்தங்களின் பிரகாரம், இலங்கைக்கு தூய உராய்வுநீக்கி எண்ணெய்யை இறக்குமதி செய்யவும், இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யவும், இலங்கையில் கலப்பதற்கும், உற்பத்தி	உண்மையான எண்ணெய்களுக்கு உரிய ஒழுங்குறுத்துகை சூழல் மேம்படுதல்.	

		செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும், விநியோகிப்பதற்கும் அல்லது பகிர்ந்தளிப்பதற்கும் அரசாங்கத்தின் அங்கீகாரம் அவசியமாகும். இலங்கைக்கு தூய எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கும், இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கும், இலங்கையில் கலப்பதற்கும், உற்பத்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும், விநியோகிப்பதற்கும் அல்லது பகிர்ந்தளிப்பதற்கும் அங்கீகாரத்தை வழங்கும் போது கருத்திற்கொள்ள வேண்டிய தகவுதிறன்களும் மற்றும் விதிக்க வேண்டிய நியதிகளும் மற்றும் நிபந்தனைகளும் பற்றிய வழிகாட்டல்களை வகுத்தமைத்தல்.		
AP/2022/RA/CP/ 03	விசேட வகை எண்ணெய்கள் தொடர்பாக எழுத்திலான அதிகாரத்தை வழங்குவது பற்றிய வழிகாட்டல்களை வகுத்தமைத்தல்.	இலங்கைத் தர நியமம் 1373: உள்ளக எரி டீசல் என்ஜின்களுக்கான க்ராங்கேஸ் என்ற உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கான 2020 - என்ற தலைப்பிலான தகவுதிறன்கள் 2020 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டன. இதுவே ஆகக்குறைந்த தர நியமமாகும். இது அமெரிக்க பெற்றோலிய நிறுவக (API) CH-4 சேர்விஸ் எண்ணெய் வகையை ஒத்ததாகும். எனினும், உண்மையான உபகரண உற்பத்தித் தரப்பு API CH-4 சேர்விஸ் வகை எண்ணெய்யை விடவும் குறைந்தளவு எண்ணெய்களை சிபாரிசு செய்யலாம் என்றிருக்கும் போது புகையிர என்ஜின்கள், கப்பல் என்ஜின்கள், மின்பிறப்பாக்கி இயந்திர	விசேட வகை எண்ணெய்களுக்கு உரிய ஒழுங்குறுத்துகை சூழல் மேம்படுதல்.	

		என்ஜின்கள் முதலிய என்ஜின்களில் ஒரு சிறு பகுதிப் பிரயோகங்கள் காணப்படுகின்றன. அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஒரு உராய்வுநீக்கி சந்தைப் பங்குபற்றும் தரப்பிடமிருந்து தமக்கு தேவையான எண்ணெய்களை கொள்வனவு செய்யும் வகையில் பாவனையாளர்களுக்கான அத்தகைய நிலைமைகளில் எழுத்திலான ஒரு அதிகார வடிவில் விலக்களிப்பை (ஆட்சேபனை அற்ற) வழங்குவது பற்றிய வழிகாட்டல்களை வகுத்தமைத்தல். API CH-4 சேர்விஸ் எண்ணெய் வகையை விடவும் தரத்தில் குறைந்த எண்ணெய்களை இறக்குமதி செய்வதற்கு எழுத்திலான அனுமதியை வழங்கும் போது, வகுத்தமைக்கப்பட்டுள்ள இந்த வழிகாட்டல்கள் மின்வலு சக்தி அமைச்சினால் செயற்படுத்தப்படும்.		
AP/2022/RA/CP/05	பாவித்த உராய்வுநீக்கி எண்ணெய்களை சேகரித்தல், மீள்சுழற்சிப்படுத்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றுக்கான பொறிமுறையை வகுத்தமைத்தல்.	உண்மையான உபகரண உற்பத்தித் தரப்புகள் (உஉஉத) தமது என்ஜின்களுக்கு அல்லது உபகரணங்களுக்கு பயன்படுத்தத் தேவையான உராய்வுநீக்கி எண்ணெய்களின் அளவை சிபாரிசு செய்யும். உராய்வுநீக்கி எண்ணெய்கள் அவை பாவிக்கப்படும் காலத்தில் தரம்கெடும் என்பதால் உஉஉத சிபாரிசு செய்தவாறு வழமையான காலப் பகுதிகளில் உராய்வுநீககி எண்ணெய்கள் மாற்றப்பட்டு புதிய எண்ணெய்கள்	மின்சார நுகர்வோரினதும் மற்றும் சந்தையில் பங்குபற்றும் தரப்புகளினதும் உரிமைகள் பாதுகாக்கப்படுதல்.	5,000,000

		பாவிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பாவிக்கப்பட்ட உராய்வுநீக்கி எண்ணெய்கள் சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படாத விதத்தில் அகற்றப்படுதல் வேண்டும். உண்மையான சொத்துக்களுக்கு அதாவது என்ஜின்களுக்கு நட்டமும் பாதிப்பும் ஏற்படக்கூடும் என்பதால் சரியான முறையில் மீள்சுழற்சிப்படுத்தப்படாமல் அத்தகைய பாவித்த உராய்வுநீக்கி எண்ணெய்கள் மீளப்பாவிக்கப்படுதலும் கூடாது. சரியான மீள்சுழற்சிப்படுத்தல் இல்லாமையினாலும் மற்றும் பாவிக்கப்பட்ட உராய்வுநீக்கி எண்ணெய்கள் மீளப்பாவிக்கப்படுவதனாலும் சந்தையில் கலப்படம் நிறைந்த உராய்வுநீக்கி எண்ணெய்கள் காணப்படுகின்றன. எனினும், கலப்படம் நிறைந்த உராய்வுநீக்கி எண்ணெய்கள் மலிவான விலைகளில் கிடைப்பதால் அறியாமல் நுகர்வோர் அவற்றை வாங்கலாம். முற்றிலும் உடனடியாக அவதானிக்கப்படும் தரம் குறைந்த எரிபொருட்கள் போலல்லாது, தரம் குறைந்த உராய்வுநீக்கி எண்ணெய்களை பாவிப்பதால் ஏற்படும் விளைவு என்ஜின்களுக்கு அதிகளவான பாதிப்புகளை ஏற்படுத்திய பின்னர் பல ஆண்டுகள் கழிந்த பின்னர் மாத்திரமே அத்தகைய பாதிப்புகள் அவதானிக்கப்படும்.		

		பாவித்த உராய்வுநீக்கி எண்ணெய்களை சேகரிப்பதற்கும், மீள்சுழற்சிப்படுத்துவதற்கும் மற்றும் அகற்றுவதற்கும் ஒரு பொறிமுறையை வகுத்தமைத்து அதனை மின்வலு சக்தி அமைச்சுக்கு சிபாரிசு செய்தல். பாவித்த உராய்வுநீக்கி எண்ணெய்களை மீள்சுத்திகரிப்பதற்கும் மற்றும் அகற்றுவதற்கும் அதே போல் பாவித்த உராய்வுநீக்கி எண்ணெய்களை மீள்சுத்திகரிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு அதிகாரம் அளிக்கப்படும் தரப்புகளுக்கு அத்தகைய உராய்வுநீக்கி எண்ணெய்களை கையாளுவதற்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையியல்களை உரிய அதிகார சபை அனுமதிக்கும்.		
AP/2021/RA/CP/01	பெற்றோலிய நிறுவனங்களுக்கான நிறுவனசார் அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல்.	ஏதாவது அனர்த்தத்தை அல்லது உடனடியாக நிகழக்கூடிய ஏதாவது அனர்த்தத்தை தடுக்கும் பொருட்டு, 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்திற்கும், தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்திற்கும் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பீடுசெய்துள்ள வழிகாட்டல்களுக்கும் இணங்க ஒவ்வொரு அமைச்சும், திணைக்களமும் மற்றும் அரச கூட்டுத் தாபனமும் ஒரு நிறுவனசார் அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். மேற்குறித்த விடயங்களுக்கு அமைய நுகர்வோருக்கு பெற்றோலிய உற்பத்திகளை	அனர்த்த நிலைமைகளில் பெற்றோலிய எரிபொருட்களின் விநியோகம் உறுதிப்படுத்தப்படுதல்.	2,000,000

		தொடர்ச்சியாக விநியோகிப்பதை உறுதிசெய்யும் பொருட்டு அன்றிருந்த மின்வலு சக்தி அமைச்சு, பின்வரும் பெற்றோலிய நிறுவனங்களினால் நிறுவனசார் அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும் என நிர்ணயித்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வ/ப இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள் லங்கா (IOC) PLC நிறுவனம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வ/ப இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள் லங்கா (IOC) PLC நிறுவனம் என்பன தயாரிக்க வேண்டிய நிறுவனசார் அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களை தயாரிக்கும் செயல்முறைக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒத்துழைப்பிலும் மற்றும் மின்வலு சக்தி அமைச்சின் அனுசரணையிலும் உதவுதல். அனர்த்த நிலைமைகளின் போது நிறுவனசார் அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வ/ப இலங்கைப் பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள் லங்கா (IOC) PLC நிறுவனம் ஆகியவற்றினால் செயற்படுத்தப்படும். அத்தகைய அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள்		

		பொருத்தமானவாறு அவ்வொப்பொழுது இற்றைப்படுத்தவும்படும்.		
AP/2020/RA/CP/ 01	நடுநிலை மற்றும் கீழ்நிலை இயற்கை எரிவாயு சந்தையை ஒழுங்குறுத்துவதற்கான ஒரு வேலைச்சட்டகத்தை வகுத்தமைத்தல்.	இயற்கை எரிவாயு நாட்டிற்கு அடுத்த கனிய எரிபொருள் தெரிவாக இனங்காணப்பட்டுள்ளது. திரவநிலையிலுள்ள இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மின்வலு சக்தி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள இயற்கை எரிவாயு பற்றிய தேசிய கொள்கையில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (இபொபஆ) நடுநிலை மற்றும் கீழ்நிலை இயற்கை எரிவாயு சந்தையின் ஒழுங்குறுத்தும் அமைப்பாக இனங்காணப்பட்டுள்ளது. ஆகையால், நடுநிலை மற்றும் கீழ்நிலை இயற்கை எரிவாயு சந்தையை ஒழுங்குறுத்துவதற்கான வேலைச்சட்டகத்தையும், அறிவையும் மற்றும் திறன்களையும் வகுத்தமைப்பதன் மூலம் இபொபஆ ஒழுங்குறுத்துகை ஆற்றலை விருத்தி செய்ய வேண்டும். நடுநிலை மற்றும் கீழ்நிலை இயற்கை எரிவாயு சந்தையை ஒழுங்குறுத்துவதற்கு தேவையான ஒழுங்குறுத்துகை சாதனங்களையும் மற்றும் அறிவையும் திறன்களையும் அபிவிருத்தி செய்தலும் வேண்டும். சட்டங்கள், விதிமுறைகள், விதிக்கோவைகள் மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கான மூன்றாம்தரப்பு அணுகுபிரவேசம், இயற்கை எரிவாயு விலை நிர்ணயம், பாதுகாப்பு	இயற்கை எரிவாயுக்கான கேள்வி வினைத்திறனாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதுகாப்பாகவும் பூர்த்தியாகும் நிலை உறுதிப்படுத்தப்படுதல்.	4,924,000

		மற்றும் சுற்றாடல் முதலியன தொடர்பான வழிகாட்டல்கள் என்பன ஒழுங்குறுத்துகை சாதனங்களில் உள்ளடங்கும். நடுநிலை மற்றும் கீழ்நிலை எரிவாயு சந்தையை ஒழுங்குறுத்துவதற்கு இபொபஆ இற்கு அதிகாரம் அளிக்கின்ற சட்டவாக்கம் சட்டமாக்கப்படுவதன் பேரில் தயாரிக்கப்படும் ஒழுங்குறுத்துகை சாதனங்கள், பெற்ற அறிவையும் மற்றும் திறன்களையும் பயன்படுத்தி செயற்படுத்தப்படும்.		
AP/2020/RA/CP/04	இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்நாட்டில் கலக்கப்படும் உராய்வுநீக்கி எண்ணெய்களின் வரித்தீர்வைக் கட்டமைப்பு பற்றி அரசாங்கத்திற்கு தேவையான ஆலோசனை சார்ந்த கொள்கைகளை வகுத்தமைத்தல்.	தற்பொழுது உராய்வுநீக்கி எண்ணெய்களையும் மற்றும் கொழுப்புகளையும் இறக்குமதி செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும், கலப்பதற்கும், உற்பத்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும், விநியோகிப்பதற்கும் அல்லது பகிர்ந்தளிப்பதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பதினெட்டு தரப்புகள் உள்ளன. இவற்றில் நான்கு தரப்புகள் உற்பத்தி செய்வதற்கும் மற்றும் கலப்பதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன. மற்றைய பதினான்கு தரப்புகளும் இறக்குமதி செய்வதற்கு மாத்திரம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன. நான்கு தரப்புகள் உராய்வுநீக்கி எண்ணெய்களை கலப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன. இவை சந்தையில் அண்ணளாவக மூன்றில் இரண்டு பங்கை கொண்டுள்ளன. பதினான்கு தரப்புகள்	உராய்வுநீக்கி எண்ணெய்களின் போட்டியும் மற்றும் நியாய விலையும் மேம்படுதல்.	2,575,800

		முடிவுப்பொருட்களான உராய்வுநீக்கி எண்ணெய்களை இறக்குமதி செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன. இவை சந்தையில் சுமார் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளன. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கும் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கும் இடையில் ஒரு கட்டணத்தீர்வை வித்தியாசம் காணப்படுகின்றது. இந்தக் கட்டணத்தீர்வை இறக்குமதித் தரப்புகளுக்கும் மற்றும் உற்பத்தித் தரப்புகளுக்கும் இடையில் ஒரு போட்டியாக மாறியுள்ளது. கட்டணத்தீர்வை வித்தியாசம் போட்டிக்கு ஒரு தடையாக அமைவதாக உராய்வுநீக்கி எண்ணெய்களின் விலைகளும் மற்றும் தரமும் பற்றி 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பொது மக்களிடமிருந்து ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கேட்டறியும் கூட்டங்களின் போது முறைப்பாடுகள் எழுந்தன. இலங்கையில் உராய்வுநீக்கி எண்ணெய்களை கலப்பதிலுள்ள உள்ளூர் பெறுமதி சேர்த்தலை உறுதிசெய்வதன் பேரில், இறக்குமதி செய்யப்பட்ட உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கும் மற்றும் உள்நாட்டில் கலக்கப்படும் உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கும்		

		இடையிலான கட்டணத்தீர்வை வித்தியாசத்தை திருத்துவதன் மூலம் கட்டணத்தீர்வைக் கட்டமைப்பை நியாயப்படுத்தி ஒழுங்குறுத்துவதற்கும் மற்றும் இடைக்காலத்தில் கட்டணத்தீர்வையின் வித்தியாசத்தை பத்து வீதத்தில் பேணுவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கும் மற்றும் உள்நாட்டில் கலக்கப்படும் உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கும் இடையில் காணப்படும் கட்டணத்தீர்வை வித்தியாசம் தொடர்பாக ஆலோசனை வழங்குமாறு அன்றிருந்த பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் (இபொபஆ) கோரிக்கை விடுத்துள்ளது. அமைச்சரவை தீர்மானித்துள்ளவாறு இடைக்காலத்தில், நடைமுறை கட்டணத்தீர்வை வித்தியாசத்தை உறுதிப்படுத்தி அதனை பத்து வீதத்தில் பேண வேண்டும். உள்நாட்டு பெறுமதி சேர்த்தல் பற்றிய சுயாதீனமான விரிவான ஒரு ஆய்வை நடத்தி, நியாயமான போட்டியை ஊக்குவிப்பதற்கு கட்டணத்தீர்வை வித்தியாசத்தை நிர்ணயிக்க வேண்டும். அரசாங்கத்திற்கு ஆய்வின் ஊடாக வகுத்தமைக்கப்படும் கட்டணத்தீர்வை கட்டமைப்பு பற்றிய		

		ஆலோசனை வழங்கப்படுதல் வேண்டும்.		
AP/2020/RA/CP/05	பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றுடன் மண்ணெண்ணெய் கலக்கப்படுவதை கண்டறிவதற்கான நடைமுறையை வகுத்தமைத்தல்.	பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றுடன் மண்ணெண்ணெய் கலக்கப்படுவதால் பெற்றோலிய உற்பத்திகள் கலப்படம் நிறைந்தவையாக காணப்படுவதாகவும், அதிக விலைகளின் காரணமாக பெற்றோலினதும் மற்றும் டீசலினதும் மற்றும் மண்ணெண்ணெயினதும் விலைகளுக்கு இடையில் பாரியளவு வித்தியாசம் அவதானிக்கப்படுவதாகவும் மற்றும் அது தரத்தை அதிகளவில் குறைப்பதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. பெற்றோலிய எரிபொருட்களின் தரம் தொடர்பான பிரச்சினைகளை அடையாளப்படுத்தும் பொருட்டு, மிக முக்கியமாக கெசோலைன் எண்ணெய்க்கும் மற்றும் டீசலுக்கும் தேவையான இலங்கை தர நியமங்கள் திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. பெற்றோலிலும் மற்றும் டீசலிலும் மண்ணெண்ணெய் கலப்படம் காணப்படுவது அடங்கலாக பெற்றோலிய எரிபொருட்களின் கலப்படத்தை கண்டறியக்கூடிய வகையில் பெற்றோலிய எரிபொருட்களின் தரத்தை பரிசீலிப்பதற்கான ஒரு பொறிமுறையை வகுத்தமைத்து மின்வலு சக்தி அமைச்சுக்கு அதனை பரிந்துரை செய்தல். வகுத்தமைக்கப்படும் நடைமுறையை அமைச்சு	பெற்றோலிய எரிபொருட்களில் கலப்படங்கள் தவிர்க்கப்படுதல்.	3,863,700

		உரிய அரசாங்க முகவர்நிலையங்களுடனும் மற்றும் பெற்றோலிய சந்தைக் கம்பனிகளுடனும் இணைந்து செயற்படுத்தும்.		
AP/2020/RA/CP/09	பெற்றோலிய எரிபொருட்களுக்கான இலங்கை தர நியமங்களை மீளாய்வு செய்து இற்றைப்படுத்துதல்.	2018 ஆம் ஆண்டில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பிராந்திய ரீதியில் நடத்திய பொது மக்கள் ஆலேசனைக் கூட்டங்களின் போது, பெற்றோலியக் கைத்தொழில் தொடர்பாக எழுப்பப்பட்ட முக்கியமான பிரச்சினைகளில், தரம் குறைந்த பெற்றோலிய எரிபொருட்களின் விற்பனையும் மற்றும் தவரான பெற்றோலிய அளவீடும் உள்ளடங்குகின்றன. கெசோலைன் எண்ணெய், டீசல், மண்ணெண்ணெய், உலைஎண்ணெய் மற்றும் திரவநிலையிலுள்ள பெற்றோலிய எரிவாயு என்பவற்றுக்கு புதிய ஒரு இலங்கை தர நியமத்தை தயாரிக்குமாறு அல்லது அத்தகைய ஒரு தர நியமத்தை இற்றைப்படுத்துமாறு இலங்கை தர நியமங்கள் கட்டளைகள் நிறுவகத்திடமும் மற்றும் அதனை ஒருங்கிணைப்பு செய்யுமாறு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடமும் (இபொபஆ) அன்றிருந்த பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மேலும் கோரியுள்ளார். கெசேலைன் எண்ணெய்க்கும் மற்றும் டீசலுக்கும் உரிய இலங்கை தர நியமங்கள் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்பட்டுள்ளன.	பெற்றோலிய எரிபொருட்களின் தரம் உறுதிப்படுத்தப்படுதல்.	500,000

		மண்ணெண்ணெய், உலைஎண்ணெய் மற்றும் திரவநிலையிலுள்ள பெற்றோலிய எரிவாயு என்பவற்றுக்கு உரிய இலங்கை தர நியமங்களை மீளாய்வு செய்து இற்றைப்படுத்துதல். மண்ணெண்ணெய், உலைஎண்ணெய் மற்றும் திரவநிலையிலுள்ள பெற்றோலிய எரிவாயு என்பவற்றுக்கு உரிய இலங்கைத் தர நியமங்களை உரிய அதிகார சபையின் ஊடாக கட்டாயப்படுத்தி, நடைமுறைப்படுத்தி இற்றைப்படுத்துதல்.		
AP/2022/RA/RU/1	உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தையை ஒழுங்குறுத்துவது பற்றி விடய அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் உதவுதல்.	2006 ஆம் ஆண்டில் அமைச்சரவை எடுத்த ஒரு தீர்மானத்தின் பிரகாரம், கீழ்நிலை பெற்றோலிய கைத்தொழிலை ஒழுங்குறுத்துவதற்கு இபொபஆ ஐ இயலச்செய்யக்கூடிய 2002 இன் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கான திருத்தங்கள் செய்யப்படும் வரை, கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகை விடயங்கள் பற்றி மின்வலு சக்தி அமைச்சுக்கு ஆலோசனையையும் மற்றும் உதவியையும் வழங்கி இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (இபொபஆ) உராய்வுநீக்கி எண்ணெய்யினதும் மற்றும் கொழுப்பினதும் சந்தையின் ஒரு மறைமுக ஒழுங்குறுத்தும் அமைப்பாக தொழிற்பட வேண்டியுள்ளது. இந்த செயற்பாட்டின் ஊடாக உராய்வுநீகி	உராய்வுநீக்கி எண்ணெய்களுக்கும் மற்றும் கொழுப்புக்களுக்குமான கேள்வி வினைத்திறனாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதுகாப்பாகவும் பூர்த்தியாகும் நிலை உறுதிப்படுத்தப்படுதல்.	5,500,000

		எண்ணெய்யினதும் மற்றும் கொழுப்பினதும் சந்தை தொடர்பான கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகை பற்றி மின்வலு சக்தி அமைச்சுக்கு ஆலோசனையையும் மற்றும் உதவியையும் வழங்க இபொபஆ திட்டமிட்டு வருகின்றது.		
AP/2022/RA/RU/2	கீழ்நிலைப் பெற்றோலியக் கைத்தொழிலை ஒழுங்குறுத்துவது பற்றி விடய அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் உதவுதல்.	பெற்றோலிய கைத்தொழிலை இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் (இபொபஆ) ஒழுங்குறுத்தப்படும் கைத்தொழில்களில் உள்ளீர்ப்பதற்கு 2006 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தினால் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கீழ்நிலை பெற்றோலிய கைத்தொழிலை ஒழுங்குறுத்தும் செயற்பாட்டை ஆரம்பிக்கும் முகமாக இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு (இபொபஆ) தேவையான கைத்தொழில் சட்டம் 2012 ஆம் ஆண்டில் அன்றிருந்த பெற்றோலிய கைத்தொழில்கள் அமைச்சினால் தயாரிக்கப்பட்டது. குறித்த சட்டம் சட்டமாக்கப்பட்டு ஒழுங்குறுத்துகை ஆற்றல் கட்டியெழுப்பப்படும் வரை, இபொபஆ கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகை விடயங்கள் பற்றி விடய அமைச்சுக்கு ஆலோசனையையும் மற்றும் உதவியையும் வழங்கி வருகின்றது. இபொபஆ: 1. அமைச்சினால் கோரப்படுகின்றவாறு அதன் முயற்சிகள் மீது தேவையானவாறு	பெற்றோலிய எரிபொருட்களுக்கான கேள்வி வினைத்திறனாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதுகாப்பாகவும் பூர்த்தியாகும் நிலை உறுதிப்படுத்தப்படுதல்.	8,275,000

		கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகை விடயங்கள் பற்றி மின்வலு சக்தி அமைச்சுக்கு ஆலோசனையையும் மற்றும் உதவியையும் வழங்குவதற்கும் 2. இந்த செயற்பாட்டின் ஊடாக 2022 ஆம் ஆண்டு இறுதியளவில், எரிபொருள் நிரப்பு இயந்திரங்களை இயக்கும் 1000 இயக்கு உதவியாளர்களுக்கு பயிற்சியளித்து சான்றிதழ்களை வழங்குவதற்கும் திட்டமிட்டு வருகின்றது.		
AP202**2**/LIC/RU/02	உராய்வுநீக்கி எண்ணெய்கள் பிரிவு அனுமதிப் பத்திரங்கள் வழங்கல் மற்றும் சம்பந்தப்பட்ட நடபடிமுறைகள்	பெற்றோலிய உற்பத்திகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் (2002 இன் 33 ஆம் இலக்க) பிரகாரம், உராய்வுநீக்கி எண்ணெய்த் துறையை ஒழுங்குறுத்துவதற்கு ஒரு அனுமதிப் பத்திரத்தை விநியோகிக்கும்/இணக்கத்தை தெரிவிக்கும்.	நாட்டின் குறித்த சட்டவரையறைக்கு இணங்க விண்ணப்பதாரர்கள் தமது உராய்வுநீக்கி எண்ணெய் வியாபாரத்தை (இறக்குமதி, ஏற்றுமதி, கலத்தல், விநியோகித்தல், பகிர்ந்தளித்தல்) மேற்கொள்வதற்கு தகுதிபெறல்.	0
AP/2022/LIC/RU/05	தகவல்களைப் பரப்புதல் (மின்சார பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்ற தரப்பு செயல்திறன் அறிக்கைகள்)	உராய்வுநீக்கி எண்ணெய்களின் சந்தைதத் தரப்புகளின் செயல்திறன்கள் காலாண்டு ரீதியில் பகுப்பாய்வு செய்யப்பட்டு வெளியிடப்படும்.	அக்கறையுடைய தரப்புகளுக்கு தகவல்கள் கிடைத்தல்.	0
AP/2022/LIC/RU/07	PLISS நிருவாகம் (பெற்றோலியம் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய்கள் தகவல் சமர்ப்பண முறைமை)	முறைமையை கண்காணித்து இற்றைப்படுத்துதல்.	அக்கறையுடைய தரப்புகளுக்கு தகவல்கள் பரப்பப்படுதல்.	0

மனித வளம் மற்றும் நிருவாகம்

குறிப்பு இலக்கம்	செயற்பாடு	செயற்பாடு பற்றிய விபரம்	அக்கறையுடைய தரப்புகளுக்கு கிடைக்கும் நன்மைகள்	நேரடி ஆகுசெலவு (இ.ரூ.)
AP22/CP/HR /01	மவ மற்றும் நிருவாகம் ஆகியன தொடர்பான உள்ளக செயல்முறைகளை மேம்படுத்துவதில் ஒட்டுமொத்த தர முகாமைத் திட்டத்தை செயற்படுத்துதல்.	ஆவணங்களை சேமிப்பதற்காக அலுவலக இடத்தை நிருவகிப்பதிலும், ஒட்டுமொத்தக் தர முகாமைத்துவக் கொள்கைகளுக்கு ஏற்ப அலுவலக வளாகத்தை நிருவகிப்பதிலும் உள்ள சிரமங்கள் மற்றும் உள்ளக செயல்முறைகளில் சாத்தியமான மேம்பாடுகள் என்பன இனங்காணப்பட்டுள்ளன.	உள்ளக செயல்முறை மேம்படுதல்.	1,000,000.00
AP22/CP/HR/02	மவ தானியக்கம் - ஆ.ப்போர்டிங;/ராஜினாமா அங்கீகர செயல்முறையுடன் தற்போதுள்ள HRIS ஐ மேம்படுத்துதல்.	தற்போதுள்ள மனித வளத் தகவல் முறைமையானது தொகுதிகளை சேர்த்து படிப்படியாக உருவாக்கப்பட்டது. எனினும் தற்போது அது ராஜினாமா/ஆ.ப்போர்டிங் செயல்முறையுடன் சேர்க்கப்படவில்லை. ஊழியர்கள் தேவையான அனைத்து ஆவணங்களையும் கைமுறையாக பூர்த்தி செய்ய வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட ஊழியர் ராஜினாமா செய்தவுடன் /ஓய்வு பெற்றவுடன் மவ தேவைப்படும்போது பதிவுகளை எளிதாக்க அனைத்து கையேடு ஆவணங்களையும் சேமிக்க வேண்டும்.	காகிதமில்லா பரிவர்த்தனைகளை செயல்படுத்துவதற்கும் மற்றும் ராஜினாமா அனுமதி செயல்முறை தொடர்பான தகவல்களை வைத்திருக்கவும் மற்றும் மீட்டெடுக்கவும் தேவையான திறன் மேம்படுதல்.	-
AP22/CP/HR/03	ஊழியர் பிராண்டிங் (தற்போதுள்ள பொறியாளர்களை ”பட்டயப் பொறியலாளர்களாக” ஆகுவதற்கு தேவையான	இபொபஆ இல் தற்போது மூன்று (03) பட்டயப் பொறியாளர்கள் மட்டுமே உள்ளனர். எஞ்சிய 14 பொறியாளர்கள்	தற்போதுள்ள பொறியாளர்கள் தகுதியைப் பெறுவதன் மூலம் அவர்களை ”பட்டயப் பொறியியலாளர்கள்	2,500,000.00

	உதவிகளை வழங்குதல்)	”பட்டய பொறியாளர்” ஆவதற்கு அவர்களால் விண்ணப்பிக்க முடியவில்லை. வளங்களின் பற்றாக்குறையும் மற்றும் பயிற்சி திறன்கள் இல்லாமையும் காரணமாக சான்றிதழுக்கான முறைமை அங்கீகரிக்கப்படாமை இதற்கான காரணமாகும்.	” என குறிப்பிடுவதற்கு இயலுமாகுதல். இதனால் அவர்களின் எதிர்கால வாழ்க்கைப் பாதை மேம்படும். நாட்டிற்கு செறிவூட்டப்பட்ட சேவைகளை உருவாக்குவதில் தகுதி பெற்ற பட்டயப் பொறியாளர்களைக் கொண்டிருப்பதன் மூலம் ஆணைக்குழுவுக்கு நன்மை கிடைக்கும்.	
AP22/CP/HR/04	புதிய வருகை கண்காணிப்பு முறைமை	தற்போதுள்ள வருகை கண்காணிப்பு முறைமை சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு பெறப்பட்டது. தற்போது ஊழியர்களின் விரல் அடையாளங்கள் பதிவதை கண்காணிப்பதிலும் வருகையை பதிவு செய்வதிலும் சில சிக்கல்கள் உருவாகுகின்றன. இது ஊழியர்களின் சரியான மற்றும் துல்லியமான வருகை தரவை பராமரிப்பதில் சிரமங்களை ஏற்படுத்துகின்றது.	ஊழியர் வருகையைக் கண்டறிவதில் செயல்திறன் அதிகரித்தல் மற்றும் மிகவும் துல்லியமான பதிவுகள் உருவாகுதல்.	-
AP22/RU/HR/01	ஆற்றல் அபிவிருத்தி மற்றும் பயிற்சி	குறுகிய காலத்தில் செயல்திறனை மேம்படுத்துவதற்கு துல்லியமான திறன்களையும் அறிவையும் கற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ஊழியர்களுக்கு உதவுதல் மற்றும் எதிர்கால செயல்திறனுக்கான விரிவான ஊழியர் அபிவிருத்தித் திட்டங்கள் அடங்கலாக அபிவிருத்தி வாய்ப்புகளை பெற்றுக் கொடுத்தல். ஊழியர்களின்	ஊழியர் ஈடுபாடு, ஊக்கம் மற்றும் குழுப்பணி திறன்கள் என்பன மேம்படுதல்.	3,500,000.00

		புதுமையான சிந்தனை மற்றும் தற்போதைய திறன் நிலைகளின் மேம்பாடுகளை நோக்கமாகக் கொண்டு ஒரு கற்றல் நிறுவனத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.		
AP22/RU/HR/02	செயல்திறன் முகாமைத்துவம்	2021 ஆம் ஆண்டின் செயல்திறனின் அடிப்படையில் அனைத்து தனிநபர்களுக்கும் வருடாந்த செயல்திறன் மதிப்பீடுகள் நடத்தப்பட்டன. அந்தந்த மேற்பார்வையாளர்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் வருடாந்த மேம்பாட்டிற்கு பரிந்துரை செய்யப்பட்டது.	ஊழியர் செயல்திறன் மேம்படுதல் மற்றும் ஊக்கம் பெறுதல்.	-
AP22/RU/HR/03	ஊழியர் ஈடுபாடும் அவர்களின் நலன்புரி விடயங்களும்	ஊழியர் ஈடுபாட்டை அதிகரிப்பதானது கடைசியாக ஊழியர் அர்ப்பணிப்பு நிலை மற்றும் நிறுவனத்துடனான தொடர்பு ஆகியவற்றுடன் சம்பந்தப்படுகின்றது. அதிக அளவிலான ஈடுபாடு திறமையைத் தக்கவைத்து, செயல்திறனை மேம்படுத்துகின்றது. வருடத்தில் 2 ஈடுபாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.	ஊழியர் ஊக்கம் பெறுதல் மற்றும் குழுப்பணியில் அபிவிருத்தி ஏற்படுதல்.	1,500,000.00
AP22/RU/HR/04	ஏனைய வழமையான நிருவாக வேலைகள்	ஆணைக்குழுவின் அன்றாட நடவடிக்கைகளின் சுமூகமான செயல்பாட்டை எளிதாக்குதல்.	அலுவலக வளாகம் சீராக இயங்குவதற்கு வசதி வாய்ப்புகள் கிடைத்தல்.	

ததொ மற்றும் முதமு பிரிவு

குறிப்பு இலக்கம்	செயற்பாடு	செயற்பாடு பற்றிய விபரம்	அக்கறையுடைய தரப்புகளுக்கு கிடைக்கும் நன்மைகள்	நேரடி ஆகுசெலவு (இ.ரூ.)

AP/2022/IT/CP/01	டிஜிட்டல் ஊடகத் தளம்	இபொபஆ இன் தகவல்தொடர்பு முயற்சிகளை டிஜிட்டல் முறையில் ஆதரிப்பது அவசியமாகும். மேலும் தகவல் தொழில்நுட்பத்தினதும் மற்றும் தகவல் தொடர்பு உத்திகளினதும் மூலோபாய மறுசீரமைப்பை உறுதிசெய்வதும் அவசியமாகும். டிஜிட்டல் தகவல்தொடர்புகள் மிகவும் வேகமானவை, பயனுள்ளவை மற்றும் சீரானவை என நிரூபிக்கப்பட்டுள்ளன. மேலும் அந்தத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதும் அவசியமாகும். சமூக ஊடகங்கள் அடங்கலாக அனைத்துத் தகவல்தொடர்புகளும் ஒரே டாஸ்போர்டு மூலம் நிருவகிக்கப்படும். இந்த டாஸ்போர்டு தபால், அஞ்சல், தொலைநகல், மின்னஞ்சல், எஸ்எம்எஸ், விழிப்புணர்வு பிரச்சாரங்கள், கண்காட்சிக் கொட்டகைகள், வெளிவாரி விளம்பரங்கள், மின்னணு ஊடகங்கள், அச்சீட்டு ஊடகங்கள், சமூக ஊடகங்கள், முகநூல், ட்டுவிட்டர், யூடியூப், இன்ஸ்டாகிராம், வாட்ஸ்அப், வைபர் போன்ற சமூக ஊடகங்கள் உட்பட அனைத்து தகவல்தொடர்புகளையும் ஒருங்கிணைக்கும். கட்டண விளம்பரம்,	அக்கறையுடைய தரப்புகளின் தகவல்தொடர்புகள் மேம்படுதல். ஒரு ஊடக நூலகத்தில் சேமிக்கப்பட்டுள்ள அனைத்து உள்ளடக்கங்களும் அக்கறையுடைய தரப்புகளுடன் சீரான, வேகமான, துல்லியமான மற்றும் விரிவான தகவல்களைப் பரிமாறிக்கொள்ள உதவுதல்.	1,500,000

		உடனடி செய்தி அனுப்புதல் / ஒன்லைன் அரட்டை, முதலியன மற்றும் பல்வேறு தொடர்புமார்க்கள் மூலம் செய்திகளை அனுப்ப அனுமதிக்கின்றது. ஸ்கேன் செய்யப்பட்ட கடிதங்கள், எஸ்எம்எஸ் நுழைவாயில்கள், நெட்வொர்க் /பேக்சிங், மெயில் சர்வர், முகநூல், ட்டுவிட்டர், வாட்ஸ்அப், வைபர், யூடியூப் போன்றவற்றின் ஏபிஐ கள் மூலம் அனைத்து தகவல் தொடர்பு மார்க்கங்களும் இந்த டேஸ்போர்டுடன் ஒருங்கிணைக்கப்படும். இந்த தளம் பல்வேறு தகவல் தொடர்பு மார்க்கங்களின் குறுக்கு-இணைப்பை அனுமதிக்கின்றது. இது செயல்திறன் அளவீடுகளை உருவாக்கும் வகையில் பல்வேறு தரவுகளை சேகரிக்கும். தகவல்தொடர்பு திட்டமிடல், கலெண்டர்களை பேணுதல், வரலாறுகளை பதிவு செய்தல் போன்றவையும் சாத்தியமாகும். இன்போ கிராபிக்ஸ் உருவாக்க தரவுக் களஞ்சியங்கள் இணைக்கப்படும். தகவல் அதிகாரியின் பங்கு இதற்கு ஆதரவாக இருக்கும்.		
AP/2022/IT/CP/02 (AP21/IT/CP/01)	மறுசீரமைப்பு LISS (அனுமதிப் பத்திரங்கள் வழங்கல் பிரிவிலிருந்து வரும் வரவுசெலவுத் திட்டம்)	தற்போதுள்ள LISS இன் பயனர்கள் பின்வரும் வரையறைகளை சுட்டிக்காட்டியுள்ளனர்: நெகிழ்வுத்தன்மை மற்றும் அதன் விளைவாக இபொபஆ இன் ஊழியர்கள் புதிய டெம்ப்ளேட்களை	தொழில்துறையில் சிறந்த நுண்ணறிவு. உரிமம் பெற்ற தரப்புகளிடமிருந்து தகவல்களை சேகரிக்க அதிக தரவு சார்ந்த அமைப்பு உருவாகும். மேலும் அனுமதி பெற்ற	

		வடிவமைக்க முடியாது. ஆகையால் உரிமம் பெற்ற தரப்புகள் அதன்படி தரவுகளை சமர்ப்பிக்க வேண்டும். எனவே அது எப்போதும் அபிவிருத்தி செய்யும் தரப்பை சார்ந்திருக்க வேண்டும். தற்போது, இபொபஆ ஊழியர்களால் வினவல் செயற்பாட்டை செயற்படுத்துவதன் மூலம் தேவையான அறிக்கைகளைப் பெற முடியவில்லை. ஆகையால் அது அபிவிருத்தி செய்யும் தரப்பை சார்ந்திருக்க வேண்டும். கணனியில் பயனர்நேயம் இல்லாமை தொடர்பாக உரிமம் பெற்ற தரப்புகள் முறையிட்டுள்ளன. தற்போது, தரவு சரிபார்ப்பு LISS இல் இடம்பெறுவதில்லை. மேலும் ஊழியர்கள் தரவை கைமுறையாக சரிபார்ப்பதற்கு நேரத்தை செலவிடவேண்டியுள்ளது. தற்போது LISS இல் உள்ள தரவின் ஒருமைப்பாடு, துல்லியம், முழுமை, நிலைத்தன்மை போன்றவற்றில் சிக்கல்கள் எழுந்துள்ளன. பொதுவாகப் பயன்படுத்தப்படும் தரவு பகுப்பாய்வு சாதனங்களுடன் ஏற்கனவே இருக்கின்ற LISS ஐ இணைப்பது எளிதல்ல. தற்போதுள்ள முறைமை முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை. உரிமம் பெற்ற தரப்புகள் எக்செல் தாள்களை LISS இற்கு சமர்ப்பிப்பது ஒரு தேவையற்ற தொந்தரவாகும் என்பதால் LISS ஐ	தரப்பின் தரவு மிகவும் நிகழ்நேர முறையில் கிடைத்தல்.	

		தானாக புதுப்பிப்பதற்கு உரிமம் பெற்ற தரப்புகளின் தகவல் முறைமையை LISS உடன் ஒருங்கிணைக்க வேண்டும். LISS என்பது ஒரு தரவு-மைய பயன்பாடாகும். எனவே இது ஒரு தரவு சார்ந்த கட்டமைப்பின் மீது கட்டமைக்கப்படுதல் வேண்டும். இதனால் இது ஒருபுறம் தானியங்கித் தரவு பரிமாற்றத்திற்கான அனுமதி பெற்ற தகவல் முறைமைகளுடன் எளிதாக ஒருங்கிணைக்கப்படலாம். மறுபுறம் LISS ஆதாரத் தரவுப் பகுப்பாய்வு மற்றும் தரவுகள் காட்சிப்படுத்தல் ஆகியவற்றுக்கு ஆதரவாகவும் இருக்கலாம்.		
AP/2022/IT/CP/03 (AP21/IT/CP/02)	தொழில்நுட்பத் தகவல் முறைமை	2021 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் தொழில்நுட்பத் தகவல் முறைமை அதன் வரிசைப்படுத்தலை நிறைவு செய்யும் பணியை 2022 ஆம் ஆண்டில் தொடர வேண்டும். தற்போது, நுகர்வோர் தகுதியான தொழில்நுட்ப வல்லுனர்களைக் கண்டறிய அவர்களுக்கு வழி இல்லை. இந்த முறைமை தகுதி வாய்ந்த தொழில்நுட்ப வல்லுனர்களின் சேவைகளைப் பெற உதவுகின்றது. பெரும்பாலான மின் விபத்துக்கள் தகுதியற்ற ஊழியர்களால் மேற்கொள்ளப்படும் வேலைகளால் ஏற்படுவதாகவும், நுகர்வோர் தகுதி வாய்ந்த தொழில்நுட்ப	மின்னியலாளர்கள், குழாய் பொருத்துநர்கள் போன்றவர்கள் பற்றிய தகவல்கள் நுகர்வோருக்கு கிடைத்தல். மொபைல் செயலி மின்சார பில் கால்குலேட்டர் போன்ற பிற சேவைகளும் கிடைத்தல். மேலும் தொழில்நுட்பத் தகவல்களைத் தேடுவதற்கு கூடுதலான வாய்ப்பும் கிடைத்தல்.	1,500,000

		வல்லுனர்களின் சேவைகளைப் பெற முடிந்தால், அது மின் பாதுகாப்பை மேம்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, மின்னியலாளர் அல்லது தொடர்புடைய சேவைகளைப் பதிவுசெய்து, நுகர்வோர் தகவல்களை எளிதாக அணுகக்கூடிய ஒரு முறைமையை தாபிக்க இபொபஆ திட்டமிட்டுள்ளது.		
AP/2022/IT/CP/04	இபொபஆ இற்கான App	கணனிகளைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையை விட ஸ்மார்ட் தொலைபேசிகளை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. எனவே இபொபஆ இன் பயன்பாடுகள் ஸ்மார்ட்போன்கள், டேப்லெட்கள் போன்ற மொபைல் சாதனங்களில் இருக்க வேண்டும். ஏனெனில் பெரும்பாலான மக்கள் இப்போது சேவைகளை அணுகப் பழகிவிட்டனர். மொபைல் சாதனங்களைப் பயன்படுத்தும் வெவ்வேறு இடங்கள் மற்றும் மொபைல் பயனர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இபொபஆ இன் சேவைகளும் அமைய வேண்டும். எனவே, பொது மக்களுக்கு தொழில்நுட்ப தகவல்களை வழங்குவதற்கும் மின்சார கட்டண கணிகருவிகள் போன்ற பல்வேறு சேவைகளை வழங்கும் மொபைல் செயலியை உருவாக்குவதற்கு இபொபஆ திட்டமிட்டுள்ளது.	ஸ்மார்ட்.்.போன் பயனர்கள் கணனி பயனர்களை விட அதிகமாக உள்ளதால் மொபைல் பயனர்கள் பயன்பெறும் வகையில் மொபைல் சாதனங்களிலும் இபொபஆ இன் சேவைகள் மேம்படுதல்.	1,900,000

AP/2022/IT/CP/05	எதிர்கால ததொதொ போக்குகளும் மற்றும் அவற்றின் பிரயோகமும் பற்றிய ஆய்வு	தகவல் தொழில்நுட்பம் என்பது வேகமாக வளர்ந்து வரும் ஒரு துறையாகும். எனவே இபொபஆ இன் ததொ மூலோபாயம் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் செலவு குறைந்ததாக வழங்க முடியும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இந்த செயல்பாடு பல்வேறு தொழில்நுட்பங்களின் பரிணாம வளர்ச்சியின் போக்குகளை ஆராய்வது மற்றும் இபொபஆ ததொ உத்தியை உலகளாவிய போக்குகளுக்கும் மற்றும் உள்ளூர் தேவைகளுக்கும் ஏற்ப செலவு குறைந்த முறையில் சீரமைப்பதை உள்ளடக்கியுள்ளது.	டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் மாறிவரும் போக்குகளுக்கு ஏற்ப நிறுவன மூலோபாயத்துடன் ததொ மூலோபாயத்தை சீரமைப்பதன் மூலம் உள்ளக செயல்முறைகள் மேம்படுதல்.	1,800,000
AP/2022/IT/RU/01 (AP21/RU/IT/34)	தானியக்க பெறுகை வேலையொழுக்கு	விரைவான கொள்முதல் மற்றும் திட்டங்களை விரைவாக செயல்படுத்துதல் ஆகியவற்றை உறுதி செய்வதற்காக கொள்முதல் செயல்முறையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கொள்முதல் செயல்முறையின் தாமதத்தை குறைத்தல் ஆகியவை இந்த நடவடிக்கையின் மூலம் மேற்கொள்ளப்படும். கொள்முதலில் ஏற்படும் காலதாமதத்தால் உருவாகும் கருத் திட்டத்தின் தாமதங்கள் இந்த நடவடிக்கையின் மூலம் இல்லாமல்செய்யப்படும்.	உள்ளக செயல்முறை மேம்படுதல். கொள்முதல் நடவடிக்கைகள் சீராகுதல். கைமுறை பணிகளில் செலவிடும் நேரம் குறைதல். மேலும் இபொபஆ இன் உற்பத்தித்திறன் மேம்படுதல்.	1,400,000
AP/2022/IT/RU/02 (AP21/RU/IT/32)	தரவுகள் பகுப்பாய்வு	இந்த் செயற்படு இபொபஆ ஆல் ஒழுங்குறுத்தப்படும் கைத்தொழில்களுக்கான நுண்ணறிவுகளுக்கு உதவுவது, தரவு சார்ந்த	தொழில்துறையில் சிறந்த நுண்ணறிவு, பின்நோக்கு, தொலைநோக்கு. பெரிய தரவு தொழில்நுட்பங்களைப்	1,500,000

		ஒழுங்குறுத்துகையை எளிதாக்குதல், சரியான தகவலைப் பரப்புதல் மற்றும் இபொபஆ இன் தரம் ஆகியவற்றில் சம்பந்தப்படுகின்றது.	பயன்படுத்துவதன் மூலம், அக்கறையுடைய தரப்புகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவு, தொழில்துறையை நன்கு புரிந்துகொள்ளக் கூடிய வகையில் பகுப்பாய்வு செய்ய உதவுதல்.	
AP/2022/IT/RU/03	ஏற்கனவேயுள்ள வர்த்தகப் பிரயோகங்களை மேம்படுத்துதல்	அக்கறையுடைய தரப்புகளின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் அவை தொடர்ந்து தொடர்புடையதாக இருப்பதை உறுதிசெய்ய, இருக்கும் வணிக பயன்பாடுகள் தொடர்ந்து புதுப்பிக்கப்படும் வேண்டும். இந்த செயல்பாடு, தேவைப்படும்போது தொடர்புடைய பயன்பாடுகளைப் புதுப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப தற்போதுள்ள பயன்பாடுகளை உருவாக்குவதன் மூலம் ஏற்கனவே செய்யப்பட்ட முதலீடுகளின் ROI மேம்படுதல். நிதி உற்பத்தித்திறன் மேம்படுதல்.	1,500,000
AP/2022/IT/RU/04	மனித வளத்தையும் (மவ) நிதியையும் மேம்படுத்துதல்	இந்த செயற்பாடு, தற்போதுள்ள மனிதவள மற்றும் நிதி முறைமைகளை மேம்படுத்தி வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.	உள்ளக செயல்முறை மேம்படுதல். மனிதவள மற்றும் நிதி வணிக செயல்முறைகள் தானியக்கம் பெறல். இபொபஆ இன் உற்பத்தித்திறன் மேம்படுதல்.	1,500,000
AP/2022/IT/RU/05	BCP/DR + பாதுகாப்பு	இபொபஆ இன் ஊழியர்கள் மற்றும் வெளிவாரி அக்கறையுடைய தரப்புகள் ஆகிய இரு தரப்புகளும் முறைமைகளை எப்போதும் அணுக முடியும் என்பதை உறுதி செய்வதற்காக, இபொபஆ இன் BCP/DR மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பை அவ்வப்போது வலுப்படுத்த இந்த	வேலையில்லா நேரம் குறைதல். இபொபஆ இன் பிரசன்னம் மேம்படுதல். இதனால் வெளிவாரி அக்கறையுடைய தரப்புகள் அவரற்றின் செயல்பாடுகளுக்கு பயன் பெறுதல். மேலும் இதனால் முறிவுகள், தாக்குதல்கள் போன்றவற்றால் ஏற்படும்	1,500,000

		செயற்பாடு திட்டமிடப்பட்டுள்ளது.	இடையூறுகளும் குறைதல்.	
AP/2022/IT/RU/06	வெளிவாரி நிகழ்வகளுக்கான வீடியோ தீர்வு	லைவ் ஸ்ட்ரீம்கள் மற்றும் வீடியோ நூலகம் ஆகியவற்றில் இருந்து (அல்லது மல்டிமீடியா உள்ளடக்க பெட்டகம்) வீடியோக்களை பெரிய திரையில் காட்சிப்படுத்த உதவும் முறைமை செயல்படுத்தப்படும். வீடியோக்களுடன் கூடுதலாக, இந்த முறைமை இபொபஆ இன் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பொது ஆலோசனை கூட்டங்கள் என்பவற்றுக்கு உதவ, இன்போ கிராபிக்ஸ் போன்ற பிற வகையான உள்ளடக்கத்திற்கும் உதவும்.	காட்சி சாதனங்களின் மூலம் பயனுள்ள தகவல்தொடர்பு, தகவல் மிகவும் வினைத்திறன் வாய்ந்த விதத்தில் பரவுதல், மேலும் செய்திகள் அக்கறையுடைய தரப்புகளுக்கு விரைவான மற்றும் முடிவுகளை உருவாக்கும் வகையில் கிடைத்தல்.	1,900,000
AP/2022/IT/RU/07	உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி	உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், ஊழியர்கள் சேவை இடையூறுகள் இன்றி தமது பணிகளை நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்கும், போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் பராமரிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். அவை ஏற்கனவே உள்ள மற்றும் புதிதாக சேர்க்கப்பட்ட சேவைகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அவை வணிக செயல்முறைகளை தானியக்கப்படுத்துகின்றன. இந்த செயற்பாடு இபொபஆ இன் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவதற்கு	இபொபஆ இன் தற்போதைய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதி மேம்படுதல். அக்கறையுடைய தரப்புகளுக்கு வழங்கப்படும் ஒன்லைன் சேவைகளின் நம்பகத்தன்மை மேம்படுதல்.	5,700,000

		வடிவமைக்கப்பட்டுள்ளது.		
AP/2022/IT/RU/08	அலுவலகத் தானியக்கம்	ஊழியர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்க செய்யக்கூடிய ஒரு முக்கிய பங்களிப்பானது, அலுவலக தானியக்கத்தின் அளவை அதிகரிப்பதாகும். ஏனெனில் இது ஆள்ரீதியாக மேற்கொள்ளப்படும் வேலைகளின் அளவைக் குறைக்கலாம். ஊழியர்கள் தமது நேரத்தை மிகவும் பயனுள்ள பணிகளில் செலவிடலாம். இந்த செயற்பாடு அலுவலக தானியக்கத்தை மேம்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.	உள்ளக செயல்முறை மேம்படுதல். இபொபஆ இன் உற்பத்தித்திறன் அதிகரித்தல்.	6,800,000
AP/2022/IT/RU/09	பேணுகை	இபொபஆ இன் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கான வழக்கமான பராமரிப்பு.	இபொபஆ இன் முறைமைகள் தொடர்ந்து வேலை செய்யும் நிலையில் இருத்தல்.	
கூட்டுத்தானத் தொடர்பாடல்				
குறிப்பு இலக்கம்	செயற்பாடு	செயற்பாடு பற்றிய விபரம்	அக்கறையுடைய தரப்புகளுக்கு கிடைக்கும் நன்மைகள்	நேரடி ஆகுசெலவு (இ.ரூ.)
AP/2022/CCO/CP/01	தலைமை விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சித் திட்டம்	2020 ஆம் ஆண்டில் இபொபஆ ஒழுங்குறுத்திய கைத்தொழில்களின் பல்வேறு அக்கறையுடைய தரப்புகளுக்கு அத்தகைய முடிவுகள் மற்றும் அந்தந்தத் தகவல்களின் இலக்குக் குழுவிற்கு ஒழுங்குறுத்துகை முடிவுகளை தொடர்புகொள்வதற்கான தேவை,	அக்கறையுடைய தரப்புகளின் அறிவு மேம்படுவதன் மூலம் மின்சாரத்தின் தரமும் மற்றும் மின்சார விநியோகத்தின் தரமும் உறுதிசெய்யப்படுதல்.	20,000,000

		சம்பந்தப்பட்ட அக்கறையுடைய தரப்புகளின் ஈடுபாடு. பார்வையாளர்களை அடையாளம் கண்டு, வரையறுத்தல், விழிப்புணர்வு பிரச்சார செய்திகளை உருவாக்குதல், தூதர்களை ஈடுபடுத்துதல் மற்றும் இபொபஆ இன் செயல்பாடுகள் குறித்து அதிக விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் சரியான விழிப்புணர்வு பிரச்சாரத்தின் மூலம் இபொபஆ இன் இலக்குகளை ஆராய்ந்து நிர்ணயிக்கும் பொருட்டு இந்த செயற்பாடு வடிவமைக்கப்பட்டுள்ளது.		
AP/2022/CCO/CP/02	உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தை பற்றிய விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சித் திட்டம்	உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தை, உராய்வுநீக்கி எண்ணெய் தயாரிப்புகள் ஆகியன பற்றி அக்கறையுடைய தரப்புகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவற்றின் குறிப்பிட்ட தேவைகளுக்கு சரியான தயாரிப்பை அடையாளம்காண அவசியமாகும் என்ற விடயம் கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த பகுதியில் விழிப்புணர்வு இல்லாததால் குறைந்த தகுதி வாய்ந்த உராய்வுநீக்கி எண்ணெய் தயாரிப்புகளுக்கான சந்தை உருவாகியுள்ளது. எனவே, இலங்கையில் தரமான உராய்வுநீக்கி எண்ணெய்கள் சந்தையை தாபிப்பதில் விழிப்புணர்வானது முக்கிய பங்கை வகிக்கின்றது.	தரம் குறைந்த உராய்வுநீக்கி எண்ணெய் உற்பத்திகளின் கொள்வனவு குறைந்து சந்தை தரம் மேம்படுதல்.	4,000,000

		தரமான உராய்வுநீக்கி எண்ணெய் பொருட்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் பெற்றோலிய நுகர்வோரின் உரிமைகள் என்பன பற்றிய விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.		
AP/2022/CCO/CP/03	2022 இன் செயற்பாடுகளின் அடிப்படையிலான விரிவான தகவல் தொடர்புத் திட்டம்	பொது பயன்பாட்டுக் கைத்தொழில்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தல், பதிதல், பரப்புதல் அவசியமாகும். இந்த செயல்பாட்டின் மூலம், 2022 ஆம் ஆண்டிற்கான இபொபஆ இன் செயற்பாடுகளுக்கான தகவல்தொடர்புத் திட்டம், பொதுமக்களுக்கும் மற்றும் பிற அக்கறையுடைய தரப்புகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தியமை கண்டறியப்பட்டது. ஆதலால் ஒழுங்குறுத்துகை முடிவுகள் மற்றும் ஒழுங்குறுத்துகை சாதனங்கள் என்பவற்றை செற்படுத்த உதவும் வகையில் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.	ஒழுங்குறுத்துகை சாதனங்கள் மற்றும் இபொபஆ இன் பணிகள் பற்றி அக்கறையுடைய தரப்புகளின் அறிவு மேம்படுதல் மற்றும் ஒழுங்குறுத்துகை நடவடிக்கைகளில் அக்கறையுடைய தரப்புகளின் பங்கேற்பு அதிகரித்தல்.	3,000,000
AP/2022/CCO/CP/04	பயிற்சியாளர்களின் பயிற்சி	பாடசாலை சமூகத்திற்கு தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் அதிகபட்ச அடைவு மட்டம் ஆகிய இலக்குகளை அடைவதற்கு வழக்கமான பயிற்சி அவசியம். தற்போது, சுமார் 75,000 சாரணர்கள் செயலில் உள்ளனர். அவர்கள் அவர்களது பாடசாலைகளில் தலைவர்களின் பங்கை செய்கின்றார்கள்.	இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக மின்சாரப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்கப்படுதல் மற்றும் மின்னியலாளர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் செயல்முறையும் ஊக்குவிக்கப்படுதல்.	4,000,000

		மின்சார பாதுகாப்பு குறித்த தொகுதியை அறிமுகப்படுத்துவதன் மூலம் சாரணர் சமூகம் மின்சார பாதுகாப்பு பற்றிய கல்வியை தொடர்ந்து கற்க முடியும். பின்னர் அவர்கள் மற்றைய மாணவர்களிடையே நடைமுறைகளைப் பரப்பி, பாடசாலைகளில் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தும் மாணவர் தூதுவர்களாக செயல்படுவார்கள். மேலும், இது இளைய சாரணர்களை பேட்ஜைப் பெற ஊக்குவிக்கும். மேலும், பாடசாலை ஆசிரியர்களுக்கும் மின்சார பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.		
AP/2022/CCO/RU/01	சட்டப்பூர்வ அறிவித்தல்களை வெளியிடுதல்	2022 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின்படி முடிவெடுப்பதிலும் முடிவை அறிவிப்பதிலும் அக்கறையுடைய தரப்புகளின் பங்களிப்பைப் பெற இபொபஆ அவ்வப்போது சட்டரீதியான அறிவித்தல்களை வெளியிடுகின்றது. இந்த செயற்பாடு அது தொடர்பான பணிகளை மேற்கொள்ள உதவும்.	அக்கறையுடைய தரப்புகளுக்கு தகவல்கள் பரப்பப்படுதல் மற்றும் ஒழுங்குறுத்துகை மற்றும் சட்டபூர்வமான தேவைகள் பூர்த்திசெய்யப்படுவதால் வெளிப்படைத்தன்மை மேம்படுதல்.	2,000,000
AP/2022/CCO/RU/02	வெகுஜன ஊடகம், நிறுவன அறிக்கைகள், ஊடக தொடர்புகள் மற்றும் கண்காணிப்பு - தமிழுக்கான உள்ளடக்க மேம்பாடு	மொழிக் கொள்கைக்கு ஏற்ப, தமிழ் பேசும் சமூகத்திற்குத் தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்வதற்கான ஒழுங்குறுத்துகை சாதனங்கள், கூட்டிணைந்த அறிக்கைகள், ஊடகங்களுக்கான தொடர்பு மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் என்பன தொடர்பான அனைத்து	அக்கறையுடைய தரப்புகளுக்கு தகவல்கள் பரப்பப்படுதல் மற்றும் ஒழுங்குறுத்துகை மற்றும் சட்டபூர்வமான தேவைகள் பூர்த்திசெய்யப்படுவதால் வெளிப்படைத்தன்மை மேம்படுதல்.	100,000

		ஆவணங்களும் தமிழில் மொழிபெயர்க்கப்படுதல் வேண்டும். இந்த செயற்பாடு அது தொடர்பான பணிகளை மேற்கொள்ள உதவும்.		
AP/2022/CCO/RU/03	வெகுஜன ஊடகங்கள், நிறுவன அறிக்கைகள், ஊடக தொடர்புகள் மற்றும் கண்காணிப்பு - சிங்களத்திற்கான உள்ளடக்க மேம்பாடு	அக்கறையுடைய தரப்புகளுக்கு சரியான தகவலைப் பரப்புவதில் உள்ளடக்க மேம்பாடு முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்த செயற்பாடு அது தொடர்பான பணிகளை மேற்கொள்ள உதவும். .	அக்கறையுடைய தரப்புகளுக்கு தகவல்கள் பரப்பப்படுதல் மற்றும் ஒழுங்குறுத்துகை மற்றும் சட்டபூர்வமான தேவைகள் பூர்த்திசெய்யப்படுவ தால் வெளிப்படைத்தன்மை மேம்படுதல்.	100,000
